மயனென்பவர் திருவாய்மலர்ந்தருளிய

சிற்பநூலென்னும்

# மனையடி சாஸ்திரம்

4323



சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1932. [அணா 8.

கடவுள் துணை.

சிற்பசாஸ்திரமென்னும்

# மனையடி சாஸ்திரம்.

4323

## கடவுள் வணக்கம்.

### விருத்தம்.

வேதநான் மறைகளாகி விளங்கும்மும்மூர்த்தியாகி
பூதலந்தனைப்படைத்த புண்ணியன்றனைப்போற்றி
தீதிலாமயனார்சொன்ன சிற்பசாஸ்திரமா நூலை
நீதியாய்த்தமிழினாலே நிலைபடவுரைக்கலுற்றான்.

இ-ள். இருக்கு யசுர் சாமம் அதர்வண மென்னும் நான்கு வேதங்களாகியும், பிர்மா விஷ்ணு ருத்திரனென்னு மும்மூர்த்திகளாகியும், ஆக்கல் அளித்தல் அழித்தலென்னு முத்தொழிலை நடாத்தும் பொருட்டு அண்ட சராசரங்களைப்படைத்த கடவுளினது திருவடிக்கமலத்தை துதிசெய்து பஞ்சமுகஸ்வரூபியாகிய பரமசிவத்தின் நெற்றிக்கண்ணினிடமாய்த் தோன்றிய ஆதி விஸ்வகர்மாவென்னும் மயனார் சொல்லிய மனை நூலைத் தமிழினாற் சொல்லலுற்றேன்.

## அவையடக்கம்.

பழத்தொடுநெய்பாற்கண்டு பகர்ந்ததோரடிசிற்றன்னை
கழிப்பரோநல்லோர்தாமும் கனமுளவறிவிலோர்கள்
பழிப்படுசாஸ்திரத்தின் வண்மைபுல்லறிவன்கூறப்
புழுதியுமுறினுங்கற்றோர் பாவிப்பார்நலமாய்த்தானே.

இ-ள். வாழைப்பழமும் நெய்யும் பாலும் கற்கண்டும் சர்க்
கரையும் கலந்த அன்னத்தில் கற்கிடந்தால் அந்தக் கற்களைமாத்
திரம் நீக்கி இன்பமாகக் கொள்ளுதல்போல புல்லறிவாளனாகிய
யான் சொல்லு மிந்நூலிற் பிழையுற்றிடினும் மேலோர் அக்குற்றங் 2
களைக் களைந்து சிரேஷ்டமாகக் கொள்ளுவார்-எ-று.

## நூல்.

### மனைக்கேகும்போது சகுனம்.

மனையதுகோலவென்று வந்தவனோடுசிற்பி
கனிவுடன்வழிச்செல்போது காணுமேற்காமரூபி
வனிதையர்தமைக்கண்டாக்கால் வந்ததுபாக்கியமென்றே
நனிவுடன்சிறத்தையாக நன்மையாய்நடக்கவென்றே.

இ-ள். மனைகோல வேண்டுமென்று யாதாமொருவர் வந்த
ழைக்க அவரோடு சிற்பியானவர் போம்போது காமரூபியாயிருக்
கும் ஸ்திரீகள் எதிர்ப்பட்டால் நல்ல யோகமென்றும் விபவிற்றுப் 3
போல் மனைக்கோல நன்மையுண்டாம்-எ-று.

### மனையில் நிற்கும்போது சகுனம்.

வலமுகச்சொலினும்பல்லி யல்லதுயிடத்திற்கூறப்
பலமிகவுடையதாகும் பாங்குடைக்கமுகநன்றாங்
குலமிகவளருநாளுங் கோற்குறுகாகன்மைந்தர்
பலமிகவுடையராவர் பல்லியினியல்புதானே.

இ-ள். சிற்பியும் அம்மனைக்கு யசமானனும் அம்மனையில் சென்று நின்றால் கௌளி முன்பு வலமாகச்சொல்லில் அழகியது பின்பு இடமாகச்சொல்லில் அம்மனைக்குரியவன் அரசர்களுக்குப் பிரியனாய் புத்திரகளத்துடன் சுகித்து வாழ்வான்-எ-று. 4

வெள்ளியபுராவினோடு விளங்கியபசுவுமற்றும்
வெள்ளியமாவினேறு முறவுடன்காணுமாகிற்
றெள்ளியகன்மகன்றாஞ் சீர்மலைகோலச்சீராய்
வள்ளியராகிவாழ்வார் மண்ணின்மேல்மனையுள்ளோரே.

இ-ள். வெள்ளைப் புறவும் வெள்ளைப் பசுவும் வெள்ளை ரிஷபமும் தாங்கள் மனையில் நின்றபோது காணில் உத்தமம்-எ-று. 5

எறும்புதானொழுங்குவிட்டே யேகிடிலியற்றவேண்டாம்
தரம்புதான்கரையானேந்தி கண்டிடிற்கருதவேண்டாஞ்
சுரும்புதான்கிண்டுயர்ந்து தோன்றிடிற்செய்யவேண்டும்
கரும்புபொன்மொழியினாளே காட்டுமிதிடரைத்தானே.

இ-ள். மேற்சொல்லிய இருவரும் மனையிற்சென்று நின்றபோது எறும்புகள் ஒழுங்குவிட்டு பலவாறாகச் சிதறினும் செல்லுகள் பரவியிருக்கினும் வண்டுகள் பூமியைத் துளைக்கினும் ஒணானெதிர்ப்படினும் மனைக்கேகலாகாது-எ-று. 6

பாங்குடைப்பாண்டையுந்தான் பண்ணொடுவலத்திற்பாடி
தாங்குடனிடத்திற்போகும் தனிக்குரல்வழியுமாகி
ஓங்கியமனையுநன்றா மொள்ளியபயனுண்டாகுந்
தீங்குதான்தருவதில்லை செப்பியவண்ணந்தானே.

இ-ள். மேற்சொல்லிய இருவரும் மனையில் நிற்கும்போது பராண்டை வலத்திற்பாடி வலத்திலிருந்து இடத்திற்போந்து வழியுமாகில் மனைக்கு யசமானனுக்குத் துன்பங்கள் நீங்கி நன்மையுண்டாம்.

தண்டொடுவலையநீமத் தபசியுமுடவன்செக்கான்
கொண்டமூக்கரையன்கூனன் குருடனுமெதிரேதோற்றக்
கண்டிடினசித்துப்போகுங் கருதிடவேண்டாமென்று
வண்ணமார்குழலின்மாதே வகுத்துரைசெய்வர்தாமே.

இ-ள். குடியன வலையன் சுடுகாட்டாண்டி முடவன் செக்கான் மூக்கரையன் கூனன் குருடன் இவர்களை எதிர்காணில் மனைகோல நசித்துப்போம்-எ-று. 8

மதுக்குடமுடனிறைச்சி மற்றும்பால்நெய்யுநீருங்
கதித்திடுதிகிலுங்கட்டுக் கழுத்துபூரணகும்பாஸ்தான்

மதித்திடுயானைதேரு மானுடன்புரவிதானும்
எதிர்க்கவேகாணினன்று மெய்த்திடுங்கருமந்தானே.

இ-ள். மதுக்குடம் மாமிசம் பால் நெய் தண்ணீர் நல்லபுடவை
மங்கில்யஸ்திரீ நிறைகுடம் யானை தேர் ஒற்றையாள் புரவி இவை 9
கள் எதிர்காணில் உத்தமம்-எ-று.

மனைவுயர்வுதாழ்வு லட்சணம்.

அருக்கனுஞ்சோமன்றனு மழகுடன்மிகவேதாழ்ந்து
திருக்கிளர்மேற்குந்தெற்குந் தெதிர்ந்துயர்பூமிமேலாம்
வருத்தமில்வாழ்வர்நாளு மனையினையெடுத்துக்கொள்ள
கருத்துயர்புலவரியாருங் காரணம்விளம்பலுற்றார்.

இ-ள். சூரியனென்பது கிழக்கு சந்திரனென்பது வடக்கு
இவ்விரண்டுதிக்குந் தாழ்ந்து தெற்கு மேற்கும் உயர்ந்திருக்கும் 10
பூமி சுகத்தைக் கொடுக்கும்-எ-று.

நான்குவருணத்தார் கிரகதிசை

வேறு.

அந்தணர்தென்றிசை யரயர்மேல்திசை
வந்திடுவணிகர்நல் வடக்குவான்றிசை
தொந்தமில்சூத்திரர் தோன்றுங்கீழ்த்திசை
பிந்தியநடுவது பிரமன்றனமே.

இ-ள். பிராமணருக்கு தெற்கு க்ஷத்திரியருக்கு மேற்கு வணி
கருக்கு வடக்கு சூத்திரருக்கு கிழக்கு குடியிருப்பாராகில் இலட்சு ()
மிகரம்பொருந்தி வாழ்வார்கள் நடு பிரமஸ்தானமாகக்கொள்க.

மனை லட்சணம்.

வேறு.

இனிதாகியமண்ணவை மாமறையோ
மனிதாகியகாற்பது மன்னவர்தாம்
தனதாகியதாம்புளி தான் * வசியற்
சொனதாகிய சூத்திரர்கைத்தமனே.

இ-ள். இனிப்பாகிய மண் மறையோர்க்காம் கார்ப்பாகிய மண்
அரசர்க்காம் புளிப்பாகிய மண் வைசியர்க்காம் கைப்பாகிய மண் 12
சூத்திரர்க்காம்-எ-று.

நான்குவகைவருணத்தார்க்கு வாசஞ்செய்ய சார்புமனைலட்சணம்.

திடமாகியதென்மனை மாமறையோர்
குடசார்பெனு மேன்மனைகோவரசர்
வடசார்பெனுமாமனை வைசியராந்
துடராகியகீழ்மனை சூத்திரர்க்கே.

* வசியரென்பது-வைசியரெனக்கொள்க.

லக்கினமிராசி நன்வலசுகமுண்டாகும்
மிக்கவேயிடமோராசி னிடனனகளத்திரர்க்காம்
பொக்குமாமதிபருக்கன் கோன்பாபிதிருஷ்டிக்குள்ளாய்
நிற்கவேகிரகசாரம நிகழ்த்திடுமுயிராதாமே.

மனைகோல அவரவர்கள் ராசிப்பொருத்தம்.

நன்மனையொடுபோக்கெல்லா நாளுடன்ராசிதன்னை
முன்வலங்கொள்வாராயின் முயற்சியாங்கருமநன்றாம்
புன்னெடுங்காலம்வாழ்வாம் பயின்றநன்மனைகட்பேராம்
புன்னிடங்கொள்வாராகிற் பிணியொடுசேர்தலாமே.

இ-ள். மனைக்கு வாசற்பொருத்தம் அவரவர் பேர்வழி பிறந்த ராசி முன்னும் வலமுமாக விருக்கக்கொள்வது நன்றும் பின்னும் இடமாகவிருக்கக் கொள்ளில் தீதாம்-எ-று. 17

மனைகோல ஆகாநாள் வேறு.

நன்னாளினுமனைகோலினு நலனார்தமிராசி
முன்னாததிவவமாகுதன முடமிரித்திருவுள்ளம்
பின்னாகுவலிடவாகுபல் பேணிமனைகோலில்
பொன்னாகுவபொருளாகுவ னுயிராகுதல்போமே.

மனைகோலுமாதங்கள் வேறு.

சித்திரைவைகாசியாடி சிறந்தவாவணியாமிக்க
கைத்தடவைப்பசியினோடு மன்னுகார்த்திகையதாகும்
மற்றகவிலாகவை மாசியோடெட்டுமாதம்
புத்தியான்மனைகள்கோல புகழிடநன்மைதாமே.

இ-ள். சித்திரை வைகாசி ஆடி ஆவணி ஐப்பசி கார்த்திகை தை மாசி இந்த எட்டுமாதமும் மனைகோல நன்றாம்-எ-று. 18

மனைகோலவும் குடிபுகவும் ஆகாமாதங்கள் வேறு.

கூனியானிபுரட்டாசிமார்கழி
யூனமானவைநான்குமாதமும்
மானியாமனமனைகுடிதான்புகி
வீனமாகியிடற்செய்யுநோய்களே.

இ-ள். பங்குனி ஆனி புரட்டாசி மார்கழி இந்நாலுமாசமும் மனைகோலவும் குடிபுகவும் ஆகாது இதற்கு விரோதமாகவும் குடி புகினும் அல்லது மனைகோலினும் பிணியுண்டாம்-எ-று. 19

முகடுவைக்கைகேறு.

இலிங்ககாபரங்கள்போலே விசைந்தமூன்றுவரையுங்கூறி
விளங்கநால்வரையுங்கிறு மேலதுமுகட்டுகாளாக்
குலுங்கமாவிறக்குநாளிற் கோபுரமாடகூட
துலக்குநன்மனைகள்கோலத் தூக்கலாயிடிந்துபோமே.

இ-ள். இலிங்கம்போல் நீண்டவளையமாய் மூன்றுவரைகீறி குறுக்கே நான்குவரைகீறி இருபத்தேழு தானங்காணும் அடிவரை

யில் முதல்தானத்தில் துவக்கி அசுவனிமுதலாக எண்ணிவர அசுவனிமுதல் நான்கும் இதற்குநாள் மகம் முதல்நான்கும் ஏறுநாள் சித்திரை முகட்டுநாள் சோதிமுதல் நான்கும இறங்குநாள் மூலமுதல் நான்கு ஏறுநாள் அவ்விடமுகட்டுநாள் சதயமுதல் நான்கும் இறங்குநாள் என்றறிக ஏறுநாளில் மனைவாட கூடகோபுரங் கட்டலாம் முகட்டுநாளில் முகடுவைக்கலா முறங்குநாளில் செய்யலாகாது செய்யில் இடிந்து பாழாய்ப்போம்-எ-று. 20

பிறந்தநாளும் வாரமுங்கூடிய ஆகாநாள் வேறு.

செங்கதிரோன்வாரநாட் பரணிகூடில்
  செழுமதியிற்சித்திரைசே ருத்திராடம்
பொங்குபுதனவிட்டம்பொன் வாரங்கேட்டை
  புகர்பூராடம்கா ரிரேவதியினாளில்
மங்கையரைமீனம்புணரில் விதவையாகு
  மனையொடுசிற்பவழியில் போகிற்சாவாஞ்
செங்கற்கண்ணாற்பூதிதான் மலடியாவார்
  சிறுகுழவிபெறின்மறிக்குந் திண்ணந்தானே.

இ-ள். ஞாயிறு பரணியும் திங்கள் சித்திரையும் செவ்வாய் உத்திராடமும் புதன் அவிட்டமும் வியாழங் கேட்டையும் வெள்ளி பூராடமும் சனி ரேவதியுங் கூடினாலாகாது இக்நாட்களில் விவாகஞ் செய்யில் கைம்பெண்ணாம் மனைகோலின் பாழாம் வழிபோகில் மரணமாம் ருதுவானால் மலடியாம் பிள்ளைபிறக்கில் சாவாம்-எ-று. 21

தினப்பொருத்தம் முகம் வேறு.

பிறந்தநாளிரண்டுநான்கு மொன்பதுமெட்டுமாறுன்
சிறந்தசீருளவைமற்றிங் கேடல்சம்பத்துண்டாகும்
அறிந்தநூல்மற்றுமென்றோ ரைந்துமூன்றேழுநீங்கிச்
சிறந்திடமொழிந்தாரெல்லாந் திண்ணமாய்ப்போகுந்தானே.

இ-ள். சென்மநாளுக்கு 2 4 6 8 9 இந்நாள்கள் நன்றாம் 3 5 7 இன்னாள் பொருந்தாது மற்றவை பொருந்துமென்ன இப்படி ஒன்றைத்தான் பத்தாக 27 நாளையும் பிரித்துக்கொள்வது-எ-று.

வட்டமுங்கொடியவார மந்தாரமழையினோடு
கொட்டிடுங்கிரணம்பற்றல் சூழ்ந்திடுபொல்லாநாட்கள்
விட்டியல்வெள்ளிபாடும் விடமுறுகடிகைத்தானும்
அட்டமியாமிருத்தை யாகாதுநீக்கிக்கூட்டே.

இ-ள். சந்திரனையும் சூரியனையும் பரிவேடமிட்டிருந்து கொடிய வாரம் மந்தாரம் மழைதூரல் கிரணந்தீண்டல் பொல்லாத நட்சத்திரங்கள் விட்டி கானல் வெள்ளிப்பாடு விஷகடிகை அஷ்டமி உள் இருத்தை இவையாகாதென்று நீக்கி நல்ல நாட்களில் முகூர்த்தங் கொள்ளல் நன்று-எ-று. 23

தலையற்றநாள் அசையற்றநாள் காலற்றநாள் வேறு.

காலற்றனவுடலற்றன தலையற்றனநாளில்
மேலுக்கொருமணிமாளிகை கோவிலதுபாழா
மேலக்கருங்குழலாரிதில் ருதுவாகினுமலடாம்
ஞாலத்தவர்வருபோயினு நலமெய்திடாரவமே.

இ-ள். காலற்றநாள் கார்த்திகை உத்திரம் உத்திராடம் உடலற்றநாள் மிருகசிரம் சித்திரை அவிட்டம் 3 தலையற்றநாள் புனர்பூசம் விசாகம் பூரட்டாதி 3 இவ்வொன்பது நாட்களில் மனை கோவில் பாழாம் பெண்திரளில் மலடியாவாள் யாத்திரைசெய்யில் துன்பப்படுவார்-எ-று. 24

சுக்கிரன்பாடு வேறு.

சுக்கிரனெதிரேயாகிற் றொல்குடிசாவுகேடாஞ்
சுக்கிரன்வலக்கண்ணாகிற் றேன்றியபொருளேசேதஞ்
சுக்கிரன்பின்னேயாகிற் சுகமுடன்வாழ்வதாகுஞ்
சுக்கிரனிடக்கண்ணாகிற் றுக்கமொன்றில்லையென்னே.

இ-ள். வெள்ளியெதிரும் வலக்கண்ணும் மூடமும் ஆகாது மனைகோலினும் குடிபுகினும் தீதாம் வெள்ளி பின்னும் இடக்கண்ணுமாகில் மிகவும் உத்தமம்-எ-று. 25

யோகபூர்வப்ரதமை முதலட்டமி
யென்பதாகாசம் பூரதசமியா
மாருப்பன்னொன்று பஞ்சமியந்தமு
மங்கெறிசஷ்டி முன்னுவாவீறா
மேருமிப்படி முப்பதுபக்கமு
மிடமுமனந்தமாம் பூமிதென்கீழ்த்திசை
போகில்யாத்திரை நன்மைகக்கிவைகேளும்
நோக்கும்பூமிசுக் கிரன்மற்றுநல்லதே.

இ-ள். கிழக்குமுதல் வலவாக எட்டுத்திக்கினும் பூர்வபட்ச பிரதமை முதலாக அட்டமிபளவும் திக்கு 8 க்கு நிற்கும் நவமி ஆகாசத்திலும் தசமி பூமியிலும நிற்கும் முற்பக்க ஏகாதசிமுதல் அமாபட்சத்துக்கு பஞ்சமி யிறுதியாக முன்போல நிற்கும் அமாபட்சத்து சஷ்டி முதலாக அமாவாசை யிறுதியாக முன்போலவே நிற்கும் இப்படி முப்பது பக்கத்தையும் நிறுத்தி இதில் தென்கீழ்த்திசை நிற்கும் திதியும் ஆகாசம் பூமியில் நிற்கும் திதியும் யாத்திரை முதலியவற்றிற்கும் விலக்கப்பட்டன அல்லாத பக்கங்களும் வலமும் பின்னும் பூமி சுக்கிரனும் மிகவும் நன்மையாம்-எ-று. 26

மேற்கோள் யோகினிக்கும் வேறு.

இந்திரன்கனகனக்கினிநிருதி யேமநீர்வாயுவீசானன்
முந்துமாகாசம்புவியுடன்பத்து முற்பிரதமைமுதலாக

வந்தபினிந்தமுறைப்படியம்மா வாசியீருந்திதிசுன்னி
னுற்றிமயோகினியெ திரிடப்புவியி லுளுப்பன்றபுறம்வல்லமான்றே

இ-ள். பூர்வபட்ச பிரதமைமுதல் பிரதமை கிழக்குதிசை வடக்கு திரிதியை அக்கினி சதுர்த்தி நிருதி பஞ்சமி தெற்கு சஷ்டி மேற்கு சத்தமி வாயுவு அஷ்டமி ஈசானமாகிய அக்கினி மூலையில் நவமி ஆகாசம் தசமி பாதாளம் பின்னும் ஏகாதசி கிழக்கு துவாதசி வடக்கு திரயோதசி அக்கினி சதுர்த்தசி நிருதி பௌர்ணமி தெற்கு பின்னும் அமரபட்சப் பிரதமை மேற்கு துதியை வாய்வு திரிதியை ஈசான்யம் சதுர்த்தி ஆகாசம் பஞ்சமி பாதாளம் பின்னும் சஷ்டி கிழக்கு தசமி வடக்கு அஷ்டமி அக்கினி நவமி நிருதி தசமி தெற்கு ஏகாதசி மேற்கு துவாதசி வாய் திரயோதசி ஈசான்யம் சதுர்த்தி ஆகாசம் அமாவாசை பாதாளம் நிற்கும் இந்த யோகினி முன்னும் இடமும் யாத்திரை முதலான எவற்றிற்கும் தீயது பின்னும் வளமும் நல்லது.

சுபகாரியங்கள் செய்யவேண்டியதற்கு மூன்றுவிதமாக
சில நட்சத்திரங்களறிய.

முதலாவது ரோகணி ஆதிரை பூசம் உத்திரம் ஓணம் அவிட்டம் சதயம் இவை 9-ம் ஊர்த்துவமும் இதில் ஸ்தம்பப்பிரதிஷ்டை பட்டாபிஷேகம் உத்தியோகத்திற் பிரவேசித்தல் இராசதரிசனம் வியாபாரம் வீடு ஆபரணம் மெத்தைமேல் மெத்தை வாசற்கால் தூண் துவசம் தோப்பு சாலை மர முதலியது வைக்கவும் மற்றுமிவை முதலாகிய சுபகாரியங்கள் செய்யவும் அபிவிருத்தியாய் வருமென் றறியவேண்டியது.

இரண்டாவது அசுவனி மிருகசிரம் புனர்பூசம் அஸ்தம் சித்திரை சுவாதி அனுஷம் கேட்டை ரேவதி இவை 9-ம் திரிமுகம்.

இவைகளில் சுவர்வைக்கப் பயிரிட நிலம்வாங்க எருது எருமை குதிரை யானை வண்டி முதலானவை வாஙகவும் பொன்னேர்கட்டி வுழவும விரைவிரைக்கவும் பசு முதலானதுகளுக்கு கொட்டாரங் கட்டவும் யாத்திரைபோகவும் ஏரி வாய்க்கால் வெட்டவும் நிலத்துக்கு வரப்புகட்டவும் இவை முதலிய சுபகாரியங்களைச்செய்ய உத்தமம்.

மூன்றாவது பரணி கார்த்திகை ஆயிலியம் மகம் பூரம் விசாகம் மூலம் பூராடம் பூரட்டாதி இவை 9-ம் அதோமுகம்.

இவைகளில் நிட்சேபம் வைக்கவும் வித்தியாரம்பஞ்செய்யவும் கிணறு குளம் அகழி எடுக்கவும் களஞ்சியங் கட்டவும் புதையல் வைக்கவும் கிழங்கு முதலானவை நடவும் சங்குஸ்தாபனம் பண்ணவும் இவை யுத்தமம்.

இவைகளில் முதற்சாமம் உத்தமம் 2-ம் சாமம் சந்தோஷம் 3-ம் சாமம் அதமம் 4-ம் சாமம் அந்திகாலமும் இராக்காலமுங் கூடாது.

கிரகாரம்பஞ்செய்ய முக்கியமான முகூர்த்த நட்சத்திரங்கள்
இது கிரந்தங்களிலிருந் தெழுதப்பட்டது.

மிருகசிரம் அஸ்தம் பூசம் சித்திரை அனுஷம் உத்திரம் 3-ம் திருவோணம் அவிட்டம் சதயம் ஆக 11-ம் உத்தமம்.

பொல்லாதநாட்கள்வாரம் பொருந்தாதராசிமாதஞ்
செல்லாதவெள்ளிபாடு தியாச்சியராகுகாலம்
எல்லாருநன்மைவஸ்து வெழுந்திருக்கின் றபோதும்
வல்லாண்மையுடையோரெல்லா மனைகோலலாகாதென்றே.

நடையினில்முக்கால்நாழி நலமுடன்பொசிப்புமுக்கால்
குடையினில்முக்கால்நாழி கூறியமவர்க்கண்முக்கால்
பயமிசையெழுந்திருந்து பார்தனைவிளக்குமுக்கால்
அடவுடன்வாஸ்துவுக்கு அகஸ்தியருரைத்தவாறே.

வாஸ்து புருஷன் கிடக்கை.

திங்களிலிராசிநிற்குந் திசைதனில்காலைநாட்டி
இங்கெதிற்கலையைவைத்தே யிடதுகைகீழதாகப்
பொங்கியவலக்கைமேலாம் பூதலம்விளங்கவென்று
மங்கையேசொல்லக்கேளாய் வாஸ்துவின்கிடக்கைதானே.

இ-ள். வாஸ்து புருஷன் அந்தந்தமாதத்துராசியில் காலை
நீட்டி அதற்கெதிராகிய ஏழாமிராசியில் தலையைவைத்து இடக்கை
கீழும் வலக்கை மேலுமாய்க் கிடப்பான்-எ-று. 28

மேற்கோள்.

எத்திசையயனுமானு மிரவிதானிற்கும்போது
மத்திசைகாலைநீட்டி யதற்கேழில்தலையைவைத்து
மெத்தெனவிடக்கைகீழாய் வலக்கைதான்மேலதாக
வைத்திடுங்கண்ணினாளே வாஸ்துவுங்கிடப்பன்றானே.

வாசல்.

காலதேவாசலாகித் தனக்குழல்சாவுசொல்லுஞ்
சாலவேதலையதாகிற் றானவன்சாவுசொல்லுங்
கோவியமுதுகேயாகிற் கோவினாலச்சமுண்டாம்
வாலியவயிற்றில்விட்டால் வான்பொருள்சேருமென்றே.

இ-ள். வாஸ்து புருஷன் திகைக்கையில் காலில் வாசல்விட்
டால் மனையாளுக்குப் பொல்லாங்கு தலையில் வாசல்விட்டால் கணவ
னுக்காகாது முதுகில் வாசல்விட்டால் இராஜபயமுண்டாம் வயிற் 29
றில் வாசல்விட்டால் வாழ்வுண்டாம்-எ-று.

வாஸ்து எழுந்திருக்கு நாளறிய மனைகோல குடிபுக வேறு.

எற்றுஞ்சித்திரையோர்பத்தி லிருபத்தொன்றில்வைகாசி
பார்த்தவைப்பசியோராடி பதினொருவாவணியோராறில்
கார்த்திகையெட்டுதை யீருறில்மாசியிருபதினில்
வாஸ்துவுந்தானெழுந்திருப்பான் மனைதான்வாசல்கொள்ளலாம்.

இ-ள். சித்திரைமீ 1௳ வைகாசிமீ 21௳ ஐப்பசிமீ 10௳ ஆவணிமீ 6௳ கார்த்திகைமீ 8௳ தைமீ 12௳ மாசிமீ 20௳ இந்த தேதிகளில் வாஸ்து புருஷன் எழுந்திருப்பான் இந்த நாளில் மனைகோலில் அவரவருக்குப் பொருந்திய திக்கில் வாசலில் விடமாகும்-எ-று. 30

மேற்கோள் உள்ளமுடையான்.

கிடந்தான்மேடமொருபத்துங் கிளரும்விடையின்மூவேழும்
அடங்கோர்கடகம்பதினொன்றி யோராயிற்றேறெட்டிற்
குடந்தனிருபத்தாமகனற் கூறுமக்காம்பனிரண்டில்
இடந்தானெடுக்காலமென்று யெல்லாதிசைநல்லோரே.

வாஸ்து புருஷன் எழுந்திருக்குஞ் சாமம்.
தேதி நாழிகை போசனம்.

குண்டமான்குடங்களொட்டங் கொடியதேள்பத்தாகும்
கண்டுகோல்ரண்டதாகு நன்மேடவைந்தாகுந்
திண்டிறற்சிங்கந்தானே சிறந்தமூவேழதாகும்
கண்டிறன்மறையோர்சொன்னல் வாஸ்துவுமுகிக்கும்பாரே.

இ-ள். சித்திரை 12-நாழிகை-5, வைகாசி 21-நாழிகை-8, ஆடி ஐப்பசி 11-நாழிகை 2-ஆவணி 6-நாழிகை 21-கார்த்திகை 8-நாழிகை 10-தை 12-தேதி நாழிகை 8-மாசிமாதம் 20-நாழிகை-8 இந் நாழிகைக்குமேல் வாஸ்து புருஷன் எழுந்திருந்து மூனே முக்கால் நாழிகை யிருப்பான் அதுமுதல் முக்கால்நாழிகை ஸ்நானம் 2-வது முக்கால்நாழிகை பூசை 3-வது முக்கால்நாழிகை போசனம் 4-வது முக்கால் நாழிகை தாம்பூலம் 5-வது முக்கால் நாழிகை இராச்சிய பாரம் இந்தப்படி சென்றபின் படுத்துக்கொள்வான்-எ-று. 31

கூர்த்தநாண்முகூர்த்தந்தனைக் குறைவரப்பார்த்துக்கொண்டு
வாஸ்துவின்கிடையறிந்து மனைதனைக்கோலானுகில்
சேர்தனபொருளுங்கேடாம் செய்தவமனைத்தும்பாழாம்
மூர்த்தமாய்நாசஞ்செய்து முனியையுந்தொடருமன்றே.

இ-ள். நாள் முகூர்த்தம் வாஸ்துவின் கிடக்கையு மறிந்து மனைகோலானுற் பொருளுஞ் சேதமாம் செய்தவையும் பாழாம் மனைகோலின் சிற்பனையும் நோய்தொடருமென்றவாறு. 22

மேற்கோள்.

வாஸ்துவின்கிடைக்கைமாதம் வாழ்மனைகோலிற்பாழா
மாற்றுநீர்படுக்கைதன்னில் மதியிலார்மனையொடுக்கில்
நேற்றியான்தலைவன்செய்து நிலைகேடாங்குலைத்துபோவார்
தூற்றியாங்கெழுந்தபோதே துதித்துநீமனைகோல்மன்னு.

நல்லநாளும முகூர்த்தமுங்கொண்டு மனைநடுவில்
கெல்லிப்பார்க்கு மிலக்கணமும.

நலலதோர்நாளும்பக்க முகூர்த்தமும்பொருந்தக்கொண்டு
மெல்லியேபார்க்குபோது சரியெழநோயதாகும்

புல்லியவுமியேகாணிற் பொருண்மிகக்கேடுசொல்லும்
வல்லியவிறகுகாணி லவன்குலங்கெடதாமே.

இ-ள். நல்லநாளும் பட்சமும் பொருத்த முகூர்த்தங்கொண்டு மனையில் கெல்லிப் பார்க்கும்போது கரியெழும்பில் நோயாகும் உமி காணில் பொருட் கேடுவரும் விறகு காணில் மனைக்குரியவள் குலம் நசித்துப்போம்-எ-று. 33

திண்டிறலெரும்புந்தேளுஞ் சிதலொடுகட்டைபொல்லா
வண்டமுமுகிடும்தேசம் வந்திடின்முற்றும்பொல்லா
மெண்டலைவெலும்புகாணில் வெருமையுங்கேடுமென்று
தண்டமிழ்நூல்கள்வல்லோர் சாற்றினர்தன்மையாலே.

இ-ள். எறும்பு தேள் கரையான் கட்டை முட்டைத் தலை மயிர் வண்டலை எலும்பு இவைகளில் ஒன்று காணினும் பொல்லாங்குநேரிடும்-எ-று. 34

மேற்கோள்.

மண்டுகமரணைப்பல்லி வனம்புகுசிலந்திவட்ட
நண்டிவைதோன்றுமாகி நன்மனைக்கழகதாகும்
கொண்டதிலுடும்புபாம்பு குறுகுதேளாமைஆரான்
வண்டிவைதோற்றமாகி லனற்பட்டேயழிந்துபோமே.

இ-ள். தவளை அரணை பல்லி சிலந்தி நண்டு இவைதோற்றில் உத்தமம், உடும்பு பாம்பு தேன்கூடு தேள் ஆமை பூரான் இவைகள் தோற்றில் அந்தமனை அக்கினியா லழிந்துபோம்-எ-று. 35

ஈண்டியதனத்தைக்காணி லின்பமேவருவதாகுங்
காண்டகுதனங்கள்சேருங் கல்லுருதவளைகாணில்
பாண்டியன்பசுவின்கொம்பு பலதானியங்கள்செங்கல்
வேண்டியலோகங்காணில் மிகுந்திடுஞ்செல்வந்தானே.

இ-ள். தனப்புதையல் காணில் இன்பமுண்டாம் தவளை காணில் உடமையுண்டாம் பசுவின்கொம்பு பலதானியங்கள் செங் கல் பஞ்சலோகம் ஒன்றுகாணில் மிகுந்த செல்வமுண்டாம்-எ-று.

பொன்னுடவெள்ளிசெம்பு பொருந்திடநன்மையாகும்
பின்னுமோரிரும்போடீயம் பித்தளைமத்திபந்தான்
கன்னல்சேர்மொழியினளே கருங்கல்லோடெலும்புகாணின்
மன்னியமனையாள்சாவள் மாளுவன்கணவன்றானே.

இ-ள். பொன் வெள்ளி செம்பு இவைகளி லொன்றுகாணி லுத்தமம் இரும்பு ஈயம பித்தளை இவைகளிலொன்று காணில் மத்திபம் கருங்கல் எலும்பு இவை காணில் மனைக்குரியவன் மனைவி யிறப்பதுமன்றி அவனும் வியாதியால் மெலிந்திருப்பான்-எ-று. ()

குழியில் நீறும் பூவும்விட்டு பலாபலனறியும் விதி.

வாழ்மனைநடுவேநான்கு வடிவுடனொருமுழத்தில்
ஆழமுமகலங்கெல்லி தண்ணீர்பூவுமவிட்டால்

வாழ்கதிரோனைநோக்கி வலம்புரியோடில்வாழ்வாம்
சூழ்புவியிடமாய்ச்சுற்றிற் றொல்லைநோயாகுமன்றே.

இ-ள். மனைக்கு நடுவே சதுரமாக ஒருமுழ அகலமும் ஒரு முழ நீளமும ஒரு முழமாகக்கெல்லி அக்குழியில் தண்ணீரும் பூவும்விட்டால் பூவும்நீரும் வலமாகச் சுற்றிவரில் நன்மை இடமாகச் சுற்றிவரில் துன்பம்-எ-று. 38

மேற்சொல்லியகுழியில் சாயரட்சை நிறைய
நீர்விட்டுப்பார்த்தால்.

நிறையநீரிட்டுவைத்து நீள்கதிரெழுந்தபோது
முறைமையாய்வந்துபார்த்தாற் முப்பிடிநீரொன்றாக
தரையினில்வற்றியக்கார் ருழ்வறப்பிளக்குமாகில்
திரைபொடுநோயாமென்று தெரிந்தவருரைத்தவாரே.

இ-ள். மேற்படிகுழியி லந்திப்பொழுதில் நிறைய நீர்விட்டு வைத்து சூரியவுதயத்திற்கு வந்து பார்த்தால் மூன்றுபிடி நீரிருக்கில் மிகவும் நன்றும் நீரெல்லாம் வற்றிப்போனால் பொல்லாங்குண்டாம் நீர் வற்ற பூமி பிளந்திருக்கில் சிதையோடு நோய்முதலாகிய துன்பமுண்டாம்-எ-று. 39

மேற்படி குழியில் எடுத்தமண்ணை யடுத்தல்.

அளந்ததோர்குழியின்மண்ணை யகழ்ந்தகமேலேயிட்டால்
வளந்திடிற்செல்வமுண்டா மொந்திடின்மிகுதியில்லை
குளந்தனிற்குறையுமாகில் குறைந்திடுஞ்சம்பத்தென்றே
யுளந்தனிற்கருதிநல்லோ ருரைத்தனர்புவியின்மீதே.

இ-ள். முன்கெல்லின் குழியிலெடுத்த மண்ணைக்கொட்டினால் மண் மிஞ்சியிருக்கில் லாபமுண்டாம் ஒத்திருக்கில் வரவும் முதலும் சமமாம் குறைந்திடில் செல்வங்குறைந்து செலவுமிகும்-எ-று. 40

மனைகோலும்போது கடைக்கால் சங்குஸ்தாபனம்.

வ-ம். பரவாஸ்து புருஷனை ஒன்பதாகப் பகுந்து சிரசிலிருந்து நாலுபங்கு தள்ளி ஐந்தாம்பங்கை மூன்றுகூறுக்கி சுரபக்கம் இரண்டு கூறுதள்ளி மூன்றும்பங்கை கடைகாலாவது சங்குஸ்தாபனமாவது செய்யும் உத்தமம் மேற்படி அரவாஸ்து எப்போது மசையாமல் படுத்திருப்பான். 41

கடைக்கால் சங்குஸ்தாபனமாவது.

வாஸ்து ஒருமனையின் ஈசான்ய மூலையில் சிரசும் நிருதி மூலையில் காலுமாக இடக்கையை கீழேவைத்துப் படுத்திருப்பன் சிரசிலிருந்து கால்பங்கு தள்ளி 5-பங்கை மூன்று பங்காகசெய்து இரண்டுதள்ளி மற்றபங்கில் கடைக்கால் போடவும் சங்குஸ்தாபனம் பண்ணவும் சுபம்-எ-று. 42

சிற்பாசாரியனிலக்கணம்.

பன்னியபொற்பூநூலும் பௌத்திரங்கையிலிட்டு
சென்னியிற்சிகையதாகிச் செய்யதோர்நிறத்தனாகி

மன்னியகுலமுமிக்க மனமிகத்துய்யனாகி
வன்னியசாதிகூடா தறிந்தவச்சிற்பிதானே.

இ-ள். பொற்பூவணிந்து விரல்தனில் மோதிரமும் பின்குடு மையு முடையவனாய் சிவந்த மேனியனாகிய வமிசமும் நயனகுண மும் துய்ய மனமுடையவனாய் அன்னிய சாதியரைச் சேராமல் அறிவுள்ளவன் சிற்பாசாரியாம்-எ-று. 43

இதுவுமது.

சுத்தமாய்வேதமோதித் துய்யதோராடைபூண்டு
சித்தமும்வாக்குமொன்றாய்ச் சேர்த்துசோடங்கடிந்து
நித்தமுமனுஷ்டானங்க ளிரைவுடன்பூசைபண்ணி
வித்தகநூலைக்காலை விளம்பிடிலியற்கையாமே.

இ-ள். சிற்பாசாரி சுத்தமாயிருந்து வேதமோதி பரிசுத்த வஸ்திரம் அல்லது கார்மடியுடுத்தி தெளியுஞ் சிறப்புடையவனாய் மன மும் வாக்கும் ஒருமைப்பட்டு கோபத்தை நீக்கி நித்தியானுஷ் டானமும் தெய்வபூசையுந் தப்பாமல் முடித்து சிற்பநூலை காலை யில் ஓதவேண்டும்-எ-று. 44

முழக்கோலளவு.

துன்னியவணுவும்பல்லு நுண்மணவெள்ளுநெல்லு
பன்னியதுவரைபெற்றுற் பரவியவிரலதாகும்
எண்ணியவாறினாலே யிசைந்தக்கால்முழமதாகு
நண்ணியகாலினாலே நாலினன் முழக்கோல்கொள்ளே.

இ-ள். முழக்கோலாவது அணுவு அணுவு 8 கொண்டது பன் னுனி 8 கொண்டது நுண்மணல் நுண்மணல் 8 கொண்டது எள்ளு, எள்ளு 8 கொண்டது நெல்லு, நெல்லு 8 கொண்டது துவரை, துவரை 8 கொண்டது விரல், விரல் 6 கொண்டது கால்முழம், கால்முழம் 4 கொண்டது ஒருமுழம்-எ-று. 45

வேறு.

துலங்குவிரல்கிடருமுழஞ் சூத்திரர்க்காகும்
வளம்பிரஜாபத்யமும் வணிகர்தமககாகும்
அளந்தகனுமுட்டிவிர லரசர்களுக்காகும்
விளம்பியதனுக்கிரகம் வேதியருக்காமே.

இ-ள். கிடகுவென்னு மிருபத்துநாலு விரல்கொண்டது வே ளாளருக்கு முழமென்று சொல்லப்படும் பிரஜாபத்தியமென்னும் 25 விரல்கொண்டது வைசியருக்கு முழமென்று சொல்லப்படும் தனுமுட்டி 29 விரல்கொண்டது அரசர்களுக்கு முழமென்று சொல்லப்படும் தனுக்கிரகமென்பது 27 விரல்கொண்டது பிராமண ருக்கு முழமென்று சொல்லப்படும்-எ-று. 46

சொன்னதோற்றுவரையெட்டு விரலெனவரிந்துகொள்ளாய்
தன்னியவிரல்களாறு கொண்டதுசாணதாகும்
மன்னியசாணேகண்டு கொண்டதுமுழமதாகும்
அன்னியமில்லாமண்ண லாய்ந்துகொளிதுபோற்றுனே.

இ-ள். துவரை 8 கொண்டது விரல், விரல் 9 கொண்டது சாண், சாண் 2 கொண்டது முழம் இதுபோற் பகுந்துகொள்ளவும்-எ-று. 47

### கோயில்கோபுர மனைஅளவு முழக்கோல்.

தாபரமுதலாயுள்ள சிமயமுமலையுமிக்க
கோபுரங்கூடஞ்சாலை மாளிகையளிக்கச்சொன்னோம்
தாபரஞ்சிமயமெல்லாங் கிடகுவின்விரல்களாலே
கோபுரங்கூடமெல்லாங் கிடகுவின்விரல்களாலே.

இ-ள். தாபரம் சிமயம் மனை சாலை மாளிகை இவைகளை கிடகுவின் விரலாலளப்பது கோபுரம் கூடம் இவைகளை

மெட்டுவிரலொருதலை மதிப்படிகொள்மூலை
பட்டுவளைசதுரமெனப் பார்த்துவரவில்லையே.

இ-ள். மூலைமட்டக்கோலளவு சொல்லுமிடத்து ஒருதலை பத்து விரல் நீளம் ஒருதலை அரவிரல் நீளம் நடுமூலைபட்டு வளைத்து சதுரமாக்கி விரலளவு பார்த்து வரைந்துகொள்-எ-று. 51

மேற்படி அளவு நூற்கயிறு.

தாலவுரிகேதகை சணத்தொடுமருப்பின்
நாலிவைமேலுறிகல் லாத்தியறிநூலால்
வாலியகற்றினை வலம்பயமுறுக்கி
யேலவரலின்னுனியாதர மொழிபின்னே.

இ-ள். பனை தாழை சணல் மருள் ஆல் ஆத்தி இலத்தி இவைகள் நாரினோடு பருத்திநூல் கூட்டுவிரல் நுனிப்பிரமாணத்தில் கயறு முறுக்கிக்கொள்ளவும்-எ-று. 52

முப்புரியதாயொரு கயிற்றினைமுறுக்கில்
விப்பிரர்கள்விண்ணவர்கள் மன்னவருக்காகும்
வைப்பிரியயிருப்புரிகள் வணிகமுழவர்க்கே
யெப்புறுசிதொள்கவினி யோயியுரைக்கின்றேன்.

இ-ள். முப்புரிக்கயிறு தேவர்களுக்கும் மறையோர்க்கும் மன்னவருக்குமாகும் இருப்புக்கயிறு வணிகருக்கும் வேளாளருக்கும் என்றவாறு. 53

சங்குஸ்தானம் வேறு.

சங்கிலிநீளமுன்னுன் சாற்றியவிரலினுலே
தங்கியமுன்னுள்காக்க கொண்டருபருமனுகு
மங்கதனுளின்மூன்றி மற்றலைசுற்றலாமே
வந்ததுதாகமோகங் கொண்டதோயூசிதானே.

இ-ள். சங்கிலிநீளம் பனிரண்டு விரல் பருமனும் இது என்றுமுகமால் தலையில் சுற்றும் இதில் மேலூசியில் நீளம் ஒரு விரல் கொள்வது என்றவாறு. 54

வேறு.

வானுடையதேவர்முதல் மானிடற்குமாகுக்
தானுடையசங்குமரந் தக்காதைசொல்லில்
ஆனவரசாமா வத்தியுடன் சிரசில்
கானகருங்காலிபாம்பை யடைந்துகொள்ளே.

இ-ள். தேவருக்கும் மானிடருக்கும் சங்குமரமாவது அரசு ஆல் அத்தி சிரசில் கருங்காலி பாம்பை இவையாம்-எ-று. 55

வேறு.

பண்ணிப்பங்குவைக்காப் பார்தனைமட்டடக்கி
யெண்ணியேவொருகோல்கொண்டால் கலமுத்ததுவேயாகும்

தண்ணியமட்டமீள மொக்கவேகொண்டபின்பு
திண்ணியபொருளினாலே தீங்கிலாச்சங்குவையே.

இ-ள். சங்கு வைக்கும்போது நிலத்தை மட்டஞ்செய்து ஒரு கோல்முறை அகலம் நீளமட்டம் ஒக்கக்கொண்டு பொருள்வைத்து சங்குவைக்கவும்-எ-று. 56

வேறு.

ஆவணியுமைப்பசியு மானபெரிமாதம்
பூவணியில்வாழ்ந்திடு புராதனரவக்கார்
யாவணியினுள்தவிர மற்றவைதேவாங்காந்
தாவனயராய்மனையில் சங்குகடலாமே.

இ-ள். ஆவணி ஐப்பசி கார்த்திகை இந்த மூன்று மாதங்களில் சங்கு கடல் மனிதருக்காம் மற்றெல்லா மாதங்களுந் தேவர்களுக் காம்-எ-று. 57

கெற்பம்வைக்க பேழை.

அவலனிலெழுந்தமண்ணு மானையின்கோட்டுமண்ணு
நிலனுறுபுற்றுமண்ணு னீடியகட்டின்மண்ணு
குலவியவெருதுமணனுங் கூடதீசேர்த்துக்கொண்டு
பெலமிகுகெற்பம்வைக்க பேழையைப்பண்ணிக்கொள்ளே.

இ-ள். நண்டு கொட்டுமண் யானைக்கொட்டுமண் புற்றுமண் கறுப்புமண் எருதுங்கொட்டுமண் இவையெல்லாங் கூட்டிச்சேர்த்து கெற்பப்பேழை செய்துகொள்ளவும-எ-று. 58

பண்ணியகெற்பப்பேழை பைந்தேமோடொன்பதாக
வெண்ணியபதினைந்தாக வமையினைப்பண்ணிக்கொண்டு
நண்ணியபணியும்பொன்னு நற்பலதானியங்கள்
திண்ணென வடக்கவென்று செப்பினர்கலைவல்லோரே.

இ-ள். ஐந்தரை ஏழரை ஒன்பதரை பதினைந்தரை இவற்றி லொன்று பொருந்திய அரைபண்ணி அதில் நடுவரையில் பொன் னும் மணியும் சுற்றிலுமிருக்கும் அரைகளில் பல தானியங்களு மிட்டுவைக்கவும்-எ-று. 59

சாலையின்மையும்பற்றித் தன்னிலகரைப்பற்றிக்
கோவிலேயொன்பதாக குறித்திடுமேற்குநாலு
வாலியக்கிழக்குமூன்று தெற்குமேநான்குவிட்டுச்
சீலமாம்வடக்குமூன்று நடுவதுகெற்பஞ்செய்யே.

இ-ள். சாலையில்முதல் மையத்தைப்பற்றி பின்பு அகலப்பற்றி அதை ஒன்பதுகூறுசெய்து மேற்குநான்கும் கிழக்குமூன்றும் தெற் குநான்கும் வடக்கு மூன்றும்விட்டு நடுவில் கெற்பஞ் செய்யவும்.

இந்த சாஸ்திரஞ்சொன்ன சிற்பியானவன் செய்வானாகில் மனைக்குற்றம் பணிக்குற்றம் விலக்குற்றம் இவைகளால் வந்த தோ ஷங்களையும் தள்ளுமென்றறியவும். 60

முனைகடாவுமளவு முளைக்கயிறுகால்.

பகர்ந்ததோர்முளைக்குநீளம் பதினொருவிரல்தொடங்கி
யிகழ்ந்ததோர்விரலாலொற்றி யிருப்பதுநான்குங்கொள்ள
மகிழ்கடைவைகடாபோது வாஸ்துவினவயிற்றுக்கெல்லி
யுகந்ததென்மூலைதன்னை யுற்றுமுனனியமாய்த்தாக்கே.

இ-ள். முளைக்கு நீளம் 11-விரற் றொடங்கி ஒருவிரல் ஏறிட்டு இருபதுநான்கு விரலளவுங்கொள்வது முனை கடாவும்போது வாஸ்துவின் வயிற்றிற்கெல்லி பின்பு தலை மேல்மூலையில் கடாவி தென் கீழ் வடகீழ் மூலைகளின் கடாரியவிடியும்-எ-று. 61

மாமிசத்தால் மறுவாசல் தோஷம் வேறு.

கொட்டுமுனைதட்டிபறித்தல் கொத்தேதமிடித்தகயிற்றுதல்
நட்டுகாளைபின்பரித்த னடுவிதாணிமிர்மிகசத்தம்
விட்டவாசல்தனையடைத்து வேறேவாசல்தனைவிடுத்து
சட்டமனையாடனையிழக்குந் தாமுமானந்தப்பாதே.

இ-ள். கொட்டினமுளையைத் தட்டிப்பறித்தலும் செவ்வையாகப்பிடித்த கயிறு இற்றாலும் ஒருகாலை நாட்டி அதை பின்பறித்தாலும் பனைநடுவில் ஒருமரத்தை இசைத்தாலும் விட்ட வாயலையடைத்து வேறொருவாசல் விட்டாலும் பொல்லாத தோஷம்-எ-று. 62

முகடுகுத்திமாயிறுகயிறு வேறு.

கூறுவிரலான்முகடு கொண்டுமாறுகாடி
மாலுதயிரானவைகள் வாழ்மனையொடுங்கில்
ஈருபடுநோய்கவியு மில்லவனுமில்லாள்
வேறுபடுவெம்பகை விளம்புவதுமெய்யே.

இ-ள். முகடு குத்தாகவும் மாறு கயிராகவும் மனையெடுக்கில் பொல்லாத தோஷத்தைக்காட்டும்-எ-று. 63

மறுபடியும் முளைநக்குறிதுங்குறி வேறு.

குடக்குந்தெற்குமனைபேரிற் குற்றமிகவேதானுண்டாய்
வடகிழக்குமனைபேரில் வசியமுண்டுமிகநன்றாம்
எடுப்புஞ்சாய்ப்புமிகவாகா தென்னுங்கருமமிகவுண்டாம்
முடுக்குகோடிமறுமாடி மூலைவாங்கினுந்தீதே.

இ-ள். மனைக்கு மேற்கு தெற்கும் பெயர்த்து கட்டலாகாது வடக்கும் கிழக்கும பெயர்த்துகட்ட நன்றாகும் எடுப்புஞ் சாய்ப்புமாக நிற்கினும் கோடிவருமாடி மூலை வாங்கிப்போம் நிற்கினும் ஆகாது-எ-று. 64

நான்கு வருணத்தாரும் பூநூல் கொள்ளும்விதி.

மறையவன்மற்றைநூலா லகன்புரிமூன்றுங்கொள்க
விறையவன்கதம்பைதன்னை விருபுரியதுவேகொள்க
பெறுமெனவைசியர்க்காகிற் பெண்ணைனூர்புரியிரண்டாம்
அறிவுளவுழவற்காகி லாத்தினூற்புரியிரண்டே.

இ-ள். பிராமணர்கள் தெற்பைநூல் முப்புரிகொள்க அரசர் கள் கதம்பைநூல் இருபுரிகொள்க வணிகர்கள் பனைநார் இருபுரி கொள்க சூத்திரர்கள் ஆத்தினால் இருபுரிகொள்க. 65

மட்டநீர்கொள்ளவேண்டின் மதித்தின தளத்தைநீயும்
திட்டமாய்ச்சமிரமாகித் திரமதானடுவிலேதான்
வெட்டின குழியைக்கெல்லி வேகமாய்நீரைவிட்டு
பட்டமாம்முளைகடாவிச் சார்பினிற்கயிறுகட்டே.

இ-ள். கட்டங்கொள்ளும்படி நடுவில் சதுரமாகக் குழியைக் கெல்லி தண்ணீர்விட்டு நாலுதிக்கும் முளைகடாவின் கயிறு கட்ட வும்-எ-று. 66

நன்றெனவிட்டநீறு நாட்டியேகண்ணிமேலுஞ்
சென்றுமேமுளையைத்தொட்டுச் சிதரியேநிற்குமாகில்
மன்றமாபதினிலத்தூண் மதித்தமேதோர் நூலார்கண்டு
குன்றமர்குமரபாகு குறிப்பிட்டதுநித்துப்போற்றே.

இ-ள். கடுவிட்ட நீரவழியுந்தேடி நான்குதிக்கும்பறந்து முளை யிலும் கயிற்றிலும் தாக்கிநின்றால் தளமட்டமொக்கும்-எ-று. 67

கூறைக்கால்நாட்டல் முகூர்த்தஞ்செய்தல்.

அகலத்தையொன்பதாக்கி யதிலொன்றுகுறைக்ககாலம்
பகலுற்றகுழிக்கிரெண்டு போக்குமேளாறுசுற்றின்
றிகலுற்றேசவர்வதற்கு மேலதுவொன்றுபோக்கி
சகலர்க்குநடுவேயைந்து கூற்றெனச்சாற்றினாரே.

இ-ள். அகலத்தைப் பிடித்து 9 கூறுசெய்து அதில் ஒன்றைக் குறைக்கலாம் கீழே குழி நாட்டுகைக்கு 2 கூறும்போக்கி நடுவில் 9 கூறு நிறுத்தவும். 68

மூலைக்கால்நாட்டும் விதி.

முன்னியமுகூர்த்தந்தன்னின் முதல்வனைபூசைசெய்து
பொன்னொடுமணியும்பாலும் பொழிவுடன்குழியிற்பெய்து
தென்மேற்குமூலைக்காலைச் சிறப்புடன்முந்தநாட்டி
தென்கீழும்வடகீழ்மேலும் மூலையுந்தெரிந்துநாட்டே.

இ-ள். நல்ல முகூர்த்தத்தில் விநாயகரை பூசைசெய்து பொன் னும் நவமணியும் பாலும குழியில்விட்டு முதல் தென்மேற்கு மூலைக் காலைநாட்டி தென்கீழ்மூலை வடமேல் மூலைக்காலும் அடைவு சேர நாட்டவும்-எ-று. 69

மாமிசைத்தல்.

இசைமுதுதலைகீழாக விளந்தலைமேலதாக
பசையுடனேரமாகிப் பருந்தலையில்லதாக
வசைமுரவிசைப்பாராகி வரவொடுசம்பத்துண்டாம்
பிசைகுழல்வருமேயாயிற் பிணியொடுகேட்பர்தாமே.

இ-ள். மரவிடைக்கும்போது முதுதலைகீழாக இளந்தலைமேலா கவும் ஓர் இசையாகில் முதலையுள்ளும் இளந்தலை புறத்தியுமாக இ மைப்பது நன்று இதற்குப் பிசகுவருமாகி லப்பிணியுங் கேடுமுண் டாம் இளந்தலைகீழும் முறுதலை மேலுமாக இழைப்பாராகில் நோ யுண்டாம்-எ-று. 70

முதுதலையிரண்டுந்தென்மேல் மூலையிற்கூடவைத்து
திதமுறவிசைக்கும்போது தென்றலைமேலதாக
மதியிளந்தலையிரண்டும் வடகீழாமூலைதன்னில்
விதிவடதலைகீழாக விளம்பினர்பிணைக்கத்தானே.

இ-ள். முதுதலை இரண்டுந்தன்மேல் மூலையில் பொருந்தவை த்து தென்றலைபோலாகவும் இளந்தலையிரண்டும் வடதிசைமூலையிற் பொருந்தவைத்து வடதிசைகீழாகவும் பிணைக்கவும்-எ-று. 71

இளந்தலையிரண்டும்வேறே யிடத்தினிலிசைக்கலாகா
வளம்படுமுதுதலைகள் வகுத்ததென்மூலையன்றி
விளம்பிலேனுமிசைப்பாராகில் வெறுமைநோய்நலியுநன்றே
தெரிந்தவனுரைக்கலுற்றார் சிற்பியினூலையாய்ந்தே.

இ-ள். இளந்தலையிரண்டும் வடகீழ்மூலையொழிய ஓரிடத்தி லிசைக்கலாகாது முதுதலையிரண்டும் தென்மேல்மூலையிலேயொழிய மற்றவிடங்க ளிரைக்கமாளாது இரைக்கில் வருமைநோயுண்டாம்.

பரப்பினிற்பாதிதன்னைப் பன்னிருகூறுசெய்து
நிறப்புறுமைந்துகூறு நின்றதுமேற்றமஞ்சாம்
இறப்பமாஞ்சக்கையாறு யேழதுநடுவாங்கையா
முறப்புகோடாகையெட்டு மென்றிதுகோடிதானே.

இ-ள். பரப்பினிற்பாதியைப் பனிரெண்டுகூறுசெய்து இதி லைந்துகூறு ஏற்றமஞ்ச ஆறுமஞ்சாகை ஏழுநடுவாக எட்டு மாமிசைக் கோட்கை ஒன்பது கோடியென்பதாம்-எ-று. 73

மாதத்தில் நன்மைதீமையறிந்து உத்திரமிணைக்கும் விதி.

மாடமாளிகைகளாதல் மதித்ததோர்மண்டபங்கள்
நீடியமயனார்சொல்லு நெறிதனையியம்பக்கேளீர்
கூடியமரங்கடன்னிற் குணங்களாநன்மைதீமை
ஆடகமயிலினாளே யறிந்தவருரைக்கலுற்றார்.
உத்தரமிசைக்கவேண்டி லுன்னினீர்கேளுமெல்லாம்
அத்தனையகலந்தன்னை யளந்துநற்சதுரமாக்கி
வைத்தனகன்னனேரே வடிவுவாற்கண்டுகொண்டு
இத்தனையென்பதாக விசைந்தனகுடுமியாமே.
உத்தரமிசையிலாணி யுலகத்தில்வலமதாக
அத்தனுநாளினேதே யான்கமாக்கியமுண்டாகும்
உத்தரமிசையிலாணி உலகத்திலிடமதாகிற்
சத்துருபொருத்துபின்னஞ் சாலையைப்படுகைதிண்ணம்.

மையனேமனைகடன்னி மாத்தினையிசைப்பாராகில்
கையதிறபொருளும்போகுங் காவலன்ருனுஞ்சாவான்
பையவேயவலமையும் பாரியப்பாதிதன்னில்
செய்யவேகடன்கள்வல்ல சேர்ந்ததோரிசையும்வானே.

அடியறுகீழதாகு மக்கிரமேலதாகும்
படிமுதலானதெல்லாம் பகைத்துடனிசைத்துக்கொள்ள
முடியவேவோரையாகில் மூளமுமுள்ளேயாகும்
கடகவல்குழலினளே கண்டவையுரைத்தவாறே.

கால்வைக்க கையேற்றநாள் இலக்கணம்.

மதியினிற்காலைநாட்டி வன்புதன்கையைவைத்து
விதியினல்வெள்ளிமேய்ந்து வியாழத்திற்குடியேபுக்க
சதியுடன்பகைவரைந்து தனிலெறிமூட்டினலும்
பதிபெறுமித்திரன்போற் பரிவுடன்வாழ்வார்தானே.

இ-ள். திங்களில் காலைநாட்டி புதனிற்கையைவைத்து வெள்ளியில் மேய்ந்து வியாழத்திற் குடிபுகுந்தால் தேவேந்திரன்போலே அஷ்டயிஸ்வரியமும்பெற்று நீடூழிகாலம் செல்வம் நீங்காமல் கீர்த்தியுள்ளவனுய் வாழ்வான்-எ-று. 74

வாசக்கால்வைக்கும் விதி.

வந்ததோர்மனையின்நீளம் வகுத்ததோர்முழங்கடன்னை
ஒன்பதுகூறுசெய்து ஒருமூன்றுமிடத்தேபோக்கி
நின்றதோர்வலத்தினைந்து நீக்கியேநின்றுகூறில்
இன்பொடுவாசலாக அறிந்தவருரைத்தவாறே.

ஊனமில்மனையில்வந்த முழந்தனையளந்துக்கொண்டு
மானிடர்தமக்குவாச லமைத்திடவிடத்தேயாகும்
தேனமர்குழலினளே தேவர்கடமக்குமைய
மானதுவாசலென்றே மருந்தவறுரைத்தவாரே.

கதவுக்கு கெம்புமினை வீடுகளுக்கு இரட்டைத்துவாரமிடும் விதி.

வேறு.

நாலுக்குமூன்றுக்கு நடுவுக்குநடுவே
காலுக்கும்கதவுக்கு கமடைக்குமிதுவே
மேலுக்குங்கீழுக்கு நடுவுக்குமுடலாம்
ஒலைக்குநாலுக்கு முறுவைத்துவையே.

மாமதில் ஆண்பெண் அறிய வேறு.

அடிதலைமிரண்டுமொத்தா லாண்மரமாகுமென்பார்
அடிவரிந்திடியேபெண்ணு மலியகுமலைபருக்கும்
வடிவுடன்தூணுள்காணு வலைகளுத்திரங்கள்பேசி
வடிவுடன்விட்டசட்ட மற்றவைகேதுமாமே.

அகலத்தோர்பாதிதன்னை யாரிருகூறுசெய்து
சகலற்குமைந்துகூறே தக்கதோரேற்றமஞ்சா
மிகலுமஞ்சாகைபாறு மேழதுநடுவாங்கைக்கு
முகலுங்கோடாகையெட்டு மொன்பதுகோடிதானே.

அஞ்சினிலிரண்டதான வளைக்குஞ்சற்றளவுநீளம்
மிஞ்சிரமுழமூன்றாக வேதித்துவொன்றையேத்தித்
தஞ்சலமிலததோடெட்டுத் தாட்பரணற்றக்காலாம்
மிஞ்சிடாதிரண்டுதானும் பிறவாகையென்னலாமே.

ஆண்மரம்.

காரணமேமரங்கடன்னைக் கருத்துடனறியும்போது
தூணெனத்திரண்டுநின்று சுத்தமாயொழுங்கதாக
நீணுயர்பாரின்மீது னின்றிடுமாகிநல்ல
ஆண்மரமென்றுசொல்லி யரைந்தனர்வேதத்தோரே.

இ-ள். மரமானது தூண்போலத் திரண்டு நீண்டு ஒழுங்கா
யிருக்குமாகில் ஆண்மரமென்று சொல்லப்படும்-எ-று. 75

பெண்மரம்.

கண்ணிமாமரங்கடன்னைக் கருதியேபார்க்கும்போது
விண்ணுமையதுபெருத்து மேலதுசிறுத்துநின்றால்
பெண்ணெனவருத்தநன்றாய் பெருமையாயோகலம்பின்
அண்டெனத்தமிழையோது தூயனுமயன்சொன்னாலே.

இ-ள். மரமானது அடிபெருத்து நுனியானது சிறுத்திருந்
தால் அதை பெண்மரமென்று சொல்லப்படும்-எ-று. 76

அலிமரம்.

இரசியவாங்கடன்னை யியம்புடன்பார்க்கும்போது
நிலமதிற்சிறுத்துநீண்டு நெரிமையதாகிபின்னுந்
தலையதுமிகப்பெருத்து தானதுநிற்குமாகில்
அலிமரமாகுமென்றே யரைந்தனர்வேதத்தோரே.

இ-ள். மரமானது சிறுத்து நீண்டு நெடுமையாகி தலைபருத்தி
ருந்தால் அதை அலிமரமென்று சொல்லப்படும்-எ-று. 77

கருதுமாண்மரமேயாகில் காலொடுதூக்கதாகும்
மருவுபெண்மரமேயாகில் வளையுத்திரம்பொதிகைக்காகும்
விரவலிமரமேயாகில் விட்டமுஞ்சட்டமாகும்
உரவியகைகளாகி லுற்றமரங்களாமே.

இ-ள். ஆண்மரமாகில் கால்களுக்கும் தூணுக்குமாகும் பெண்
மரமாகில் வளைஉத்தரம்பொதிகைக்குமாகும் அலிமரமாகில் விட்டம்
சட்டத்திற்குமாகும் கைகளுக்கு உத்தமமரங்கள் நன்று-எ-று.

சேமரந்தேவற்காகும் மறையவர்வேம்பதற்கும்
மாமகன்றேக்கதாகுங் குணமுள்ளவிலுப்பைசெட்டி

பூமகள்வேங்கையாகும் பொருசாநிகான்கிருக்குந்
தாமமரம்மேவிருந் தருமயன்சாற்றுவாரே.

இ-ள். மாமரம் தேவர்களுக்காகும் வேம்பு பிராமணர்களுக்காகும் தேக்கு அரசர்களுக்காகும இலுப்பைசெட்டிகளுக்காகும் வேங்கை வேளாளருக்கும்-எ-று. 79

வீடு கட்டுவதற்குதவா மரங்கள்.

அத்தியுமாலுமிச்சி யரசுடனிலவுகாணும்
கத்தியபுரசுகுச்சம் கவின்றிடுமிலந்தைபூமி
வித்தகமகிழுங்கூறும் விளாவுடனிவைகளெல்லாஞ்
சித்தியாயங்கள்கட்டச் செல்வமுங்குன்றுந்தானே.

இ-ள். அத்தி ஆல உச்சி அரசு இலவு புரசுக்குச்சம் இலந்தை பீஸி மகிழ்விலா இவைகளால் வீடுகட்டினல் இருக்கப்பட்ட செல்வமும் புத்ரபாக்கியமும் குறைந்து வருமை மேலிட்டு அதிக துன்பத்தை யுண்டாக்கும்-எ-று. 80

சிறியகாற்றில்வீழ்ந் திறமைசேர்மறமுமல்லாற்
கூறியவாலயத்திற் குணமபெறநிற்குநல்ல
தேரியமரம்புணரத் திருந்திடுமயானந்தான்
மாரியேகட்டுமாகில் வமமிசநாசமாமே.

இ-ள். காற்றி லடிபட்டு வீழ்ந்த மரம் ஆலயத்திலிருக்குமரம் மாயானத்திலிருந்தமரம்இவ்வகைப்பட்டமரங்களால்வீடுகட்டினல் செல்வங்குரைந்து ஆயுள் சிணித்து வம்மிசநாசமாகும்-எ-று. 81

வெண்பா.

பருத்தியுநத்திப் பனைநாவல்நெல்லி
லருக்குப்புளியிலவுமோ டெட்டும்-பொருக்கமுடன்
எந்தமனையாயிடினு மிந்திரபதமானாலும்
அந்தமனை பாழாய் விடும்.

இ-ள். பருத்தி அத்தி பனை நாவல் நெல்லி அருக்கு புளி இலவு இவ்வகைப்பட்டமரங்கள் வீட்டிலிருக்குமாகில் தாமரைக்கமலத்தில் வீற்றிருக்கின்ற இலட்சுமியானவள் இவ்விடத்திலிருக்க மனதில்லாமல் வெறுத்து மனையைவிட்டு நீங்குவாள் மனைபாழாகும்-எ-று.

நில அளவு.

நிலவாகலங்கள்கொள்ள நேர்படச்சொல்லும்போது
நிலங்கலத்தினுமேல மனமுநீட்டிக்கொண்டு
நிலவகலத்திலமுக்கா லரையதுகாலேயாகில்
நிலவகலத்தால்வந்த நிலத்தளவொப்பதாமே.

வெண்பா.

ஒத்தநிலவுகல முண்மையுடனுரைக்கில்
அந்தநிலத்தளவென் றெய்தினள்-மற்ற

எண்கூறிட்டாற்றையு மேற்கத்துளையிரண்டும்
பண்பாகக்கொள்வாராம் பார்.

பார்க்குங்கூறொன்றையும் பஞ்சமஞ்சுகூறுசெய்து
ஆர்க்கவேயோகை யறுதலென்பதற்கு—சீர்க்க
விருகூறுமிருதுளைக டாவியிவைமூன்றும்
வருமாம்படியாக வை.

வைத்தசுவர்கனத்தை வாக்காறுகூறுசெய்து
ஒத்ததில்மையங் கிருப்புக்குத்—துத்துப்
பறம்பாக்கிநாலாம் பொருந்துமாமன்னர்க்குத்
திறம்பாமநூலாற் றெளி.

### நிலநீளம்வைக்கும் விதி.

ஒன்றுக நீளம் ஒருவிரலொத்தித் தள்ளிவைப்பது யாதொரு நிலத்தையும் 8 பங்குசெய்து 7 உட்கூடு 19 செய்து மேல் 5 கீழ் 4 தளமட்டம் வைப்பது நில நீளத்தை 7 செய்து 6 உட்கூடும் 6, 9 செய்து மேல் 5 கீழ் 4 வேறு நில நீளத்தை 7 செய்து 6 உட்கூடு 1, 4 செய்து மேல் 3 கீழ் 4 நிற்பதங்கள் பற்றிவைக்க வேண்டுமென்பதே உட்கூடு விரல் முறியாமல் வைப்பது உட்கோட்டிற் பாதிபோதும் விரலொற்றிக்கொள்வது.

### கதவுகளினிலக்கணம்.

சிறப்புடைதேவர்க்கன்றே யடைத்தலுந்திறத்தல்காணுஞ்
சிறப்புடையிரண்டா யடைத்தலுந்திறத்தல்காணுஞ்
சிறப்புடைமைதொன்றுய்த் தேவர்கட்கன்றியாதா
சிறப்புடைகதவுங்கோலுஞ் சிக்கெனச்செய்வதாமே.
இருக்குவேயாகுமாகி ளொருவமின்னேய்செய்து
மிருவடமறையோர்தேவர் மற்றெல்லாவிடத்துமாகுங்
கருதுகோலெவர்க்குமொக்க விரட்டித்தல்தேவருக்கா
மருவுதானடவுகண்டால் மார்க்கவானடவுதானே.

### இதுவும் கதவிலக்கம் வெண்பா.

ஓடியடைக்குமேலூர் திரந்துபோற்றிடினும்
வாடியதனை வருத்துவிக்கு—வாடாது
நிற்குமேல்நிற்கும் நிலைகொடுமேகேடாகும்
கற்பகஞ்சேர்வாசற் கதவு.

இ-ள். மூடின கதவைத்திறந்து நிலையில் நிற்கவைத்தல்தானே வந்து சாற்றுமதிலும் அதிக இரைச்சலிட்டாலும் உயிர்சேதமுண்டாவதல்லாமல் மனையும் பாழாநின்ற நிலையில் நிற்குமாகில் நீடூழி காலம் வாழலாம்-எ-று.

### விருத்தம்.

தாளவேயொன்றுமூன்று மைந்தின்பால்கதவுநீங்க
மீளவேதாங்கபாடம் விடுமதனைசைவேறு

சாளமாங்கழுதைசெக்கு குரலதுகவலையாக்குந்
தாளம்வேழ்த்திசையினோசை சங்கொலிமிகவுநன்றே.

இ-ள். கதவைச்சாத்தும்போது கழுதைக்குரல்போலும் செக்கினோசையைப்போலும் சத்தமுண்டாகில் தீராக் கவலையுண்டாம் யானைக்குரல்போலும் சங்கின் னொலிப்போலும சத்தமுண்டானால் சகல பாக்கியமுண்டாம்-எ-று. 84

விருத்தம்.

மந்தமாய்வாதபித்த மருவியேநடந்திட்டாலுஞ்
சிந்தையிற்கிளியின்கூச்சல் சிதறியேகிட்டிட்டாலும்
அந்தமாய்நடுச்சட்டத்தி லாணியொன்றாணமாக்கி
சொந்தமாயிருக்குநோய்தான் தீராதுபிணிசொல்லே.

இ-ள். கதவைச் சாற்றும்போது மந்தங்கொண்டு வாதம் பித்தம் மென்னும் இரண்டு நாடிபோல் நடக்கினும் அல்லது கிளியைப்போல் கீச்சென்றும் கூச்சலிடினும் நடுச்சட்டத்தி லாணியொன் றானமென்று சொல்லவும் அது வீட்டிற் குடையவனுக்கு நோயுண்டாகும்-எ-று. 85

வெண்பா.

கன்னியரேவாசற் கதவுசிக்கிச்செக்கோசை
மண்ணிடிற்புத்திரனு பத்திரமா—முன்னமே
கன்னியரைப்போக்குங் கவலைமிகப்படுத்தும்
அன்னமேசொன்னே னறி.

இ-ள். கதவைச்சாற்றில் சிக்கிச் செக்கோசைபோல் இரைச்சலிட்டு நடக்குமாகில் புத்திரபாக்கியமில்லை மனையாள் மரணமாவாள் மனக்கவலை யுண்டாகும்-எ-று. 86

கரும்பாலைபோலேதானுங் கதறியேகத்துமாகில்
வரும்பாலகர்க்குநாச மங்கையரிடத்திற்குற்றம்
பெரும்பாடுமெத்தவுண்டு பெண்பழிதனையேவாங்கும்
அரும்பானகொங்கைமாதே யவத்தையைவிளக்குமென்னே.

இ-ள். கதவைச்சாற்றில் கரும்பாலைபோல் சத்தமிடில் புத்திரநாசமும் பெண்பழியும் அதிக அவஸ்தையு முண்டாயிருக்கும். ()

வாஸ்து புருஷன் நிலையறிந்து வாசல்விடும் விதி.

வாஸ்து புருஷனுக்கு பங்குனி சித்திரை வைகாசி இந்த மூன்று மாதமும் மேற்கே தலையானபடியால் வடக்கே வாசல் விடவும். ()

ஆனி ஆடி ஆவணி இந்த மூன்று மாதமும் வடக்கே தலையான படியால் கிழக்கே வாசல் விடவும்.

புரட்டாசி ஐப்பசி கார்த்திகை இந்த மூன்றுமாதமும் கிழக்கே தலையானபடியால் தெற்கே வாசல் விடவும்.

மார்கழி தை மாசி இந்த மூன்றுமாதமும் தெற்கே தலையான படியால் மேற்கே வாசல்விடவும்.

## வாஸ்துவீட்டின் பலகை மேற்கோள்.

### விருத்தம்.

துய்யதோர்வயிற்றில்வாசல் சுகமொடுசெல்வமுண்டாம்
கையதுவாசலாகிற் கைக்குழந்தைகளும்பாழாம்
மெய்யதாமார்பேயாகின் வேன்மனையெறிந்துபோகும்
பையவேதலையராகிற் பதிக்குளோணிறப்பளென்னே.

மீனமுமாடுமேறு மேற்றிசைதலையதாகி
யூனமற்றிடக்கைகீழா முத்திரதிசையைநோக்கி
தேனைவாசவன்றனமாகுந் திசைதனிற்காலைநீட்டி
மானெனும்விழியாகேளாய் வாஸ்துதான்கிடக்கும்பாரே.

இ-ள். மீனம் மேஷம் ரிஷபம் இம்மூன்று ராசியில் காலைநீட்டி கன்னி துலாம் விருச்சிகம் இந்த மூன்று ராசியில் சிரசைவைத்து இடக்கை கீழும் வலக்கை மேலுமாக உத்திரதிசையைநோக்கி இந் 88
திரன் திசையில் காலை நீட்டியிருப்பன் வாஸ்து புருஷன்-எ-று.

தண்டொடுநண்டுசிங்கந் தலையதுவடக்கேவைத்து
எண்டிசையிடக்கைகீழாய் வடக்கைதான்மேலதாக
திண்டிரவியமன்வாழுந் திசைதனிற்காலைநீட்டி
வண்டினிகுழலினளே வாஸ்துவுங்கிடக்கும்வாறே.

இ-ள். மிதுனம் கடகம் சிங்கம் இம்மூன்று ராசியிற் காலை நீட்டி தனுசு மகரம் கும்பம் இம்மூன்று ராசியிற் காதைவைத்து இடக்கை கீழும் வலக்கை மேலுமாக யெமன்மூலையில் காலைநீட்டி 89
வாஸ்து புருஷன் கிடப்பான்-எ-று.

கன்னியுந்துலாமுந்தேளுங் கதிர்முடிதிசையில்வைத்து
மன்னியவருணன்மேய மகிழ்வொடுகாலைநீட்டி
இன்னிசையிடக்கைகீழா யியமன்றன்றிசையைநோக்கி
வன்னமாமாதேகேளாய் வாஸ்துதான்கிடக்கும்வாறே.

இ-ள். கன்னி துலாம விருச்சிகம் இந்த மூன்று ராசியிற் காலைநீட்டி மீனம் மேஷம் ரிஷபம் இம்மூன்று ராசியில் சிரசை வைத்து இடக்கை கீழும் வலக்கை மேலுமாக எமன்றிசை நோக்கி 90
வாஸ்து புருஷன் கிடப்பான்-எ-று.

தனுசொடுமகரங்கும்பந் தலையதுதெற்கேவைத்து
மனுவொடுவிடக்கைகீழாய் வலக்கைதான்மேலதாக
மனமொடுமுகமுமேற்கு வடக்கினிற்காலைநீட்டி
வனமுளமாதேகேளாய் வாஸ்துவுங்கிடக்கும்வாறே.

இ-ள். தனுசு மகரம் கும்பம் இம்மூன்று ராசியிற் காலைநீட்டி மிதுனம் கடகம் சிங்கம் இந்த மூன்று ராசியில் சிரசைவைத்து இடக்கை கீழும் வலக்கை மேலும் மேற்கே முகமும் வடக்கே காலுமாக வாஸ்து புருஷன் கிடப்பான்-எ-று. 91

வாஸ்துவினிருப்பு.

திங்களோராசிதன்னிற் சிறப்புடன்சிரசைவைத்து
பொங்கியராசிக்கேழாய்ப் புகன்றிடுமிராசிதன்னிற்
றங்கியகாலைநீட்டிச் சகப்பிரதிட்டையாக
மங்கையேசொல்லக்கேளாய் வாஸ்துதான் கிடக்கும்வாறே.

இ-ள். பாவம் ஒரு ராசியில் சிரசுவைத்து அதற்கேழாமிராசியில் காலைநீட்டி செகம் பிரதிஷ்டையாக வாஸ்துபுருஷன் கிடப்பன்.

வேறு.

துங்கபானுதானின்ற துய்யராசிநிலையறிந்து
அங்கேபாதந்தனைநீட்டி யதனுக்கேழில்தலைவைத்து
பங்கேவிடக்கைகீழாகப் பகரும்வலக்கைமேலாக
மங்கைபூதலந்தனிலே வாஸ்துபுருஷன்கிடப்பதுவே.

இ-ள். ஆதித்தனின்ற இராசியில் காலைவைத்து அதற்கேழாமிராசியில் சிரசுவைத்து இடக்கை கீழும் வலக்கை மேலுமாக வாஸ்து புருஷன் கிடப்பான்-எ-று. 93

வேறு.

கடப்பதுமிடக்கைகீழாய் கிடந்தவனெழுந்திருந்து
நடப்பதுமலமேயாகில் நல்லதோராசிதோறும்
படுகையால்வயிறுபார்த்து பரிவுடன்வாசல்தன்னை
விடுப்பதுமில்லையாகில் வேதனைசூழுமின்னே.

இ-ள். இடக்கை கீழும் வலக்கை மேலுமாய்க் கிடந்தவனெழுந்திருந்து வலமாகில் படுக்கை வயிற்றிலிருந்து வாசல் கோலாவிட்டால் வேதனையிலே வாடுவார்கள்-எ-று. 94

வேறு.

மேயவாஸ்து விரும்புநிலையன்றி
தூயமாமனை கோலத்துவக்கிடில்
சேயமான மனைவியுமக்களும்
ஆய்ந்தசிற்ப ளனைவருமாள்வரே.

இ-ள். வாஸ்துவின் நிதானமறிந்து மனைகோலானுகில் யசமானும் மனைவியும் முகூர்த்தம்வைத்த சிற்பனுமிறப்பார்-எ-று. 95

சாதுநிட்சயந் தனைமயன்கோல்பவன்
பூவாவாஸ்து புருஷன்முன்பென்றிடிற்
றூவரும்பகை சடுதியினேர்ந்திடும்
பாவநோய்களும் பற்றுமுடம்பிலே.

இ-ள். வாஸ்து நிதானமறிந்து மனைகோலானுகில் சத்துருப்ப கையும் ரோகமும் உண்டாம்-எ-று. 96

வாஸ்து எழுந்திருக்கு நாள்.

சித்திரைவைகாசியாடி சிறந்தவாவணியிதேைடு
வைத்தவைப்பசியுமிக்க மன்னுகார்த்திகையுந்தானு
மற்றதைதமாதத்தோடு மாசிதானெட்டுமாகும்
புத்தியான்மனைகள்கோலப் புகழுடன்நன்மையாமே.

இ-ள். சித்திரை வைகாசி ஆடி ஆவணி ஐப்பசி கார்த்திகை தை மாசி இவ்வெட்டுமாதமும் வாஸ்து எழுந்திருப்பன் இம்மாதங் களில் மனைகோலினுல் சகல சம்பத்துண்டாம்-எ-று.

சகுணபலன்.

நிறைந்திடுகுடமேகாணில் நிலையதாய்செல்வமெய்துங்
குறைந்திடுகுடமேகாணில் குறிப்பதாம்துண்டமுண்டாம்
குறைந்திடுபாம்புகாணி லியல்பிலாப்பகையுமுண்டாம்
அறைந்திடுசெருப்புகாணி லருங்குடிநசித்துப்போமே.

கரியதுகானுமாகிற் காயத்திநோயேயாகும்
உரியதோவெனும்புகாணி லுற்றதோவனைத்துஞ்சாவான்
பிரியமாயுமியேகாணில் பெரும்பொருளனைத்துங்கேடாம்
மெரியுருவிறகுகாணி லிகச்சியாம்வினையுண்டாமே.

ஈண்டியதனங்கள்காணி லிருபொருள்செல்வமுண்டாம்
காண்டகல்தவளைகாணில் கனம்பெருதான்யமுண்டாம்
வேண்டியஅறவன்காணில் மிகுந்ததோர்பாக்கியமுண்டாம்
பாண்டித்திதேைடுகாணில் பலமுள்ளவுருவம்போமே.

குழியில் ஜலம்விட்டறியு மிலக்கணம்.

துலக்கியகுழியைக்கெல்லிச் சுத்தநீர்விட்டபோது
வலம்புரிவருமேயாகில் வாழ்வொடுசம்பத்துண்டாம்
இலங்கிய திறமேயாகி லியறறிடில்மனையைக்காற்
குலமுதல்நசித்துத்தானுங் கொடியோனுங்குறைபுவானே.

நட்சத்திரங்களில் நன்மை தீமையறியும் விதி.

அகலம் நீளம் நிலைகாலுயரம் இவைமூன்று மிருந்தமனையில் எட்டுதிசையில் சொல்லப்பட்ட தென்னவெனில்.

அசுவனிக்கு தென்சார்புவீடுகட்டுவது நீளமும் ஆருக்கு அக லமும் மூனேகால் வாசல்வடக்கு நிலைகாலுயரம் அங்குலம். 49

பரணிக்கு தென்சார்புநீளமும் 7-க்கு அகலமும் 3-க்கு வாசல் வடக்கு நிலைகாலுயரம் அங்குலம்-51.

கார்த்திகைக்கு மேல்சார்பு நீளமும் 7-க்கு அகலமும் 3-க்கு வாசல் கிழக்கு நிலைகாலுயரம் அங்குலம்-53.

உரோக்ணிக்குமேல் சார்புநீளமும் 7-க்கு அகலமும் 3-முக்கா லுக்கு வாசல் கிழக்கும் நிலைகாலுயரம் அங்குலம்-49.

மிருகசிரத்திற்கும் திருவாதிரைக்கும் தென்சார்பு நீளமும் 9-க்கு அகலமும் 3-க்கு வாசல் வடக்கு நிலைகாலுயரம்-49.

புனர்பூசத்திறகு வேள்சார்புநீளமும் 10-க்கு அகலமும் 3-முக்காலுக்கு கிழக்கு நிலைகாலுயரம்-55.

பூசததிற்கும் ஆயிலியத்திற்கும மேல்சார்புநீளம் 9-க்கு அங்குலமுழம் 3-க்கு வாசல்கிழக்கு நிலைகாலுயரம்-56.

மகத்துக்கு வடசார்பு நீளமும் 5-முக்காலுக்கு அகலமும் 3-க்கு வாசல் மேற்கு நிலைகாலுயரம்-49.

பூரத்திற்கு வடசார்பு நீளமுழமும் 10-க்கு அகலமுழம் 3-க்கு வாசல் தெற்கு நிலைகாலுயரம்-49.

உத்தரத்திற்கு மேல்சார்பு நீளமுழம் 9-க்கு அகலமும் 3-க்கு வாசல் கிழக்கு தெற்குமுகமாக நிலைகாலுயரம்-57.

அஸ்தத்திற்கு வடசார்பு நீளமுழம் 13-க்கு அகலமுழம் 3-க்கு வாசல் தெற்கு நிலைகாலுயரம்-57.

சித்திரைக்கு வடசார்பு நீளமுழம் 11-க்கு அகலமுழம் இரண்டேமுக்காலுககு வாசல் தெற்கு நிலைகாலுயரம்-57.

சோதிக்கு வடசார்பு நீளமுழம் 5-க்கு அகலமுழம் 2-க்கு வாசல் தெற்கு நிலைகாலுயரம்-40.

விசாகத்திற்கு வடசார்பு நீளமுழம் 9-க்கு அகலமுழம் 3-க்கு வாசல் தெற்கு நிலைகாலுயரம்-49.

அனுஷத்திற்கு கீழ்சார்பு நீளமுழம் 5-க்கு அகலமுழம் 3-க்கு வாசல் மேற்கு நிலைகாலுயரம்-49.

கேட்டைக்கு கீழ்சார்பு நீளமுழம் 5-க்கு அகலமுழம் 3-முக்காலுக்கு நிலைகாலுயரம்-49.

மூலத்திற்கு வடசார்பு நீளமுழம் 7-க்கு அகலமுழம் 3-க்கு வாசல் தெற்கு நிலைகாலுயரம்-27.

பூராடத்திற்கு கீழ்சார்பு நீளமுழம் ஆரேமுக்காலுக்கு அகலமுழம் 3-க்கு வாசல் மேற்கு நிலைகாலுயரம்-53.

உத்திராடத்திற்கு கீழ்சார்பு நீளமுழம் 13-க்கு அகலமுழம் 3-க்கு வாசல் தெற்கு நிலைகாலுயரம்-57.

திருவோணத்திற்கு வடசார்பு நீளமுழம் 11-க்கு அகலமுழம் 3-க்கு வாசல் தெற்கு நிலைகாலுயரம்-53.

அவிட்டத்திற்கு கீழ்சார்பு நீளமுழம் 7-க்கு அகலமுழம் 3-க்கு வாசல்மேற்கு நிலைகாலுயரம்-51.

சதயத்திற்கு தென்சார்புநீளமுழம் 9-க்கு அகலமுழம் 3-க்கு வாசல் வடக்கு நிலைகாலுயரம்-49.

பூரட்டாதிக்கு தென்சார்பு நீளமுழம் 14-க்கு அகலமுழம் 4-க்கு வாசல் வடக்கு நிலைகாலுயரம்-56.

உத்திரட்டாதிக்கு கிழ்சார்பு நீளமுழம் 10-க்கு அகலமுழம் 3-க்கு வாசல் மேற்கு நிலைகாலுயரம்-57.

இரேவதிக்கு தென்சார்புநீளமுழம் 10-க்கு அகலமுழம் 2-க்கு வாசல் வடக்கு நிலைகாலுயரம்-51.

மனைகள் அகலம் நிகளத்துக்கு வீட்டுக்குள் அறைகள் கூடங்கள் சற்காருகள்வாசல்கள் முதலானவைகள்வைப்பதற்குலட்சணம்.

மனைதனையளந்துவைத்து மகிழ்ச்சியாய்வாழ்வோர்க்கெல்லா
வினையில்லாச்சாத்திரத்தை விளம்புவேன்சொல்லக்கேளும்
பனைநரிகுடிப்பால்போலப் பாரினில்மயங்கவேண்டாம்
முனைமணிபூண்டதந்தி முகவனுங்காப்பதாமே.

ஆரியமறைகடன்னி லனைவர்க்குமுதவியாகப்
பார்புகழ்முகுந்தன்மைந்தன் பங்கயன்வகுத்தநூலும்
காரணியுமையோர்பாகன் சதாசிவன்சொன்னநூலுஞ்
சிர்பெறவாய்ந்துபார்த்துச் செழித்திடமனைகோல்வாயே.

ஏழடிமுகமுமாகி லெண்ணியதருமந்தீதாம்
வாய்வுடன்பக்கநோய்தான் வந்தவர்தன்னைக்கொல்லுந்
தாழ்விலாவிவரமாகச் சரஸ்வதிசொன்னநூலால்
ஊழ்வினைதீராதிந்த உற்றதோர்மேதம்பாரீர்.

எட்டடியால்நீள வெண்ணியகருமநன்று
துட்டனும்வருவதில்லை தூரத்தேயகன்றுநிற்பான்
பட்டிடமரந்தளிர்க்கு பாக்கியமெத்தவுண்டாம்
வட்டமாங்குழலினாளே மயேசுரன்சொன்னார்பாரே.

ஒன்பதுஅகலநீள மோக்கிடி லுயிரும்போகும்
அன்பதுவயதுமாகு மாயிழைதனக்குச்சாவாம்
சம்புவேபார்த்துசொன்னார் சலிப்புகள்மெத்தவுண்டாம்
வம்பதுசெய்யவேண்டா மறையவர்நூலைப்பாரீர்.

பத்துமேயகலநீளம் பரிவுடன்வைத்தவர்க்கும்
கொத்துடனாடுமாடு குறைவிலாவாழ்வுண்டாகும்
மெத்தவுநன்மையுண்டாம் வேளாண்மைமிகுதியாகும்
கத்தனாரிதுகளெல்லாங் கருதியேசொன்னார்பாரீர்.

பத்துமேயொன்றுமாகில் பரிவுடன்சொல்லக்கேளீர்
சித்தமுங்கலங்கவேண்டாந் தீவினையொன்றுமில்லை
மெத்தவேபாலுஞ்சோறும் வேளாண்மைமிகுதியாகும்
அத்தனாருளிச்செய்தா ராய்ந்துநீ நூலைப்பாரே.

பத்துமேயிரண்டுமாகில் பரிவுடன்சொல்லக்கேளு
தத்துமேசெல்வமெல்லாந் தரணியிலிருப்பதில்லை

சற்றுநீபாராயானால் சதுரமுங்குலைந்துபோகும்
மைத்ததுகூறுபோல வருத்தமுமெத்தவுண்டே.

வாழ்வுதானிறந்தபேர்க்கும் வந்தவர்பகையேயாவார்
ஏழுடனாறுமானா லெண்ணியகருமந்தீதாம்
சூழவேதொல்லையுண்டு சுற்றத்தாரற்றுப்போவார்
தாழ்வதுமெத்தவுண்டு சங்கரர்சொன்னார்பாரே.

எட்டுமேயாருமானா லின்பமுமில்லைகண்டாய்
நட்டமுமுயிருக்கான நலமிலைநாதர்சொன்னார்
கெட்டியாயிந்தநூலைக் கேவலம்பண்ணவேண்டாம்
சட்டமாய்ப்பாரும்பாருஞ் சாஸ்திரம்வேறேவேண்டாம்.

மூவைந்தாமடியதாக முடிந்திடலாகாதென்றும்
நோவினால்மரணஞ்செய்ய நோக்கியகருமமுந்தான்
பாவமும்வந்துநிற்கும் பாக்கியஞ்சேருதென்று
நாவினிலூறுகின்ற நாயகிதனக்குச்சொன்னார்.

பத்துடனாறேயாகில் பாக்கியமிகவுஞ்சேரும்
மெத்தவுந்தனகருண்டு மேன்மையாம்வாழ்வுமுண்டு
சத்துருவிலகிப்போவான் சங்கரர்சொன்னதைப்போல்
பத்தியாமடிமைவந்து பரிவுடன்றொண்டுசெய்வான்.

ஈரைந்துமேழுமாகி லெதிரியும்வணங்கிநிற்பான்
தாரணிகொன்றைசூடுஞ் சங்கரருதயஞ்செய்வார்
பாரினின்மன்னராவர் பாக்கியமிகவுண்டாகும்
சீர்கொண்டுவாழலாகுஞ் செல்வமுமெத்தவுண்டாம்.

எட்டுடன்பத்துமாகி லிலட்சுமியிருப்பதில்லை
பட்டுடன்பணிகளெல்லாம் பாரினில்விலையதாகும்
கட்டுவன்காலன்வந்து காரியைபிணியசாவள்
தட்டுவான்செய்யுமென்றே சங்கரர்சொன்னார்பாரீர்.

ஈரொன்பதொன்றுமாகி லேந்திழையடியாள்சாவள்
பாரினில்கட்டுசெய்யப் பலியாதுதீதுமெத்த
போருடன்கிலேசமுண்டு புத்திரர்மரணமாவர்
மாகுடன்காரியரவண்டா மகாதேவர்சொன்னார்பாரீர்.

இருபதுவடியதானா லேற்றமாமனையுநன்றாம்
பொருடதுவானும்பெண்ணும் பிரபலவின்பமுண்டு
வருவதும்ராசயோகம் வாணியம்பலிக்கும்பாரு
திருவுடன்மகிழ்ச்சிசெய்யுந் திருச்சடைநாதர்சொன்னார்.

நாலாச்சுவொன்றுமாகி னலமுடன்சொல்லக்கேளாய்
பாலுடன்விசுக்கள்மெத்த பாக்கியமிகவுண்டாகுஞ்
சாலவேவாழ்வதற்குச் சஞ்சலமொன்றுமில்லை
மாலுடனீசர்தானு மகிழ்ச்சியாய்ச்சொன்னார்பாரீர்.

உ

கடவுள் துணை.

# மனையடி சாஸ்திரத்தின் அட்டவணை


| பெயர். | பக்கம். |
|---|---|
| **அ** | |
| அலிமரம் | 22 |
| அருக்கனிலை | 36 |
| அட்டதிக்குலட்சணம் | 72 |
| அங்கிஷப்பொருத்தம் | 91 |
| **ஆ** | |
| ஆண்மரம் | 23 |
| **இ** | |
| இதுவும் வளவுகட்டி யிருக்கத் தான லட்சணம் | 6 |
| இராசிவிசேஷம் | 36 |
| இராகுகாலம் | 40 |
| இராசகுளிகன் | ,, |
| இராவிழிப்புராசி | 41 |
| இராசிபலன் | 57 |
| இராகுசாரபலன் | 64 |
| இலக்கின சுபக்கிரக குரூர நிர்ணயம் | 75 |
| இவ்வாரங்களுக்கு கரணம் | 78 |
| இராசிப்பொருத்தம் | 91 |
| **உ** | |
| உதயராசி | 40 |
| **எ** | |
| எந்த மாதங்களில் வாசற்கால் வைத்தாலும் திசை யறிந்து வைக்க | 44 |
| **ஒ** | |
| ஒருமனையில் பாகத்துக்குட்பட்டு வீடு கட்டுவதற்கு லட்சணமாம் | 83 |
| **க** | |
| கடக்கால் சங்குஸ்தாபனம் | 14 |
| கதவுக்கு கெம்புமுனை ஏடுகளுக் கிரட்டைதுவார | 22 |
| கதவுகளிலக்கணம் | 25 |
| கரணபலன் | 61 |
| கயிறுபிடித்தளக்குமிலட்சண | 70 |
| கரணபலன் | 76 |
| கன்னிகாசக்கர | 81 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| **கா** | |
| கால்வைக்க ஏற்றநாள் இலக்கண | 22 |
| **கி** | |
| கிரகாரம்பஞ்செய்ய முக்கியநட்சத்திரங்கள் | 11 |
| கிணறுவெட்டகரைகட்ட | 34 |
| கிரகபாதை | 40 |
| கிரகப்பிரவேசம் | 41 |
| கிணறெடுக்குமிலட்சணம் | 54 |
| கிராமக்ஷேத்திர நிர்ணய ராசகேந்திரசொரூபம் | 68 |
| **கு** | |
| குழியில் நீரும் பூவும் விடுமிலக்கணம் | 20 |
| குழியில் சலம்விடுமிலக்க | 29 |
| குடிபோகுமாதங்கள் | 57 |
| குசசாரம் | 76 |
| குரூரசாரபலன் | 63 |
| குழிகல்லி மண்ணெடுத்துபார்க்குமிலக்கணம் | 70 |
| **கூ** | |
| கூரைக்கால்கட்டல் முகூர்த்தஞ்செய்தல் | 20 |
| **கெ** | |
| கெற்பம்வைக்கப்பேழை | 18 |
| **கோ** | |
| கோயில் கோபுரம் கூட்டம் மனையளவு | 16 |
| கோளச்சக்கரநிலை | 70 |
| **ச** | |
| சனற்குமாரவாஸ்து சொல்லுகிற ஆரம்பவிதி | 9 |
| சங்குஸ்தாபனம் | 17 |
| சராசி | 39 |
| சமையமைந்துக்கும் வாளது அதிகாரம் | 48 |

திண்ணமாயேழைந்தெட்டும் சிறப்பில்லை தீங்குண்டாகும்
நண்ணவேயாறுறெட்டுங் கண்கெட்டுப்போவார்தாமே.

வீட்டுக்கு அறைகள் கூடங்கள் வாசல் முதலானவை.

6 அடி நன்மையுண்டு
7 அடி தரித்திரம்
8 அடி இராச்சியம்
9 அடி பீடை
10 அடி பால்சாதமுண்டு
11 அடி நன்னல்
12 அடி புத்திர ஆனி
13 அடி வியாதியுண்டு
14 அடி சஞ்சலமுண்டு
15 அடி உடனே துன்பம்
16 அடி மிகுந்த செல்வமுண்டு
17 அடி எதிரியஞ்சிநிற்பான்
18 அடி அமர்ந்தமனை பாழாம்
19 அடி தரித்திரம் புத்திரவியாதி
20 அடி இன்பந்தரும்
21 அடி நன்மைதரும்
22 அடி எதிரியஞ்சுவான்
23 அடி தீதுண்டாம்
24 அடி மத்திபம்
25 அடி மனையாள் மரணம்
26 அடி சம்பத்துண்டாம்
27 அடி மிகுந்த செல்வமுண்டு
28 அடி தெய்வகடாட்சமுண்டு
29 அடி பால்பாக்யசெல்வமுண்டு
30 அடி இலட்சுமி கடாட்சம்பெற்று வாழ்வார்
31 அடி தன்பதிலை நன்மையுண்டு
32 அடி முன்னிழந்தபொருள்வரும்
33 அடி நன்மையுண்டாம்
34 அடி குடிவிட்டோடும்
35 அடி லட்சுமிகடாட்சமுண்டு
36 அடி வீரலட்சுமி கடாட்சமுமுண்டாம்
37 அடி கன்றுகாலி முதலானவைகளுண்டாம்
38 அடி பிரமராட்சதன் குடியிருப்பான்
39 அடி மிகுந்தநன்மையுண்டாம்
40 அடி எதிரிகளால் என்னேரமுந்தீது
41 அடி குடும்பசம்பத்துண்டாம்
42 அடி அஷ்டலட்சுமி குடியிருப்பாள்
43 அடி நன்மை கெடாது
44 அடி கண்போம்

வைத்துக் கட்டுவதற்கு அடியளவு அகலநீளம்.

---

துறவுகளெடுக்க அகலநீளம் சுற்றுமுழமறியவும்.

4 அடி துறவுக்கு நிகளம் அடி 8, 15 அடி துறவுக்கு நிகளம் அடி 19, 9 அடி துறவுக்கு நிகளம் அடி 18, 7 அடி துறவுக்கு நிகளம் அடி 21, 8 அடிக்கு நிகளம் அடி 24.

கிணறுவெட்ட கரைகட்ட.

---

ஐப்பசிமீ நடுபந்திலே உத்திரமூன்றும் கேட்டை ரேவதி சித்திரை ரோகணி திருவோணம் அஸ்தம் மிருகசிரம் பூராடம் பஞ்சமி சத்தமி திரிதியை ஏகாதசி திரியோதசி பிரதமை கும்பம் மீனம் மகரம் ரிஷபம் கர்க்கடகம் சுபவாரங்களும உத்தமம் சித்திரை நடுப்பத்தில் முன்சொன்னபடியேகூடிய சுபதினத்தில் கரைகட்ட உத்தமம்.

| நட்சத்திரம் மிருகம் பட்சி மரம் | கணம். |
|---|---|
| அசுவினி குதிரை இராஜாளி எட்டி | தேவகணம் |
| பரணி யானை காக்கை நெல்லி | மனுஷகணம் |
| கார்த்திகை ஆடு மயில் அத்தி | இராட்சதகணம் |
| உரோகணி பாம்பு ஆந்தை நாவல் | மனு |
| மிருகசிரம் சார கோழி கருங்காலி | தேவ |
| திருவாதிரை நாய் அன்றில் செங்கருங்காலி | மனு |
| புனர்பூசம் பெண்பூனை அன்னம் மூங்கில் | தேவ |
| பூசம் கடா நீர்க்காக்கை அரசு | தேவ |
| ஆயிலியம் ஆண்பூனை கிச்சிலி புன்னை | இரா |
| மகம் ஆணெலி ஆனழகு ஆல் | இரா |
| பூரம் பெருச்சாளி பெண்கழுகு பலாசு | மனு |
| உத்திரம் எருது சிவளவண்டு அலரி | தேவ |
| ஆஸ்தம் எருமை பருந்து ஆத்தி | தேவ |
| சித்திரை ஆண்புலி மரங்கொத்தி வில்வம் | இரா |
| சோதி காக ஈமருந்து | தேவ |
| விசாகம் பெண்புலி செவ்வாற் குருவிளா | இரா |
| அனுஷம் பெண்மான் வானம்பாடி மகிழ் | தேவ |
| கேட்டை கலை சக்கரவாகம் பிராய் | இரா |
| மூலம் பெண்ணாய் செம்போத்தி மாரா | இரா |
| பூராடம் ஆண்குரங்கு கவுதாரி வஞ்சி | மனுஷ |
| உத்திராடம் மலட்டுப்பசு வலியன் பாலா | மனுஷ |
| திருவோணம் பெண்குரங்கு நாரை யெருக்கு | தேவ |
| அவிட்டம் காமதேனு வண்டு வன்னி | இரா |
| சதயம் பெண்குதிரை அண்டங்காக்கை கடம்பு | மனு |
| பூரட்டாதி புருஷாமிருகம் உள்ளான் மதா | மனு |
| உத்திரட்டாதி பாற்பசு கோட்டான் வேம்பு | மனு |
| ரேவதி பெண்யானை வல்லூரு இலுப்பை | தேவ |

### நாமநட்சத்திர எழுத்துக்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சு | சே | சோ | லா | அச்சுவனி |
| லீ | லு | லே | லோ | பரணி |
| ஆ | ஈ | ஊ | ஏ | கார்த்திகை |
| ஐ | வா | வி | வு | ரோகணி |
| வே | வோ | கா | கி | மிருகசிரம் |
| கூ | கா | ஙு | ச | திருவாதிரை |
| கெ | கோ | ஹ | ஹி | புநர்பூசம் |
| கு | ஹே | ஹோ | ட | பூசம் |
| டீ | டு | டே | டோ | ஆயிலியம் |
| மா | மீ | மூ | மே | மகம் |
| மோ | டா | டி | டு | பூரம் |
| டே | டோ | பா | பி | உத்திரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| பூ | ஷ | நா | ட்டா | அஸ்தம் |
| பே | போ | ரா | ரி | சித்திரை |
| ரு | ரே | ரோ | த | சோதி |
| தி | து | தே | தோ | விசாகம் |
| நா | நீ | நூ | நே | அநுஷம் |
| நோ | யா | இ | யூ | கேட்டை |
| எ | யோ | ப்பா | ப்பி | மூலம் |
| மூ | தா | ப | ட | பூராடம் |
| பே | போ | ஜா | ஜி | உத்திராடம் |
| ஜ | ஜெ | ஜோக | க | திருவோணம் |
| க | கி | கு | கே | அவிட்டம் |
| கோ | ச | சி | சூ | சதயம் |
| ஸே | ஸோ | தா | தி | பூரட்டாதி |
| தூ | ஸ | த்தா | த்தி | உத்திரட்டாதி |
| தே | தோ | ச்சா | ச்சி | ரேவதி |

அருக்கனிலை.

சனிக்கிழமை ராத்திரி 30-நாழிகையும்ஞாயிற்றுக்கிழமை பகல் 30-நாழிகையும் தெற்கிலும், ஞாயிற்றுக்கிழமைராத்திரி30-திங்கட்கிழமை 60-தென்மேற்கிலும், செவ்வாய்க்கிழமை பகல் 30-ம் வடமேற்கிலும் புதன்கிழமை இராத்திரி 30-ம் வியாழக்கிழமை 60-ம் வடகிழக்கிலும் சனிக்கிழமை பகல் 30-ம் கிழக்கிலும் அருக்கனிருக்கும் அக்கினிமூலை பாழாம்.

திசையோனிநிலை.

| | | | |
|---|---|---|---|
| கருடன் | கிழக்கு | பூனை | தென்கிழக்கு |
| சிங்கம் | தெற்கு | நாய் | தென்மேற்கு |
| பாம்பு | மேற்கு | எலி | வடமேற்கு |
| யானை | வடக்கு | முசல் | வடகிழக்கு |

அருக்கனில்கருடனைவைத்துமுறையேபார்க்கும்போதுஎதிர்த்தெதிர் பகை யோனியிற்கும் அவைகளுள் கருடன் திசையி லிருந்து பாம்புத் திசைக்குப் போகலாம் பாம்பு திசையிலிருந்து கருடன் திசைக்குப் போகலாகாது ஏனெனில், கருடன் இரையெடுக்கப்போகும் பாம்பு இரையாகவரும் ஆதலா லெண்க ஒருவன் யாத்திரைக்கு பட்சிமுதலிய சகுனங்கள் பார்க்கும்போது இரையாகும் யோனித் திசையிலிருந்து இரையெடுக்கும்யோனித்திசைக்கு அவைபோலாக.

கவி.

அருக்கனிலையிற் கருடனுனதொருபூனை
நெருக்கியநற்சிங்கமொடு நின்றிலகுநேர்நாய்

தருக்கமுடனுகமெலி யானைமுதலெட்டும்
இருக்குமுதலிந்திரனே ராமபகையெதிர்த்தே.

## இராசி விசேஷம்.

| | |
|---|---|
| விவாகத்துக்கு-மேஷம் | திதிகொடுக்க-ரிஷபம் |
| யாத்திரைக்கு-மிதுனம் | மரம்வைக்க-கர்க்கடகம் |
| குருவைக்காண-சிங்கம் | புணர்ச்சிக்கு-கன்னி |
| வீடுகட்ட-துலாம் | உழவுக்கு-விரிச்சிகம் |
| கிணறுவெட்ட-தனுசு | கப்பல்யாத்திரைக்கு-கும்பம் |

## மட சுத்தம்.

குடிபுக 21-ம் முடிசூட்ட 19-ம்
அன்னப்பிராசனத்துக்கு 10-ம் மயிர்கழிக்க 3-ம்
உபநயனத்துக்கு 8-ம் விவாகத்துக்கு 7-ம்
கோடியுடுக்க 6-ம் யாத்திரைக்கு 5-ம்
வித்தியாரம்பத்துக்கு 4-ம் பொன்பூண 2-ம்

தீஷகத்துக்கு லக்கினம் சுத்தமாக இருக்கவேண்டும்.

ஞாயிறு உத்தியோகஞ்செய்ய, திங்கள் விதைவிதைக்க, செவ்வாய் போர்செய்ய, புதன் வித்தியாரம்பஞ்செய்ய, வியாழம் விவாகஞ்செய்ய, வெள்ளி மயிர்கழிக்க, சனி தவஞ்செய்ய உத்தமம்.

## விஷ்டி தோஷம்.

பூர்வபட்ச சதுர்த்தசியில் 5-ம் சாமம் மேற்கிலேயும் அஷ்டமியில் 2-ம் சாமம் தென்கிழக்கிலேயும் ஏகாதசியில் 7-ம் சாமம் வடக்கிலேயும் அமரபக்ஷத் திரிதிகையில் 6-ம் சாமம் வடமேற்கிலேயும் சத்தமியில் 3-ம் சாமம் தெற்கிலேயும் தசமியில் 8-ம் சாமம் வடகிழக்கிலேயுஞ் சதுர்த்தசியில் முதற்சாமம் கிழக்கிலேயும் விஷ்டிபண்ணுதலால் இச்சாமங்களில் சுபகாரியங்களு மித்திசையில் யாத்திரையுஞ் செய்யலாகா.

## கவி.

மன்னுமுதற்சதுர்த்தியினி லைந்தாஞ்சாமம்
  மருவிவட்டமியிரண்டு பன்னொன்றேழாம்
முன்னிதுவாநாற்சாமம் பிற்பக்கத்தின்
  மூன்றிலிருமூன்றேழின் மூன்றுஞ்சாமம்
பன்னியபிற்பத்தினிலே யெட்டாஞ்சாமம்
  பதினான்கின்முதற்சாமம் பகர்ந்தவிஷ்டி
இன்னதனையச்சாமம் பெற்றுமற்றை
  யிரவிமுதற்றிசைகடை தென்றுமாமே.

சூரியநின்ற சட்சத்திரத்திற்கும் 7-ம் நட்சத்திரம் உற்பாதமென்றும் 10-ம் நட்சத்திரம் தாரகமென்றும் 15-ம் நட்சத்திரம் பிரமதண்டமென்றும் 21-ம் நட்சத்திரம் காலனென்றும் பேராம்.

செவ்வாய்நின்ற நட்சத்திரத்துக்கு 7-ம்நட்சத்திரஞ் சூலமென்றும் 10-ம் நட்சத்திரஞ் சக்கரமென்றும் 15-ம் நட்சத்திரம் கண்டமென்றும் 21-ம் நட்சத்திரங் காலனென்றும் பேராம்.

புதன்நின்ற நட்சத்திரத்திற்கு 8-ம் நட்சத்திரமும் 18-ம் நட்சத்திரமும் 24-ம் நட்சத்திரமுங் கண்டமென்றும் பேராம்.

சுக்கிரனின்ற நட்சத்திரத்திற்கு 7-ம் நட்சத்திரமும் 9-ம் நட்சத்திரமும் வியாழம்நின்ற நட்சத்திரத்துக்கு 7-ம் நட்சத்திரமும் 9-ம் நட்சத்திரமுங் கொடுமையென்று பேராம்.

சனிநின்ற நட்சத்திரத்துக்கு 5-ம் நட்சத்திரமும் 9-ம் நட்சத்திரமும் 10-ம் நட்சத்திரமும் 11-ம் நட்சத்திரமும் 20-ம் நட்சத்திரமும் பந்தமென்று பேராம்.

இராகு கேதுநின்ற நட்சத்திரங்களுக்கு 7-ம் நட்சத்திரம் பரிசமென்று பேராம் இவை சுபகாரியங்களுக்கு ஆகாவாம்.

### மாதங்களில் கரிநாள் வருந் தேதிகள்.

சித்திரைமீ 6-15
வைகாசி 7-16-17
ஆனி 1-6
ஆடி 2-10-20
ஆவணி 2-9-28
புரட்டாசி 16-29
ஐப்பசி 6-20
கார்த்திகை முதற்சோம
வாரமும் 1-10-17
மார்கழி 6-9-11
தை 1-2-3-11-17
மாசி 15-16-17
பங்குனி 6-15-19

### கவி.

இன்பமுறுமேடம்பதி னுறுபதினைந்தாம்
ஏறதனலாறுபதி னுறுபதினேழாம்
அன்பிலகுமானியென மாடலவன்ரண்டோ
டையிரண்டுமையநான்கு மாவணியிரண்டும்
ஒன்பதெழுநான்குதனி லுற்றபதினொரு
டொன்றொழிப்பான் றுனையிலோசாறுதேளில்
முன்சோமவாரமொன்று பத்துபதினொன்றுமுதலாநாள்
முளியாறுமொன்பதும் பதினொன்றுமுதலாநாள்
பாதவாதநாள்தலையி லொன்றிரண்டுமூன்று
மொருபதினொன்று பதினேழதுவுமாதா
துதிபெருகுமாசிபதினைந்து பதினாறுஞ்
சொல்லுபதினேழுகண்ட மாகமதிலாறும்
பதினைந்துமொன்றொழியை நான்குமிகுதிதாம்
பகர்ந்தமாதந்தோறுஞ் செய்தியெனக்கொண்டு

கதிதருநற்பொதியவரை முனிவனுரைத்திட்ட
கரிநாண்முப்பாநான்குங் கண்டறிகுவீரே.

ஞாயிறுக்கு 60 நாழிகைக்குமேலும் திங்கள் புதனுக்கு 42 க்குமேலும் செவ்வாய்க்கும் வியாழத்துக்கும் 33 க்கு மேலும் வெள்ளிக்கு 21 க்கு மேலும சனிக்கு 14 க்கு மேலும் மூணேமுக்கால் நாழிகை தியாச்சியமாம்.

க வி.

ஞாயிறுநாளெட்டா நற்றிங்களீராறும்
தீயசேய்பொன்முப்பத் தொன்றுகும்-ஏயபுதன்
நாற்பதிரண்டாகு நல்லவெள்ளிமூவேழாம்
காற்கனியீரேழுவிஷம் காண்.

நட்சத்திர தியாச்சிய துவிதமாவன.

| | | | |
|---|---|---|---|
| அஸ்வனி | 50 | சோதி | 14 |
| பரணி | 24 | விசாகம் | 14 |
| கார்த்திகை | 30 | அநுஷம் | 10 |
| உரோகணி | 20 | கேட்டை | 14 |
| மிருகசிரம் | 14 | மூலம் | 29, 56 |
| திருவாதிரை | 11 | பூராடம் | 24 |
| புநர்பூசம் | 30 | உத்திராடம் | 24 |
| பூசம். | 30 | திருவோணம் | 10 |
| ஆயிலியம் | 32 | அவிட்டம் | 10 |
| மகம் | 30 | சதயம | 19 |
| பூரம் | 22 | பூரட்டாதி | 18 |
| உத்திரம் | 18 | உத்திரட்டாதி | 24 |
| அஸ்தம் | 22 | ரேவதி | 20 |
| சித்திரை | 12 | | |

இந்நாழிகைக்குமேல் 4 நாழிகை தியாச்சியம்.

லக்கினத்தியாச்சியம்.

மேஷம் ரிஷபம் கன்னி தனுசு ஆக 4 ம் முதலில் அரைநாழிகையும, மிதுனம் சிங்கம் துலாம் கும்பம் ஆக 4 க்கும் நடுவில் அரை நாழிகையும்.

கர்க்கடகம் விரிச்சிகம் மகரம் மீனம் ஆக 4 க்கும் கடையில் அரைநாழிகையுமாம்.

சரராசியாவன.

மேஷம் கர்க்கடகம் துலாம் மகரம் ஆக-4.

ஸ்திரராசி.

ரிஷபம் சிங்கம் விரிச்சிகம் கும்பகம் ஆக-4.

## உபராசி.

மேஷம் மிதுனம் சிங்கம் துலாம் தனுசு கும்பம் ஆக 6.

## இராகுகாலக் கவி.

அரியிருபத்தாறேகா லம்புவிமூன்றேமுக்கால்
எரிவண்ணனிருப்போ டிரண்டரைபுதன்வைந்து
குருபதினெட்டேமுக்கால் குளிவெள்ளிப்பதினொன்றேமுக்கா
கரியனேழரையிராகு காலமென்றறிந்துக்கொள்ளே.

## வாரகுளிகன்.

| பகல். | | இரா. | |
|---|---|---|---|
| ஞாயிறு | $62\frac{1}{4}$ | ஞாயிறு | $11\frac{1}{4}$ |
| திங்கள் | $22\frac{1}{2}$ | திங்கள் | $7\frac{1}{2}$ |
| செவ்வாய் | $18\frac{1}{2}$ | செவ்வாய் | $3\frac{3}{4}$ |
| புதன் | 15 | புதன் | $26\frac{1}{4}$ |
| வியாழம் | $11\frac{1}{4}$ | வியாழம் | $22\frac{1}{2}$ |
| வெள்ளி | $7\frac{1}{2}$ | வெள்ளி | $18\frac{3}{4}$ |
| சனி | $3\frac{3}{4}$ | சனி | 15 |

ஞாயிறுமுகூர்த்தமேழா நன்மதிக்காறுஞ்செவ்வாய்த்
தூயநற்புகர்க்கிரண்டாஞ் சுன்னினுக்கென்றதாகும்
ஆவியமுகூர்த்தத்தோடே யற்றிடும்குளிகமெல்லில்

## இராக்குளிகன்.

கதிரவன்றனக்குமூன்றுங் கவின்மதிக்கொன்றதாகும்
சதிபெறுசெவ்வாய்க்கொன்று சாற்றியபுதற்கேழாகும்
மதிவளர்பொன்னுக்காரன் மன்புதர்கனகந்நான்கு
கதிர்மகர்காமுகூர்த்தங் காண்டியபுகல்போறகொள்ளே.

## கிரகபார்வை. (Aspecting)

குரு 5 7 9 ஐயும் சனி 3 7 ஐயும்
செவ்வாய் 4 7 ஐயும் குளிகன் 7 10 ஐயும்
மற்றக்கிரகங்கள் 7 ஐயும் பார்ப்பார்.

## பார்வையினளவு.

1 7 முழுப்பார்வை 8 9 முக்காற்பார்வை
5 அரைப்பார்வை 4 10 காற்பார்வை
3 11 அரைக்காற்பார்வை.

சேருமுதன்மேதிங்கள் முழுநோக்கிகென்பாமெனட்டுமனை
பாருந்தவரைநோக்கம் பத்துநான்குங்காணோக்கம்
ஆறுமூன்றும்பன்னொன்று மனைக்காணோக்கமாறுடனே
நாரியிரண்டும்பன்னிரண்டு நாட்டமில்லைகவனோட்டே.

## கிரகப்பிரவேசம்.

ஆனி ஆடி புரட்டாசி மார்கழி மாசி பங்குனி மாதங்களும் ஞாயிறு செவ்வாய் வியாழம் அசுவனி மிருகசிரீடம் புனர்பூசம் அஸ்தம் சித்திரை சோதி மூன்றுத்திரங்கள் அனுஷம் திருவோணம் தவிர மற்ற நட்சத்திரங்களும் விருச்சிகம் கும்பம் இருத்தையும் ஆகலாம் அஷ்டம சுத்தமுள்ள லக்கின முத்தமம்.

## இராவிழிப்பு ராசியாவன.

மேஷம் ரிஷபம் மிதுனம் கர்க்கடகம் தனுசு மகரம் ஆக-6

## பூமிசல்லியவேறு.

களத்திரந்தானந்தன்னிற் கனியொடுமுமியெலும்பும்
வலத்துடன்மனையினின்றால் மனையவள்மரணமாவாள்
விளைத்திடுந்துன்பமெல்லாம் வியாதியாஞ்சங்கபீடை
கிளைத்திடுங்குலங்கள்யாவும் கெடுதியாம்மயன்சொன்னரே.

இ-ள். உதயவாரூடமாகி ஏழாமிடத்தில் கிரகங்கள் நிற்குமாகில் அதற்கு ஒன்று நான்கு ஏழுகுலத்தில் சந்திரனின்றால் சல்லியமிருக்கிறதென்று நிச்சயமாய்ச் சொல்லப்படும் அதன் பலன் ஸ்திரிகளைக் கொல்லும் குலத்துக்குக் கெடுதிவரும் பொருட்சேதமும் உயிர்சேதமுண்டாகும் அம்மனையில் சௌக்கியமில்லை-எ-று. 98

சாம்பலோடெலும்புகூடித் தழைத்திடுமனையினின்றால்
சோம்பலேமிகவுண்டாகும் சுகமதற்கில்லைகண்டாய்
பாம்பினாலச்சமுண்டாம் பாரியால்விரோதமுண்டு
நாம்பலநூல்கள்பார்த்து ஞாயமாய்வகுத்தவாரே.

இ-ள். உதயவாரூடங்களில் கிரகங்கள் நிற்கில் அதற்குக்கேந்திரங்களில் சந்திரனின்றால் அந்தமனையில் சாம்பலுள்ளஎலும்பும் இருக்குமென்றறியவேண்டும் இதற்குப்பலன் சோம்பலும் பாம்பினால் அச்சமும் உண்டு பாரியால் விரோதம் சம்பவித்து நசிக்கும் சங்கைபீடையென்று சொல்லவேண்டும்-எ-று. 99

புத்திரஸ்தானந்தன்னிற் பொருந்தியசல்லியங்கள்
தத்துவமானகல்லு தரித்திடுந்தங்கள்சட்டை
பெற்றிடவெலும்புகூடிப் பெரியவம்மனையினின்றால்
அற்றிடுங்குலங்களென்று ஐயனுமயன்சொன்னரே.

இ-ள். உதயவாரூடத்திற்குஐந்தாமிடத்தில்கிரகங்கள் நின்று அதற்குகேந்திரங்களில்சந்திரனின்றால்கருங்கல்லும்மரமும்கட்டை

யும் எலும்பும் இருக்கிறதென்று சொல்லவேண்டும் அதற்குப் பலன் குலமல்லாத புருஷர்களை அடக்கும்-எ-று. 100

உயிர்கற்கிகண்டத்தி லுற்றதோர்சல்லியங்கள்
மயிர்முனைகூடிநின்றால் மன்னவர்தமக்குமாசா
தயிரியம்பலன்சம்பத்து தானதுமழியுமென்றே
குயின்மொழியுடையமாதே குறிப்புடன்சொல்லினாரே.

இ-ள். உயிரென்பது ஆரூடலக்கினம் சந்திரலக்கினம் இதற்கு இரண்டாமிடத்தில் சந்திரனின்றால் அது சல்லியமென்றறிவது அதற்குப்பலன் அந்த வீட்டெஜமானுக்காகாது தைரியம் பலன் சம்பத்து இவைகளெல்லாமழியும்-எ-று. 101

கருங்கல்லோடெலும்புகூடிக் காரியத்தானந்தன்னில்
இரும்பொடுகுறுவுங்கட்டை ஈயம்பித்தளை தான்சேர்ந்தால்
அரும்பொருணாசமாகு மம்மனையழியுமென்றே
தருந்திருப்புவனமாதே சாஸ்திரமயன்சொன்னாரே.

இ-ள். காரியத்தானத்திற்கு பத்தாமிடத்தில் கிரகங்கள்நின்றால் கருங்கல் எலும்பு துரா ஈயம் பித்தளை இவைகளிலொன்றிருக்கும் அதற்குப்பலன் பொருளழிந்து மனிதர் சேதமாகி அந்தமனை எடுபட்டுப்போம் பயங்கரமான சொற்பனமுண்டாம்-எ-று. 102

ஆறெட்டுப்பன்னிரண்டி லானதோர்சல்லியங்கள்
கூறிட்டுநின்றதானால் குற்றமேயில்லைநன்மை
வீறிட்டலாபமேழு வித்தைசேர்மூன்றினின்றாற்
பேறிட்டசல்லியங்கள் பெரும்பிணிமிகவுண்டாமே.

இ-ள். ஆறுமிடம் எட்டாமிடம் பன்னிரண்டாமிடம் இவைகளில் கிரகங்கள் நின்றால் சல்லியமுண்டு பெரும்பிணியாக கன்மவியாதி யுண்டாகும்-எ-று. 103

சாடியோடெலும்புகூடித் தழைத்திடுமனையில்நின்றால்
ஓடியகப்பலாழி யுடைந்ததுபோலேயோகங்
கூடியேமனையிநின்றாற் குலந்தனைநாசஞ்செய்யும்
பாடியேமயனார்சொன்னார் பயனறிந்துரைக்கவாரே.

இ-ள். சாடியொடு எலும்பா யிருக்கிறதென்று உதயலக்கினத்தில் கிரகங்கள்நின்றால் அதற்குக்கேந்திரங்கள் சந்திரனின்றால் சல்லியமுண்டென்றறியவும் அதற்குப்பலன் ஓடிவருகிற கப்பல் சமுத்திரத்தில் உடைந்தாப்போல் யோகமானது ஸ்திரீகளை மரணமாக்கும் குலத்துக்கெல்லாம் கேடு நேரிடும்-எ-று. 104

ஆரூடந்தன்னிலாகு மதற்குநாளேழுபத்தில்
காரியுமதியுநின்றால கரிபொடுவுமியெலும்பு
வீரியமுடனேகாணு மேலதற்கிரண்டுமூன்றை
சூரியன்மதியுநின்றால் ஆணியுமிருக்குந்தானே.

இ-ள். ஆரூடராசிகளில்உதயத்தில்இராகுநின்றாலும்எழுநாலு பத்தில் சனியும் சந்திரனும் நின்றாலும் கரி எலும்பு இறைகளிருக்கி

றதென்று சொல்லவேண்டியது அதற்குப்பலன் இரண்டு மூன்றில் சந்திரனும் சூரியனும் கூடிநிற்கில் சிலை கருங்கல் காணும் செவ்வாய் கூடிநின்றால் வெண்கலம் பித்தளை ஓடு எலும்பு ஈயம் இவைகளிருக்கு தென்று சொல்லுவது-எ-று.

உதயவாரூடந்தன்னி லுடலுயிரறியவேண்டில்
மதியமாய்வந்தநாட்கள் வருமுழுநாள்கடன்னிற்
புதியதாயுடலிதென்றும் பிரபல்லியமாகவெண்ணிப்
பதியவேபலன்கள்சொல்வாய் பகர்ந்தனன்மறையுமாதே.

இ-ள். உதயவாரூடராசியில் சந்திரநின்ற ராசியில் உடலென்றும் உதயாரூடம் உயிரிரண்டும் இந்த ராசிகளில் முழுநாளை யெண்ணிப் பலன்சொல்லும்-எ-று. 106

கெட்டலக்கினத்திற்காயுஞ் சூரியன்செவ்வாய்ராகு
திட்டநாலேழுபத்திற் சிரணமதியேசேர்ந்தாற்
பட்டிடுமரங்கள்கட்டை பானையோடெலும்புசாம்பல்
சட்டமாயிருக்குதென்றே தார்சடைமுனிசொன்னரே.

இ-ள். யாதாமொருவர் கேட்கவரில் அவரை ஒரு ராசியைத் தொடச்சொல்லி அந்த ராசிக்குச் சனி சூரியன் செவ்வாய் ராகு நாலாமிடம் ஏழாமிடம் பத்தாமிடம் அமரபட்சஞ் சந்திரனுங் கூடியிருந்தால் பட்டமரமும் பானையோடும் எலும்புஞ் சாம்பலு மிருக்குதென்று சொல்லவேண்டும்-எ-று.

அதற்குமேலேழுபத்தில் மந்திரிபுத்திகூடி
அதற்குமூன்றெட்டிலாறி லாநித்தன்வலமதாகில்
இதற்குமோர்பத்தினாலே யிருந்தவன்பெலவானானல்
நிதிக்குளோர்பயனேசொல்லும் நிச்சயமயன்சொன்னரே.

இ-ள். சந்திரனுக்கு நாலாமிடம் ஏழாமிடம் பத்தாமிடம் இராஜனாகிலும் புதனாகிலும் நிற்கில் அதற்கு 3-6-8-ல் சூரியனிருந்தால் நிதியுண்டென்று சொல்லவேண்டும்-எ-று. 108

சுக்கிரனுக்கெதிரேபுந்தி தோன்றியகாரிமன்னன்
வககியமில்லாதிருந்தால் மன்னவர்க்காறில்மைந்தன்
மிக்கவேதிரவியங்கள் நிலந்தனிலுள்ளதாகும்
பக்குவமானவெள்ளி பாரினில்மிகவுண்டாமே.

இ-ள். சுக்கிரனும் புதனுங்கூடி அதற்கெதிர் இராச னிருக்க இவர்கள் வக்கிரமில்லாதிருக்க இராசனுக்காறில் சனியிருக்க அந்தப் பூமியில் திரவியமுண்டு அதில்லாவிடில் வெள்ளியாகிலு மிருக்குமென்று சொல்லவேண்டும்-எ-று. 109

வீடுகளுக்கு தெரு வாசற்கால்வைக்கு மிலக்கணம்.

ஆவணிமாதம்கட்டும் வீட்டுக்குக் கிழக்குப்பார்த்த வாசற்படி வைக்கலாம்.

கார்த்திகைமாதம் கட்டும் வீட்டுக்கு தெற்குபார்த்த வாசற்படி வைக்கலாம்.

மாசிமாதங் கட்டும் வீட்டுக்கு மேற்குபார்த்த வாசற்படி வைக்கலாம்.

வைகாசிமாதம் கட்டும் வீட்டுக்கு வடக்குபார்த்த வாசற்படி வைக்கலாம்.

எந்தமாதங்களில் வாசக்கால் வைத்தாலும் திசையறிந்து வைக்கவேண்டும்.

கடகம் சிங்கம் இந்த இரண்டுராசியில் சூரியநிற்க வீடுகட்டினல் கிழக்குபார்த்த வாசற்படி வைக்கலாம்.

துலாம் விருச்சிகம் இவ்விரண்டு ராசியிலுஞ் சூரியனிருக்க வீடுகட்டினல் தெற்குபார்த்த வாசற்படி வைக்கலாம்.

மகரகும்பம் இவ்விரண்டு ராசியிலுஞ் சூரியனிருக்க வீடுகட்டினல் மேற்குபார்த்த வாசற்படி வைக்கலாம்.

கன்னி மிதுனம் தனுசு மீனம் இந்த ராசிகளில் சூரியனிருக்க வீடுகட்டினல் வாசற்கால் வைக்கலாகாது.

மற்ற ராசிக்காரர் விருச்சிகம் மீனம் கடகம் இந்த மூன்று ராசிக்காரருக்குங் கிழக்கு பார்த்தவீடு.

ரிஷபம் மகரம் இந்த ராசிக்காரருக்கு தெற்குபார்த்தவீடு.

துலாம் மிதுனம் கும்பம் இந்த மூன்று ராசிக்காரருக்கு மேற்கு பார்த்தவீடு.

தனுசு மேஷம் சிங்கம் இந்த மூன்று ராசிக்காரருக்கும் வடக்குப்பார்த்தவீடு.

துலாம் இந்த திக்கிலிருக்கிற ராசிக்கு கர்த்தன் காம் ராசிக்கு மித்துருத்து மாகையால் நல்லது.

## திசையறிந்து வாசற்கால் வைக்கும் விதி.

கிழக்குப்பார்த்த வாசற்படியுள்ள வீட்டுக்கு ஈசான்யமுதல் அக்கினிமூலைவரைக்கு மளந்து அதை 8-பாகம் பண்ணினல் முதற் பாகம் ஆனி.

| | |
|---|---|
| 2-வது பாகம் | சோரம் |
| 3-வது பாகம் | தனப்பிராப்தி |
| 4-வது பாகம் | இராஜ அனுமானம் |
| 5-வது பாகம் | புத்திர்விர்த்தி |
| 6-வது பாகம் | சுகம் |
| 7-வது பாகம் | துக்கம் |
| 8-வது பாகம் | ரோகம் |

மேற்குப்பார்த்த வாசற்படிக்கு நிருதி மூலைமுதல் வாயு மூலை வரைக்கும் அளந்து 8-பாகம் பண்ணினல்.

| | |
|---|---|
| 1-வது பாகம் | ஆனி |
| 2-வது பாகம் | சத்துருவிர்த்தி |
| 3-வது பாகம் | சுகம் |
| 4-வது பாகம் | தனம் |
| 5-வது பாகம் | பாக்கியம் |
| 6-வது பாகம் | சுகம் |
| 7-வது பாகம் | பயம் |
| 8-வது பாகம் | நாசம |

வடக்குப்பார்த்த வாசற்படிக்கு வாயுமூலைமுதல் ஈசான்யமூலை வரைக்கும் அளந்து எட்டுபாகஞ்செய்தால்.

| | |
|---|---|
| 1-வது பாகம் | மனையாள் நாசம் |
| 2-வது பாகம் | பலயீனம் |
| 3-வது பாகம் | தசஆனி |
| 4-வது பாகம் | தானியவிர்த்தி |
| 5-வது பாகம் | தனம் |
| 6-வது பாகம் | சௌக்கியம் |
| 7-வது பாகம் | துக்கம் |
| 8-வது பாகம் | பாதகர்மம் |

தெற்குபார்த்த வாசற்படிக்கு அக்கினி மூலைமுதல் நிருதிமூலை வரையில் எட்டுபாகம் பண்ணிஞல்.

| | |
|---|---|
| 1-வது பாகம் | தனஆனி |
| 2-வது பாகம் | சத்துருவிர்த்தி |
| 3-வது பாகம் | சுகம் |
| 4-வது பாகம் | தனவரவு |
| 5-வது பாகம் | பாக்கியமுண்டாம் |
| 6-வது பாகம் | நன்மையுண்டாம் |
| 7-வது பாகம் | பயம் |
| 8-வது பாகம் | நாசமாம் |

இந்தப் பாகங்களின் இயற்கை தெரிந்து நல்ல பாகத்தைப் பார்த்து வாசற்கால் வைக்கவேண்டியது.

நவக்கிரகபலன்களறிந்து வாசற்கால் வைக்கும் நிர்ணயம்.

கிழக்குப்பார்த்த வாசற்படிக்கு ஈசானியமுதல் அக்கினிமூலை வரைக்கும் 9-ம் வரைக்கும் பண்ணவும்.

தெற்குப்பார்த்த வாசற்படிக்கு அக்கினிமூலைமுதல் நிருதி மூலை வரைக்கும் 9-பாகம் பண்ணவும்.

மேற்குப்பார்த்த வாசற்படிக்கு நிருதி மூலைமுதல் வாயுமூலை வரைக்கும் 9-பாகம் பண்ணவும்.

வடக்குப்பார்த்த வாசற்படிக்கு வாயுமூலைமுதல் ஈசானிய மூலை வரைக்கும் 9-பாகம் பண்ணவும்.

இந்நான்கு திசைக்கும் முதற்பாகம் சூரியன் 2-வது பாகம் சந்திரன் 3-வது பாகம் அங்காரகன் 4-வது பாகம் புதன் 5-வது பாகம் குரு 6-வது பாகம் சுக்கிரன் 7-வது பாகம் சனி 8-வது பாகம் ராகு 9-வது பாகம் கேது இந்த நவக்கிரபாகத்தில் பிரகஸ்பதியிருக்கிற பாகத்தில் பிரதானம் கோயிலுக்கு வாசக்கால் வைக்கலாம்.

சுக்கிரன் பாகத்தில் வீட்டிற்கு வாசக்கால் வைக்கலாம்.

புதன் பாகத்தில் மாட்டு தொழுவத்திற்கு வாசக்கால் வைக்கலாம்.

மேலும் புதன் குரு சுக்கிரன் இவைகளில் கோயிலுக்கும் வீட்டிற்கும் மாட்டுத் தொழுவத்திற்கும் வாசக்கால் வைக்கலாம்.

வாசக்காலுக்கு இடதுபக்கத்தில் கதவு வைக்கப்படும்.

இப்பால் ஏழுசாணீளமும் 3-சாணகலமுள்ள வாசக்கால் உத்தமம் 9-சாணீளமும் 5-சாணகலமுள்ள வாசக்காலும் உத்தமம்.

இரண்டு மரத்தினால் வாசற்கால் பண்ணலாகாது மூன்றுவித மரத்தினால் கட்டில் செய்யலாகாது.

கதவுக்கு ஒற்றைப்படை பலகைசேர்த்து செய்யவேண்டும் இரட்டைப் பலகைசேர்த்துப் பண்ணலாகாது.

வீட்டு வாசற்படிக்கு எதிரில் கட்டைச் சுவரிருந்தால் சத்துரு பயமாம்.

தெருவாசற்படி யுயர்ந்து உள்வீட்டு வாசற்படி தாழ்ந்திருக்கக்கூடாது அப்படியிருக்கில் வரும்பலன் நீங்கிவிடும்.

முகூர்த்தம்.

ஆலயநகரம்பட்டணங்கிரக மழியஷ்டதடாககூபமுமாஞ்
சீலவாஞ்சிற்பன்செய்கின்றகிரியைச் செய்வதைநீக்கியவேறோர்
தாலத்திலன்னியசாதியோன் செய்தாற்றூனுமன்னவர்தமக்குஞ்
சாலவேகாத்தன்றனக்குமேதோஷச் சஞ்சலமதுவுமுண்டாமே.

இ-ள். ஆலயங்கள் பட்டணங்கள் கிரகங்கள் தடாகங்கள் கிணறுகளிவைகளை சிற்பன் கையால் செய்யாமல் அன்னியவர்னத்தான் கையினால் முகூர்த்தஞ்செய்தால் அரசர்க்கு எஜமானுக்கு மாகாது.

முழக்கோல்.

நுண்ணியயவனிலெட்டு நுரீகிடிற்பஞ்சின்றாளா
மெண்ணியபஞ்சின்றாளோ கொட்டடம்மயிர்முனைக்கு
நண்ணியமயிரின்கூர்மை நவிலெட்டுநலமதாகுந்
திண்ணமாங்கடுகுவெட்டிச் செப்பவேணுமொன்றுமே.

இ-ள். அணு எட்டுகொண்டது ஒருபஞ்சின்றாள், பஞ்சின்றாள் எட்டுகொண்டது ஒரு மயிர்பனை, ஒரு மயிர்பனை எட்டுகொண்டது ஒருமணல், மணல் எட்டுகொண்டது ஒருகடுகு, கடுகு எட்டுகொண்டது ஒரு மூங்கிலரிசி-எ-று. 111

வேணுமோரெட்டதாகில் வேண்டியவிரலொன்றாகுந்
தாணுவல்விரலாறானல் தகமைசாலகமதாகும்
ஊணியவரையேவுள்ள முயன்றிடுமகமதாகும்
காணுமேமுக்காற்பின்னுங் கருதியமத்திபந்தான்.

இ-ள். மூங்கிலரிசி எட்டுகொண்டது அங்குலம் அங்குலம் ஆறு கொண்டதுகால்முழம் அதற்கு அகமதாமென்றுபெயர் அங்குலம் பனிரெண்டு கொண்டது அரைமுழம் அதற்கு அதமமென்று பெயர் அங்குலம்பதினெட்டுகொண்டது முக்கால்முழமென்றும் அதற்குப் பெயர் மத்திமமென்றும் பெயராமென்றவாறு. 112

சாதியுமொன்றதானற் றருமுழமுத்தமந்தான்
நீதரும்பிரமரோடு சிறந்தக்ஷத்திரியர்சூத்திரர்
சூதருவிவேகவைசியர் சுபமுடன்சொல்வதற்கு
நீதியார்புனைந்தமாடல் நெறிபடவியம்பலுற்றேன்.

இ-ள். அங்குலம் இருபத்துநான்குகொண்டது ஒரு முழமென்றும் அதற்கு தந்தியென்றும் மானுங்குலமென்றும் பெயராம் ஆகையால் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் இவர்களுக்கும் இன்னமுழமென்றும் சொல்லப்படுவோம்-எ-று. 113

வேறு.

சிறந்தசாதிநான்கினுக்குஞ் சிறுகோல்வரிசைசெப்பிடுங்கா
லறைந்தமூங்கில்மறையவர்க்கா ஆச்சாக்ஷத்திரியர்க்காகும்
நிறைந்ததேக்குவணிகருக்காம் நெடியவேங்கைசூத்திரர்க்காம்
முறிந்திடாமலவரவர்க்கு முழக்கோலதுகொண்டளப்பதுவே.

இ-ள். சாதி நான்கினுக்கும் முழக்கோல் விபரமாவது மூங்கிலாற்செய்தகோல் பிராமணர்களுக்காம் ஆச்சாமரத்தின்மேல் அரசர்களுக்காம் தேக்கினுற்செய்தகோல் வைசியர்களுக்காம் உத்திரவேங்கை மரத்தினுற்செய்தகோல் சூத்திரருக்காம்-எ-று. 114

வாஸ்து விழிநோக்கில் இருபத்தெட்டுபங்கில் முகூர்த்தம்.

வேறு.

வாஸ்துபுருஷன்விழிநோக்கில் மனைக்குமுகூர்த்தஞ்செய்வேகல்
பார்த்துமலையானெழும் பகுந்துகாலிற்பதினேழுங்
காத்துந்தலையீரைந்துந் தள்ளிநடுவிலொருபாக
மேத்தமாகமுகூர்த்தமிட விராசசம்பத்துண்டாமே.

இ-ள். வாஸ்துவின் விழிநோக்கறிந்து முகூர்த்தம் செய்வதாகையால் அந்தமனையை இருபத்தெட்டு பாகஞ்செய்து காலில் பதினேழு பாகந்தள்ளி தலையில் பத்துபாகந்தள்ளி நடுவிலொருபாகத்தில் முகூர்த்தஞ்செய்தால் இராஜசம்பத்துண்டாம்-எ-று. 115

சமய மைந்துக்கும் வாஸ்து அதிகாரலட்சணம்-வேறு.

செய்யவாஸ்துடநாட்டந் திறமுடன் விழித்துநோக்கல்
துய்யதோர்கடிகைமூன்று துரிதமுக்காலுக்குள்ளே
உய்யவேமுதலாம்வேளை யுலகத்தோர்கடிகைமுக்கால்
நையருவகைவேந்த சுத்திராஜபயம்முண்டாமே.

இ-ள். வாஸ்துவின் அதிகார லட்சணமாவது நாழிகைமூன்றே முக்காலுக்குச் சமயம் ஐந்துமுதற் சமயன் கடிகை முக்காலுக்குள் தந்தசுத்திசெய்வானதில் முகூர்த்தஞ் செய்தாலரசர்பயமுண்டாம்.

ஏற்றியவிரண்டாம்வேளை யெழிலுயர்கடிகைமுக்கால்
போற்றியல்தானஞ்செய்வான் பொருந்திடபீடையுண்டாம்
சாற்றியமூன்றாம்வேளை தக்கதோர்கடிகைமுக்கால்
மாற்றியபூசைசெய்வான் வறுமையால்வாடுமென்றே.

இ-ள். வாஸ்து இரண்டாஞ்சமயமாவது கடிகைமுக்காலுக்குள் ஸ்நானஞ்செய்பவன் முகூர்த்தஞ்செய்தால் பீடையுண்டாகும் மூன்றாஞ்சமயமாவது கடிகை முக்காலுக்குள்ளே பூசைசெய்வன் அதில் முகூர்த்தஞ்செய்தால் வறுமையால் வாடுவார்கள்-எ-று. 117

பெருகியகரணம்வேளை பெயர்கடிகைமுக்கால்
அருமையாயசனஞ்செய்வ னழகியபுத்திரருண்டாம்
திறமையாயைந்தாம்வேளை சேர்ந்ததோர்கடிகைமுக்கால்
மருவுதாம்பூலங்கொள்வன் மகிழ்ந்துவுத்தமமென்றோதே.

இ-ள். நாலாஞ்சமயமாவது கடிகை முக்காலுக்குள் போசனம் அதில் முகூர்த்தஞ் செய்தால் புத்திரசந்தான முண்டாகும் ஐந்தாம் சமயமாவது கடிகை முக்காலுக்குள்ளே தாம்பூலங்கொள்வ னதில் முகூர்த்தஞ்செய்தால் மகா வுத்தமம். 118

மனையில் மண்ணின்சுவை லட்சணம்-வேறு.

தயிரோடுநெய்தேனெண்ணெய் தாக்கியவுதிரத்தோடு
மயிர்பலசிறுமீன்பட்சி மற்றதோர்பொல்லாதநாற்றம்
பயிரோடுபலமுங்காணு பாழ்படுகளையடுக்கில்
வயிரவேல்விழியினளே மண்களின் குணங்கள்தானே.

இ-ள். மணமாவது தயிர் நெய் தேன் இரத்தமாயிருக்கும் மீன் சிக்கவும் பட்சிமோர் இவ்வித மணமுள்ள பூமியில் பயிரிட்டாலும் பலியாது மனை பாழாம்-எ-று. 119

சங்குஸ்தாபனம்.

உத்தராயணமுமாக வுயர்ந்தநல்வாரம்பார்த்து
நித்திரைநக்ஷத்திரங்கள் சிறப்புடன்பார்த்துவானிற்

சுத்தமாய்களங்கமில்லாச் சூரியன்விளங்கும்போது
நத்தியேயவ்விடத்தில் நவிலுவேனினிதுகேளே.

இ-ள். சங்கு ஸ்தாபிக்கும் நாலாவது உத்தராயணத்தில் வாரம் லக்கினம் நட்சத்திரம் இவைகளை திரமாகப் பார்த்து ஆகாயத்தில் களங்கமில்லாமல் சூரியன் விளங்கும்போது செய்யும் விபரத்தைச் சொல்லுவோம்-எ-று. 120

ஒருதெண்டுக்கொருதெண்டேதா னுண்மையாய்ச்சதுரமாக்கி
விரவியமட்டங்கொண்டு விளக்கநீர்மட்டஞ்செய்து
பரவியநடுவின்வட்டம் பரவுமண்டலம்போல்வீசி
திருந்தியசங்கமூணச் செய்யேபிரமாணஞ்செய்யே.

இ-ள். ஒருதெண்டுக் கொருதெண்டு சதுரஞ்செய்து நடுவில் விருத்தமாய்க்கீறி அதில் சங்கூணச் சங்குப்பிரமாணஞ் செய்வாய்.

சங்குசெய்யப்பட்டமரம்.

உத்தமசங்குக்கேதா னுயரமோர்முழமதாகும்
நத்தியவடியிலாறு வங்குலம்நவிலக்கேளு
சுத்தமாய்தலைகனந்தான் சொல்லுமங்குலமொன்றாகும்
பத்தியாய்த்திரளநன்றாய் பரிவுடன்கடைதல்செய்வாம்.

இ-ள். சங்கு செய்யும் விதமாவது ஒருமுழம் அடியிற் கனம் அங்குலம் ஆறு தலை கனம் அங்குலம் ஒன்று அதற்காக வட்டமாய் திரளக்கடச்சல் செய்யும்-எ-று. 122

தந்தியின்கொம்புவாசச் சந்தனம்வன்னிதேக்கு
முந்தியபுளியினோடு முயர்கருங்காலிசெய்வாம்
விந்தையாயிவையல்லாமல் வெண்பால்மரந்தானாகும்
அந்தமாம்வயிரத்தோடே யமைந்தநேர்பிரிவுசொல்வாம்.

இ-ள். சங்குசெய்மரம் யானைக்கொம்பு சந்தனமரம் வன்னி தேக்கு புளியின் வைரம் கருங்காலி இவையல்லாமல் எந்த மரத்தின் பாலுண்டோ அதிலும் செய்யலாம்-எ-று. 123

தேவர்முதல் நான்கு சாதிக்குஞ் சங்குசெய்மரம்.

சந்தனந்தந்திகொப்பு தகைமைசேர்தேவர்க்காகும்
விந்தைசேர்மறையோர்க்கேதான் மிகுகருங்காரிவன்னி
சிந்தைசேர்மன்னர்க்காகுந் தேக்குவைசியர்க்காகும்
புந்திசேர்புளியின்வைரம் புகலுஞ்சூத்திரர்க்கென்றோதே.

இ-ள். யானைக்கொம்புஞ் சந்தனமரமுந் தேவர்களுக்காகும் கருங்காலி பிராமணர்களுக்காகும் புளியம் வயிரம் சூத்திரர்களுக்காகும்-எ-று. 124

மேவுமுத்தரபாகத்து மிருந்ததெட்சணபாகத்து
மாவலச்சாரலுண்டு மந்தமண்டலத்தில்வந்த

ஓவியபுள்ளிரெண்டி லோட மேவகிழக்குமேற்குந்
தாவியவன்னன் தன்னிற் றகைமையையறியலாமே.

இ-ள். உத்திராயணத்திலுந் தெட்சணயணத்திலும் அவச்சா யல் பாதச்சாயலுண்டு அந்த மண்டலத்தில்வந்த புள்ளிரண்டிலும் நூலையோடவாங்கி கிழக்கு மேற்கு மறிவாம்-எ-று. 125

இரண்டுபுள்ளியின்பால்மீது ஏகவேவெளியில்நன்றாய்த்
திரண்டசேற்கயலைமீனைச் சிறப்புடன்வீசிப்பின்னு
முரண்டசேல்மீனின்வாலின் முகத்திலுங்கூடநூலை
இரண்டதாயோடவாங்கி யாகநூலிரண்டுஞ்சொல்வாம்.

இ-ள். இரண்டு புள்ளியின்மீது கயல்மீனைகவீசி மீனின் முகத் திலும் வாலிலுங் கூடுதலை யிரண்டையும்ஓட வாங்கிக்கொள்ளுவாம்.

திறமைதெக்ஷணபாகத்தின் சிறந்ததெக்ஷணத்தின்மீதே
உறமையுத்தரபாதத்தி லுத்தரபாகமீதே
முறைமையாமிரண்டிடத்தி லுயர்ந்திடுநூலைப்பெற்று
உறமுகின்கொள்ளுவான்பின் னுண்மையைவிளம்புவேனே.

இ-ள். தெக்ஷணயனத்திலும் உத்தராயணத்திலும் இரண்டு நூலையும் பெற்றுக்கொள்வாயாக-எ-று. 127

சாயல் மாதவிலக்கம்.

மேவுவைகாசியோடு மிகுபுரட்டாசிரண்டுந்
தாவரச்சாயலில்லை சாற்றுவேனினிதுகேளும்
ஆவணியானியோடு யைப்பசிசித்திரைமாத
மேவியசாயல்ரண்டு முண்மையங்குலமென்றோதே.

இ-ள். வைகாசி புரட்டாசி இவ்விரண்டு மாதத்திற்கும் விலக்க மில்லை ஆவணி ஆனி ஐப்பசி சித்திரை இந்நான்கு மாதத்திற்கும் இரண்டங்குலம் விலக்கம்-எ-று. 128

ஆடிகார்த்திகையாங்கூனி யங்குலம்நான்குசாயல்
நீடுமார்கழியுமாசி நிரைவிரலாறுசாயல்
தேடுதைமாதமெட்டுத் திறமையங்குலஞ்சாயற்றான்
பாடலாம்புகழைகூறப் பண்பிதுபகருவேனே.

இ-ள். ஆடி கார்த்திகை பங்குனி இம்மூன்று மாதத்திற்கும் நாலங்குலஞ் சாயல் மார்கழி மாசி இவ்விரண்டு மாதத்திற்கும் ஆறங் குலஞ் சாயல் தைமாதம் எட்டங்குலம் சாயல்-எ-று. 129

சகுனம்.

மன்னியநிறைகுடங்கள் மாரஞ்சொல்லும்வண்ணான்
மின்னியதயிர்பால்சோறு விடக்குடன்மதுக்குடங்கள்
கன்னியும்சாரைவேசி கரும்புகட்டெதிரேகாணில்
மென்னியவிரட்டைபார்ப்பானெதிர்வரகருமம்நன்றே.

இ-ள். சகுனமாவது நிறைக்குடம் வண்ணான் தயிர்க்குடம் பாற்குடம அன்னம் மதுக்குடம் எவ்வனஸ்திரீ தாரை தேவதாசி கரும்பு தட்டு இரட்டைப்பார்ப்பார் இவர்களெதிர்வந்தால் மகாவுத்தமமென்று சொல்லவும்-எ-று. 130

கொடிநரிகிள்ளைவேங்கை கூர்முயல்கோழிகொக்கு
வடிவுளமஞ்ஞையோந்தி மரையொடுபசுக்கள்மீதே
கடிகமழ்நாரைநாவி கடுவாயன்செம்போத்தென்றும்
வடிவுடன்வலத்திற்சென்றால் வந்திடுங்கருமநன்றே.

இ-ள். நரி கிளி வேங்கை முசல் கோழி கொக்கு மயில் ஓந்தி மான் பசு மாடு நாரை அணிப்பிள்ளை கழுதை செம்போத்து இவைகள் வலதுபக்கஞ்சென்றால் மகாவுத்தமம்-எ-று. 131

செய்யபொன்செய்யவாடை செம்பட்டைசிருட்டிநொண்டி
மெய்யினல்கயிரில்வந்தான் விரிதலையொற்றக்கண்ணன்
தையநூலிழந்தமாது தடிக்கொம்புகாண்பானாகில்
கையிலேகயறுகாணக் காலன்வாய்படுவன்றானே.

இ-ள். அழுக்கு வஸ்திரத்தை யுடையவன் செம்பட்டைத்தலையன் சுருட்டைத்தலையன் நொண்டி முகத்தில்மயிரில்லாதவன்விரிந்த தலையுடையவன் ஒற்றைக்கண்ணன் விதவைப்பெண் தடிக்கொம்புடையவன் கயிருடையவன் இவர்களெதிர்வந்தால் உயிருக்கு பயம் வரும்-எ-று. 132

தலைவிரிமொட்டைமட்டை தவசிசன்னியாசிபார்ப்பான்
முலையிலாக்கன்னிகொம்பு மூக்கறைவிருத்தட்டு
நலமிலாமுதலேயாக நாவிதன்குருடன்செக்கான்
பலரும்வக்தெதிரேகாணிற் பலனிலாக்கருமமாமே.

இ-ள். விரிதலையுடையவன் மொட்டைத்தலையன் பாம்பு சன்னியாசி ஒற்றைப்பிராமணன் முலையிலாப்பெண் புதுப்பானை மூக்கில்லாதவன் வாணியன் இவர்களெதிரேவந்தால் ஆகாது-எ-று. 133

## தேங்காய் சகுனம்.

முடிபெருத்தவட்டமிடிற் றிருவேசேரு
 மூன்றிலொருபங்குடைந்தாற் செய்தால்தோஷம்
நெடியவைந்திரண்டுக்குந் துலையாச்செல்வம்
 நீக்கிநாம்பேடித்தால் நீடிவாழ்வாம்
கடுகதனையுள்ளானால் ரத்தினஞ்சேருங்
 கணக்கவதிரண்டிற்குங் கருதுபூசல்
வடிவமெனுந்தமிழோது மயனூர்சொன்ன
 வளமைத்தேங்காய்ச்சகுன வண்மைகேளே.

இ-ள். முகூர்த்தஞ்செய்து தேங்காயுடைத்தால் முடிபெருத்து அடிசிறுத்தில் இலட்சுமி விலாசமுண்டு மூன்றுபங்கு சிரசிலும் ஒருங்கு பாதத்திலுமானாற் சந்தோஷமுண்டுஐந்து இரண்டு மூன்றானால்

செல்வமுண்டு நரம்புபிடித்தால் நீடூழி வாழ்வார்கள் கடுகுபிரமா ணம் சிதமுள்ளே விழுந்தால் இரத்தினஞ்சேரும் நடுவிற்பிளந்தால் மகா துயரத்தை விளைவிக்கும்-எ-று. 134

ஒன்றிரண்டுதனக்கு நன்மையாறுநாலாம்
யுடையவெகுதுன்பமது வோதக்கேளு
அண்டுவமயிற்கண் டெறிக்தாள்மரணமாவை
ஞசவுநல்லோடு விட்டால்சனவெல்லம்
விண்டோடுதெறித்திடு மேற்பிணியாமெய்யின்
மேனியிலேவிழுந்தால் விலையுமாவன்
பண்டுதமிழரிந்தோது மயனூர்சொன்ன
பாடற்றேங்காய்ச் சகுனம்பகரக்கேளே.

இ-ள். நடுமத்தியிலுடைந்தால் நன்மை ஆருசுக்கல் நான்கு சுக் கலாயுடைந்தால் வெகுதுன்பம் சரீரத்தில் தேங்காய்க்கண் தெரிந் தால் எஜமானன் மரணமாவான் ஓடிவிட்டால் புசிப்பதற்கு அன் னங் கிடைக்கமாட்டாது ஒடு தெரிந்தால் சரீரத்தில் பிணியுண்டா கும் பூமியில் விழுந்தால் எஜமான் வீடுவாசலைவிட்டு துக்கப்படுவான்.

சுக்கிரபலன்.

இருங்குருவெள்ளிவார மிலக்கினநாலேழ்தன்னில்
வருங்கதிராஸிநிற்க வந்தனன்மூன்றுநிற்கப்
பெரும்புரங்கோயில்வீடு பீடுமேசெய்வாராகில்
திருந்தவேயாதுநூறு தீர்க்கமாய்விளங்குமாதே.

இ-ள். வியாழம் வெள்ளி வாரமும் லக்கினநாலும் ஏழு சூரி யன் ஆறிலும் இராசன் மூன்றிலும் நிற்க கோபுரம் சாலைவீடு மாளிகை இவைகள் கட்டில் நூறுவயது பெற்று விளங்கும்-எ-று.

மனைகோலுகையின் லக்கின முகூர்த்தம்.

தக்கசென்மநாலுபத்திற் சசிதாநிற்கத்
தருபதினொன்றிற் குருவுங்குசனுமைந்தன்
மிக்கவிவர்தானிருந்து முகூர்த்தஞ்செய்தால்
மேவியதோர்மனைதனக்கு வயதுநூறுந்
தக்கதொருலக்கினத்திற் குருவுஞ்சுக்கிரன்
றருமைந்தில்மூன்றுவெய்யோன் றகைசைமபாரில்
திக்குயருங்குதனிருந்தால் குத்துக்கேதான்
யறிவபது நூறெனவே செப்பினரே.

இ-ள். ஜென்மலக்கினத்திற்கு நாலுபக்கத்தில் சந்திரன் நிற்க பதினொன்றில் இராஜன் செவ்வாய் சனி இவர்களிருக்க மணமுகூர்த் தஞ்செய்தால் வயது நூறுவருஷம் விளங்கும் லக்கினத்தில் குரு வும் சுக்கிரனுமிருக்கும் மூன்றிற் சூரியனிருக்க ஆறில் செவ்வாயி ருக்க முகூர்த்தஞ்செய்யில் அந்தமனை நூறுவருஷம் விர்த்தியாய் விளங்கும்.

மேவியசிரிலக்கினத்திற் சோமனுகில்
விரும்புபுதன் குருவர்த்தமான காலந்
தாவியபட்டணநாச முகூர்த்தஞ்செய்தாற்
றகைதம்வய திருமூன்று நூறதாகும்
மேவியதோருதயத்திற் பத்தில்வெள்ளி
மொருமூன்றிற் புதன்குருவுமத்தமான
மாவுயர்பட்டணநகர் முகூர்த்தஞ்செய்யில்
வருநூறுமிருமூன்ருய் வருத்தவாறே.

இ-ள். லக்கினத்தில் சந்திரநிற்க 4-ல் புதனிருக்க குரு அஸ்தமாக முகூர்த்தஞ்செய்யில் அந்த மனைக்கு அருநூறு வயதாகும் இலக்கினத்தில் பத்தில் சுக்கிரனிருக்க மூன்றில் புதனிருக்க குரு அஸ்தமானமாக முகூர்த்தஞ்செய்யில் அந்த மனைக்கு அறுநூறு 138
வயது விளங்கும்-எ-று.

பொங்குருமக்ஷத்திரத்தில் வெள்ளிவீட்டிற்
புதனிருக்க சுபமுகூர்த்தம்புரிவீராகில்
தங்குவய திருநான்கு நூறதாகுந்
தருமிரவியுதயமத்த மானகாலஞ்
சங்கைதருபத்திலே சோமநிற்கத்
தகைமைநகராலயமே முகூர்த்தஞ்செய்தால்
இங்கிதமாய்வயதுமொரு சகஸ்திரமென்று
இம்மொழிக்குமயனுரையு மியம்பினரே.

இ-ள். குரு வக்ஷத்திரத்திலிருக்க வெளிவீட்டில் புதனிருக்க முகூர்த்தஞ்செய்யில் எண்ணூறு வயதிருக்கும் சூரியன் அஸ்தமான காலம் பத்தில் சந்திரனிருக்க ஆலயமுகூர்த்தஞ் செய்யில் ஆயிரம் 139
வருஷம் விளங்கும்-எ-று.

தேசுயர்ந்தசுக்கிரனு முதயமாகத்
திருந்தியதோ ரேழதிலேகுருவிருக்க
மாசகன்றபத்திலே சோமநிற்க
வளர்முகூர்த்தமாலயமே மகிழ்ந்துசெய்யில்
பேசிவருவயதுமொரு சகஸ்திரமென்றே
பேசலாமோறைதனில் வெள்ளிநிற்க
வாசகுருக்ஷேத்திரமா நகருக்கேதான்
வருவுனத்தேசமில்லை மகிழுவாரே.

இ-ள். சுக்கிரனுதயமாக ஏழில் இராசனிருக்க பத்தில் சந்திரனிருக்க முகூர்த்தஞ்செய்யில் ஆயிரம்வருஷம் விளங்கும் இலக்கினத்தில் சந்திரனிருக்க குருக்ஷேத்திரத்திலிருக்க முகூர்த்தஞ் 140
செய்யில் அக்கினி பயமில்லை-எ-று.

வருங்கடகமகரமது மீனந்தன்னில்
வளமைமிகு சந்திரனுமருவிநின்றால்
திருவுயர்ந்தகிரகமதில் வைக்கோர்போடச்
செயமதுவாம்பூராடந் திருவோணந்தான்

றருவுயர்ந்தரோகணியுந் திங்கண்மூன்றுந்
தங்கியவாலியமது சாற்றக்கேளு
வருமிருகசீரிடத்திற் குருவிருக்க
வருகுருவாரங்கள் செயமகிழ்ச்சியாமே.

இ-ள். கடகம் மகரம் மீனம் இவைகளிற் சந்திரனிருக்க வைக் கோல்போட்டால் ஜெயமாகும் பூராடம் திருவோணம் உரோகணி உத்திராடம் உத்திரட்டாதி ஆயிலியம் மிருகசீரிடம் இவைகளில் இராசனிருக்க குருவாரத்திற்செய்ய மகிட்சியுண்டாம்-எ-று. 141

திருந்துசலருசியதில் வெள்ளிநிற்கத்
திருந்தசுக்கிரவாரமு மாயிருந்தாலாக்கம்
பொருந்துசதராசிதனிற் சோமனிற்கப்
புகலுதிங்கள்வாரமதா யிருக்குமாகில்
வருந்துமகமனையாளும் கெற்பமாகில்
வளமுகூர்த்தங் குடியுதவுமத்திபந்தான்
வருந்தியதோர் திரகால னிதுவாமென்று
மயனுரைக்கும்வாறதனை மகிழ்ந்துபாரே.

இ-ள். சலராசியில் சுக்கிரனிருக்கசுக்கிரவாரமாயிருந்தால்செல் வமுண்டு சலராசியில் சந்திரனிருக்க திங்கள் வாரமாகில் மனையாள் கெற்பமாயினும் முகூர்த்தஞ் செய்யினுங் குடிபுகினும் மத்திபமென் றும் மயனென்பவர் சொல்லியவாக்கியம்-எ-று. 142

## வாசல் சூரியன் கவி.

சூரியன்வீச்சேபாகிற் றலைவிலாச்செல்வமுண்டாம்
பாரியமதிதானின்றற் பணமில்லையோகமில்லை
சாரியாயிரண்டும்பார்த்துத் தயவுடன்வன்னிநின்றால்
பாரினைக்கோல்பவர்க்குப் பாக்கியமெத்தவுண்டாம்.

## கிணறெடுக்குமிலட்சணம்.

### கலிவிருத்தம்.

ஆனமேஷமறையுங் கற்பாறையாம்
வானரிஷபம்வரையுந் தண்ணீராரும்
பானமிதுனம் பருகக்கடற்கரை
மானகற்கடகம் மதிக்கவாறேடுமே
வேந்தன்சிங்கம்விரும்பு கற்பாறையாம்
ஏந்துச்சனிசனயித்தோர் தெற்குமுன்
போந்தக்கல்லு புகழும்வடக்கதாம்
கூந்தல்மோழை குமுறவருகுமே
ஆயபுற்று வமையுந்துலாமிடம்
தூயவிருச்சிகந் தோன்றும்பழங்கிணர்

ஏயவே தனுசுக்கு வாய்மட்டமுன்
பாயவும்கிடைக்கும் படுமேழையே
ஆனகர்மமறையு மிடிக்கரை
தான கும்பந் தடுக்குடலைக்கல்
மீனந்தெற்கு மிசைந்தகலவர்க்கு
ஊனமில்லா துயர்ந்த தண்ணீராமே.

| | |
|---|---|
| மேஷம் | கற்பாறை |
| ரிஷபம் | தண்ணீர் |
| மிதுனம் | கடற்கரை |
| கடகம் | ஆரோடும் |
| சிங்கம் | கற்பாறை |
| கன்னி | தெற்குவடக்குமோழைவரும் |
| துலாம் | புற்று |
| விரிச்சிகம் | பழங்கிணறு தங்கியது |
| தனுசு | வாய்வுமட்டத்துக்கிழக்கில்மோழை |
| மகரம் | இடிக்கரை |
| கும்பம் | குடலைக்கல்லு |
| மீனம் | தெற்குகல்லுவடக்குதண்ணீர் |

## மனையில்புற்றெழு லட்சணம்.

அரையுமிந்திர னைகிழக்கினில்
நிறையுஞ்செல்வ நெருங்கிப்பெருகிடுந்
திரையுமக்கினி தென்கிழக்காயிடில்
குறையுமேமனை குமிறியிடியுமே
போற்றினேமன்புகலுந் தெற்காமியில்
கோற்றுதுக்கந் தொடருமேமாந்தற்கு
ஏற்றுநிருதியேங்குந் தென்மேற்கிடில்
நாற்றிசைகீர்த்தி நவிலும்வாழ்வுண்டாமே
கொண்டவருணன் கூறுமேற்காயிடில்
வண்டமிழ்ப்பாலர் வருஞ்செல்வங்களாம்
தண்டிடாவாய்வு தருமவடமேற்காகில்
பண்டிதங்கள் பொய்யாதுமரணமே
பாருமேகுபேரன் வடக்காயிடில்
சீருஞ்செல்வ சிறப்புண்டாகுமே
வாருமீசன் வடகிழக்காயிடில்
கோரும்வியாதி குடியும்நசிக்குமே
பாரிலட்சுமணர் பகரும்நடுவினில்
சேரும்பிரமம் சிறக்கயிவற்றின்முன்
கூறுமாட்டங் குறைந்திடும்போதெலாங்
கோறுஞ்சிந்தை குறிக்குந்தெய்வங்களே

வஞ்சிகேளும் வருந்தருமமாம்
மிஞ்சுபிரம மிருத்திடுந்தானத்தில்
செஞ்சொல்புற்று செழிக்கக்கிளம்பிடிற்
கஞ்சனுணைகருது மிகச்சாவே.

| | | | |
|---|---|---|---|
| கிழக்கு | இந்திரன் | மேற்கு | வருணன் |
| தென்கிழக்கு | அக்கினி | வடமேற்கு | வாய்வு |
| தெற்கு | இயமன் | வடக்கு | குபேரன் |
| தென்மேற்கு | நிருதி | வடகிழக்கு | ஈசானியம் |

இவர்களுக்குநடுவில் பிரமம் இவற்றின் நன்மைசொல்லும்போது தெய்வச்சிந்தைதரும் பிரமத்தானத்தில் புற்றெடுக்குமாகில்.

| | | | |
|---|---|---|---|
| கிழக்கு | செல்வம் | மேற்கு | புத்திருண்டாம் |
| தென்கிழக்கு | மனையிடியும் | வடமேற்கு | மரணம் |
| தெற்கு | துக்கம் | வடக்கு | நன்மை |
| தென்மேற்கு | வாழ்வுண்டாம் | வடகிழக்கு | வியாதியுண்டாம் |

மாதபலன்கள் சித்திரைமாதம்.

செப்புஞ்சித்திரை சிறந்தமதிதனில்
ஒப்புமாளிகை யொவ்வுமமைத்திடில்
தப்பிலாமற்றன் மதற்காளியாம்
மெய்ப்புடன்மயன் விரும்பியுரைத்ததே.

வைகாசிமாதம்.

பேசும்வைகாசி பெருக்கமாளிகட்டிடில்
தேசம்புருஷ செயப்பிரதங்களாம்
நேசமாம்பெண்டீர் தெருங்குஞ்சுபாவமாம்
மாசிலாமயமன்னர்க் கரைந்ததே.

ஆனிமாதம்.

உள்ளராசியுரைக்கிறேன் மாந்தர்க்கு
தெள்ளுமானியில் திடமாளிகட்டிடில்
பிள்ளைகுட்டிபுகல் மிருத்துபயம்
கொள்ளமயனுரை கூறியதுண்மையே.

ஆடிமாதம்.

சொல்லுமாடி தொடர்ந்தமாளிகட்டிடில்
சொல்லுங்காராம் பசுக்கள்நஷ்டங்களாம்
சொல்லுஞ்செல்வமுஞ் சிறுமழிந்திடும்
சொல்லுமயனுர் தொகுத்தசிற்பநூலே.

ஆவணிமாதம்.

உரைத்திடுமாவணி மாளிகைகட்டிடில்
நிரைத்திடும்மிக பந்துவர்க்கமாம்
உரைத்திடும்பன்வாக்கு பொய்யாதுகாண்
பரைத்திடும்பஞ்சணத் தார்க்கரைந்ததே.

புரட்டாசிமாதம்.

தேயுமோ புரட்டாசிமதிதனில்
ஏயுமாளி யெழில்பெறக்கட்டிடில்
மாயுநோயும் மகாரோகமெய்திடும்
தாயுமேயன் றயவாயுரைத்ததே.

ஐப்பசிமாதம்.

காணுமைப்பசி கனத்தமாளிகட்டிடில்
ஆணும்பெண்ணு மரியகலகமாம்
பூணுமாடை புகலுமாபரணமும்
வேணுஞ்சேதம் விளையுமென்மேலுமே.

கார்த்திகைமாதம்.

கனத்தமாளி கழருங்கார்த்திகையில்
தனத்தமாளி தகைமையாய்க்கட்டிடில்
அனத்தம்வாரா தொருநாளுமாந்தற்கு
கினந்தலட்சுமி கெருங்கும்வாசமதே.

மார்கழிமாதம்.

சொல்லுமேதிரு வாதிரைமார்கழி
புல்லுமாளி புகலவேகட்டிடில்
கொல்லுமேபதங் குவலயந்தன்னிலே
வெல்லுமயனார் விரும்பியுரைத்ததே.

தைமாதம்.

கிரணம்வீசுங் கிளர்க்குந்தைமாதத்தில்
முரணமாக முழுமாளிகட்டிடில்
மரணமேதரு மக்கினிபயமுண்டாம்
சரணம்பணித் தடுப்பதுநன்மையே.

மாசிமாதம்.

அருமையாக வறைகிறேன்சிற்பநூல்
பெருமையாமாசி பிலக்கமாளிகட்டிடில்
சிறுமைநீங்கிச் சிறக்குஞ்செல்வங்களாம்
ஒருமையா யுரைக்குமயனாலே.

பங்குனிமாதம்.

மெள்ளவேபங்குனி மாதங்கட்டிடில்
உள்ளரத்ந முறையுமாபரணமும்
தெள்ளுமட்ட சிறந்ததோர்செல்வமும்
கொள்ளப்போமெனக் கூறுவர்சிற்பரே.

குடிபோகும் மாதபலன் வேறு.

ஆடித்திங்க ளிராவணன்பட்டதாம்
ஆலித்தேபெரும் பாரதமார்கழி

வீடித்தேபுரட் டாசியிரணியன்
வேதத்தோன்முடி யற்றதுபங்குனி.
நாடித்தேயில் நன்மைக்கேகிடில்
நாட்டில்மாந்தர்கள் நாசமடைகுவார்
ஓடித்தேசங்குடி யேறிப்போனாலும்
ஓட்டிலேயிரந் துண்ணலாகுமே.

சித்திரைமாதம் வீடுகட்டினால்தன ஆனி
வைகாசிமாதங்கட்டினால் ஜெயப்பிரதம்
ஆனிமாதங்கட்டினால் மிருத்துவுபயம்
ஆடிமாதங்கட்டினால் பசுக்கள்நஷ்டம்.
ஆவணிமாதங்கட்டினால் பந்துவர்க்கம்வரவு
புரட்டாசிமாதங்கட்டினால் ரோகம்
ஐப்பசிமாதங்கட்டினால் கலகம்
கார்த்திகைமாதங்கட்டினால் இலட்சுமிவாசம்.
மார்கழிமாதங்கட்டினால் பயம்
தைமாதங்கட்டினால் அக்கினிபயம்
மாசிமாதத்தில்கட்டினால் பாக்கியமுண்டாம்
பங்குனிமாதத்தில்கட்டினால் இரத்தினபரணங்கள்நாசம்.

## இராசி பலன்.

சொல்லுமேஷம் சுப்பிரத்தங்களாம்
வெல்லும்ரிஷபம் வேண்டுந்தனலாபம்
புல்லுமிதுனம் புகலும்பசுவிருத்தி
கொல்லுங்கடகங் குரிக்குஞ்சயனத்தே.
அறையுஞ்சிங்க மரும்பந்துசேர்தலாம்
நரையுங்கன்னி நெருங்குமகாரோகம்
இறையுமேதுலா மேருஞ்சௌக்கியம்
நறையும்விருச்சிகம் நாட்டுமாத்தபலம்.
கவியுந்தனுசு நவிலவர்த்தமானி
வலியுமகரம் வகுக்கத்தானியவிர்த்தி
கொலியுங்கும்பம் புகலும்ரத்னலாபம்
ஒலியுமீனமு மோங்குபயமதே.
கண்டுமேராசி காசினிடமானிடர்
விண்டுமேசிற்பி விளம்பும்வாக்கியமதை
கொண்டுசோதிக் குறிப்பின்பிரகாரம்
மிண்டிடாமல் முடிப்பதுதிண்ணமே.

| | |
|---|---|
| மேஷத்தில் | சுபப்பிரசம் |
| ரிஷபத்தில் | தனலாபம் |
| மிதுனத்தில் | பசுவிர்த்தி |
| கடகத்தில் | லாபம்-நஷ்டமாம் |

| | |
|---|---|
| சிங்கத்தில் | பந்துசேர்தல் |
| கன்னியில் | ரோகம் |
| துலாத்தில் | சௌக்கியம் |
| விருச்சிகத்தில் | அர்த்தவிருத்தி |
| தனுசில் | அர்த்த ஆனி |
| மகரம் | தானியவிர்த்தி |
| கும்பத்தில் | இரத்னலாபம் |
| மீனம் | பயம் |

இவைகளைக்கண்டு வீடுகட்ட ஆரம்பஞ்செய்யவேண்டிய திதிபலன்.

வே று.

நெறியுஞ்சுக்கிலபட்சமது நேருசப்பிரத்தமாதம்
செரியுங்கிருஷ்ணபட்சமது சிந்தவிரவிபோன தின்பின்
பெருகுந்திரிகைமுதலாம் பேசும்பௌர்ணமிதொடங்கி
உருகுஞ்சத்தமிதன்வாக்கு மோங்குஞ்சுக்கிலபக்ஷமதே.

கலிவிருத்தம்.

மற்றநாள்கிருஷ்ண பட்சமுதலாகா
உற்றபிரதிமை யோங்கும்சஷ்டிகளும்
முற்றுமேகாதசியிது கணத்தை
பெற்றதிதிபலன் போர்த்தவாணியே. 227

வாரிவிட்டார்விதியை சத்தமிகளும்
ஓரிட்டுதுவாதசி பத்திரைதிதி
நேரிட்டதிதிநிகழ் பவன்பத்தனம்
கூறிட்டமயன் குறித்ததுவுண்மையே. 228

தக்கவட்டமி தாக்குந்திரிதிகை
பக்கமேதிரை யோதசிதன்முதல்
மக்கண்சேய ததியாமிவை
சிக்குஞ்சுபமெனச் செய்தனர்சிற்பரே. 229

சிர்பெருஞ்சவுத்தி நவமிகளு
தார்சொரியுஞ் சதுர்த்தசிதன்முதல்
ஏர்பெருமருக்கத் தியின்பலன்
போர்செறிமிருத்து வின்பயமதே. 230

சொல்லும்பஞ்சமி தோற்றிந்தாமிதான்
வெல்லும்பௌர்ணமி வேண்டும்பூரண திதி
புல்லுமிதின்பலன் போற்றும்செயப்பிரதம்
அல்லுமலாசி யத்தவானியே. 231

சுக்கிலபட்சம் சுப்பிரத கிருஷ்ணபட்சம் அமாவாசிபோன திரிதிகைமுதல் பௌர்ணமிபோன சத்தமிவரையில் சுக்கிலபட்சமாகும் மற்றநாள்கள் கிருஷ்ணபட்சமாகாது பிரதமைசஷ்டி ஏகாதசி இவைகள் நத்தைதிதி இதன்பலன் அர்த்த ஆனி விதியை சத்தமி துவாதசி

இதுகள் பத்தரை திதி இதின் பலபந்தனம் திரிகை அஷ்ட திரயோதசி இதுசேர்த்திய திதி நீ இதன்பலன் சுபம் சவுத்தியநவமி சதுர்த்தசி இவைகள் பக்கத்ததிதி இதன்பலன் மிருத்துவின்பம் பஞ்சமி பௌர்ணமி இவைபூரண திதி இதன்பலன் ஜெயப்பிரத்தம் அமாவாயில் அர்த்த ஆனி இதன்பலன் பிரான ஆனி.

வாரபலன்.

இனியவார மெழிலெழும்ஞாயிறு
தனிசெவ்வாய் தனிலக்கினிபயம்
குனியதிங்களும் கூறிடுநற்சபம்
துணிவுடன்மயன் சொன்னதுமில்லையே.

உண்மையாம்புதனுக் குரைக்கும்வியாழமும்
தண்மையாம்வெள்ளி தாக்குஞ்சுபாசுபம்
உண்மையாஞ்சனி வாரகோபயம்
வண்மைவாரமறிந்து மாடங்கட்டே. 232

ஞாயிறு செவ்வாய் அக்கினிபயம் திங்கள் வரவு புதன் வியாழம் வெள்ளி சுபம் சனி சோரபயம் இவ்வாறு பலனறிந்து வீடுகட்ட வேண்டும்.

நட்சத்திரபலன்.

ஓதுமஸ்தமுரையும் ரோகணியும்
நீதியாய்விட்டஞ் சதயங்களும்
கோதிலாமிருகசிரம் பூசமும்
தீதிலாத திருவோணமும் நன்மையே.

நன்மையாஞ்சுவாதி யனுஷ்டானமும்
துன்மையிலாத்துடர்ந்த சித்திரையும்
வண்மைரேவதில் குருருத்திரட்டாதி
பண்மையுத்திராடம் பார்க்கச்சுபமிதே.

பார்க்கவுத்திரம் பகருநட்சத்திரம்
ஏற்கவேபதினன்கு சுபந்தீரும்
தீர்க்கமாய்சிற்பநூலைத் திரட்டிட்டே
மார்க்கமாகமயமத சொன்னதே.

மிருகசிரம் ரோகணி அவிட்டம் சதையம் திருவோணம் பூசம் உத்திரம் அஸ்தம் சித்திரை அநுஷம் உத்திரட்டாதி ரேவதி இப்பவும் நான்குஞ் சுபம்.

யோகபலன்.

தங்குமேசுந்தரர்க்கும் பிரமமுடன்
பொங்குமந்திரம்போற்றி நற்சாத்திரம்
எங்குமேசிவமே தகுஞ்சுப்பிரமாம்
அங்கமாயிதமான சௌபாக்கியம்.

காணுந்துருவங் கழருவைதிருதியாம்
வேணுஞ்சோபனம் விரும்புசுகமதாம்
தோணும்பிரிதியுந் தோற்றுஞ்சித்தங்களும்
பூணுமியோகம் புகலும்பதினொன்கே.
மாதுவியாகரதம் வழுத்துங்கண்டங்களாம்
கோதுகுலங்குறிக்கும் விஷ்கம்பமாம்
ஓதும்வச்சிரமோங்கு மதிகண்டமாம்
நீதியாம்வதிபாதம் பொல்லாதிதே.
பொல்லாதையா புகலும்பரிகமாம்
நல்லாவைதிருதியிந்த யோகங்களும்
பொல்லாப்பென்று புகலுவர்சிற்பர்கள்
பல்லடுவொன்பதும் போற்றும்பொல்லாதிதே.

சுபம் பிரதம் ஐந்திரம் சாத்தியசிவம் சுப்பிரம் சௌபாக்கியம் ஆயுசுமான துதி துருவம் சுவர்மம் சோபனம் பிரிதிசித்தம் இப்பதினொன்கு சுபம்.

வியாகாதம் கண்டம் அதிகண்டம் விஷ்கம்பம் சூலம் வச்சிரம் விதிகபாதம் வைதிருதி பரிகம் இந்தயோகம் 9 ஆகாது.

கரணபலன்.

பண்ணும்பாலவம் பகரும்பலமுடன்
அண்ணலாருமை யறையுங்கௌலம்
என்னும்வித்துலா மேற்குங்கரசியாம்
நண்ணும்பத்திரை நற்சுபமீயுமே.
உய்யுக்தாகமு மோங்குஞ்சகுனியாம்
பையசதுஷ்பாதம் பகருவணசையும்
மெய்யவேகிமஸ் துக்கினமைந்தும்
பொய்யக்கரணம் புகலப்பல்லாசிதே.

பலம் பாலவம் கௌவம் தைதுலை கரசை புத்திரை இக்காரணம் 6 ம் சுபம்.

சகுனி நாகவம் சதுர்பாதம் கிமஸ்துக்ன மவணசை இந்தக்கிரணம் 3 ம் ஆகாது.

சூரியஜாமம்.

கூறும்பரணிகுறிக்கும் ரண்டாம்பாதம்
வீறுங்கார்த்திகை விளம்பும்நாலாம்பாதம்
கோறும்ரோகணி குறுக்குமுதற்பாதம்
மாறுமேழிலாம் வருக்கும்பரிதியே.
பரிதிநின்றபகர்மாளி கட்டிடில்
குருதியக்குன் கொடியபயன்கொலு
பருதியேல்பயன் பக்குநற்சாத்திரம்
நிருதிமாந்தர்க்கு யுரைத்ததே.

பரணி இரண்டு பாதமும் கார்த்திகைநான்குபாதமும் ரோகணி முதற் பாதமும் இந்தப்பாதம் ஏழிலுஞ் சூரியனிருக்க வீடுகட்டினல் அக்கினிபயம்.

## குருசாரம்.

செப்பிடும்மதி சிறந்தார்கார்த்திகை
ஒப்பிடும்பூச மோகமுகமுடன்
வெப்பும்பூரமும் விளங்கிடுமஸ்தமும்
தப்பிலாரேவதிமூலம் பொல்லாததே.
சொல்லுதையா புகலுங்குருமொழி
கொல்லும்நட்சத்திர பலனேழிலும்
வெலுமங்காரகனிருக்க மாளிகட்டிடில்
புல்லும்புத்ரர் புகலவானியதே.

கார்த்திகை பூசம் மகம் பூரம் அஸ்தம் பூலம் ரேவதி இந்த நட்சத்திரமேழிலும் அங்காரகனிருக்க வீடுகட்டினல் புத்திர ஆனி.

## இதற்கு தோஷபரிகாம்.

வஞ்சிகேளும் வழங்குமகரமீனம்
மிஞ்சுமகரமேவுங் கடகமும்
செஞ்சுமேபூரண செயராசியாம்
கஞ்சமயனர்கழகு நூல்பொய்யாதே.
வகுத்திடும்துலாம் வழங்கும்விரிச்சிகம்
தொகுத்திடுமேஷந் தோதன்றமிகபாதம்
பகுத்திடுஞ்சலராசி யெனலாம்
நிகழ்த்துமயனர் நேராயரைந்ததே.
காரிற்கும்பம் பகுக்கும்ரிஷபமாம்
சேரசிம்பஞ்சிக்க விறைகளும்
சீறமர்த்தசலராசி யென்னலாம்
பேரமயனர் பேணியுரைத்ததே.
பாரெலாங்கன்னி பகருமிதுனமாம்
ஏருதனுசு யேற்கவிவைமூன்றும்
கார்நிறச்சலராசி யெனப்படும்
சீரும்பூரணச் சேர்கலராசியே.
எந்துமிந்தவெழில் பெறும்ராசியில்
போந்தமாளிபுகல வமைந்திடில்
வேந்தமனுத்த மானராசிதனில்
கூந்தல்வேனுன் குருசுக்கிரனுமே.
ஆமேசந்தானறையும் பார்வைதனில்
தாமேமாடந் தனியாககட்டிடில்
போமேமங்காரதோஷம் பொலிவில்லை
நாமேசிற்பநூல் நவிலவுரைத்ததே.

மீனம்-கடகம்-மகரம்-சம்பூர்ணசலராசி
விருச்சிகம்-துலாம்-மேஷம்-பாதசலராசி
கும்பம்-ரிஷபம்-சிங்கம்-இவைகள் அர்த்தசலராசி

கன்னி மிதுனம் தனுசு நிறைசலராசி பூரணசலராசியில் வீடு கட்டினாலும் உத்தமமான நட்சத்திரத்தில் சந்திரன் குரு சுக்கிரன் பார்வையில் கட்டினாலும் ஆதிகாரந்தோஷந் தேவையில்லை.

## புதன் பலன்.

பொன்னுமஸ்தம் புகலுமசுவனி
மன்னுமுத்திரமா மிருகசிரம்
வின்னும்ரோகணி விளங்கிடுஞ்சித்திரை
துன்னுமாருந் தொகுப்பாயுரைத்ததே.

உரைத்திடும்பதி யோங்கும்புதனிருந்
திரைத்திடும்கணத் தினிதெனிலாதது
குரைத்திடும்பதி யுச்சத்திலாவது
முரைத்திடாமாளி கட்டுவதாட்சியே.

ஆட்சியன்றியணி பெருப்புத்திரர்
மாட்சிமேவு மதிகமாமன்னவர்
காட்டியபாவுங் களித்திடுமிப்பலன்
தாட்சியின்றி தனியவரைந்ததே.

அசுவனி மிருகசிரம் அஸ்தம் உத்திரம் சித்திரை ரோகணி இவ்வாறு நட்சத்திரத்தில் புதனிருந்தாலும் லக்கினத்திலாவது உச்சத்திலாவது வீடுகட்ட ஆரம்பஞ்செய்தால் புத்திரசம்பத்துடன் சுகமா யிருப்பார்கள்.

ஆயவுத்திர மான திருவோணம்
தூயவுத்திராட மேற்குமாரோகணி
ஏயபூராட மேற்குமாரோகணி
காயமிருகங் கழறும்பூசமதே.

பூசமேவும் புகலுமாயிலியம்
வாசம்வீரம் வகுக்குநட்சத்திரம்
காசஞ்செய்யு நவிலவொன்பதுவும்
நேசஞ்செய்யா நெருக்கும்பலமதே.

செல்லவுத்திரஞ் செழிக்கக்கருதிற்கில்
வல்லலக்கினம் வழங்குமுச்சத்திலும்
செல்வமாளி சிறக்கவேகட்டினல்
நல்லலட்சுமி நடுவினும்வாசமதே.

திருவோணம்உத்திராடம்உத்திரட்டாதி பூராடம்மிருகசிரம் ஆயிலியம் ரோகணி பூசம் இந்த 9 நட்சத்திரத்தில் குருவிருக்க அல்லது லக்கினத்திலாகிலும் உச்சத்திலாகிலும் இருக்க வீடுகட்டினலும் ஆரம்பஞ்செல்தாலும் இலட்சுமி கடாட்சமுண்டாகும்.

நண்ணுங்கேட்டை நவிலும்புனர்பூசம்
ஒண்ணுஞ்சித்திரை யோங்குமசுவனி
தண்ணமேவும் வருக்கும்பூராடமாம
அண்ணலாருரை யறையுமவிட்டமே.

மேவிடும்மனுஷம் விசாகத்துடன்
தாவுமேதிரு வாதிரைதன்முதல்
மேவுஞ்சதயம் விளம்புமுப்பத்திலும்
தூவுசுக்கிரன் றேன்றலுநன்மையே.

நன்மையம்பதி நவிலும்சுக்கிரனும்
வண்மையாக வலுத்துமேநின்றிடில்
பன்மையாமாளி புகலவேகட்டிடில்
துன்மைநீங்கிச் சுகந்தருமுண்மையே.

கேட்டை புநர்பூசம் சித்திரை அசுவனி பூராடம் அவிட்டம் அநுஷம் விசாகம் திருவாதிரை சதயம் இந்த பத்து நட்சத்திரத்திலும் சுக்கிரனிருக்க வீடு கட்டினாலும் ஆரம்பித்தாலும் சுபம் நன்மையைத் தரும்.

சனிசார பலன்.

வருஞ்சதயம் வருக்கும்பூரட்டாதி
இருண்சுவாதி யெழிலுத்திரட்டாதி
ஒரும்பரணியா மோங்குமவிட்டமே
தருவனுஷமுந் தாக்குங்கேட்டையதே.

இந்தநட்சத்திர பலனெட்டிலும்
தொந்தமேவுந் தொடருஞ்சனிநிற்கில்
அந்தமாகவறை கட்டிடில்
பந்தமற்றுப்போய் பாழுமடைவதே.

அடையும்பூத மறையுமாளிதனில்
படையுமற்றுப் பகருமூதேவியாள்
அடையுமேபிரம்ம ராட்சசனெப்போது
இடையுஞ்சிதேவி யெழில்வாக்குதப்பாதே.

சதயம் பூரட்டாதி சுவாதி உத்திரட்டாதி பரணி அவிட்டம் அனுஷம் கேட்டை இந்த 8 நட்சத்திரத்திலும் நேனியிருக்க வீடு கட்டினாலும் ஆரம்பித்தாலும் பேய் பிரம ராக்ஷதாள் வாசஞ் செய்வார்கள்.

இராகு சாரபலன்.

சொல்லுமேவுந் தொடருமிராகுதான்
வெல்லும்லக்கின மேதமேதிர்சாரம்
புல்லுமேபதி னன்குநட்சத்திரம்
கொல்லுமிருத்துவ சாரம்பொல்லாததே.

பொல்லாத புகலுமந்தசாரம்
நல்லமாளிகை நவிலமைந்திடில்
சொல்லவொண்ணமல் தோற்றிடுந்துன்பம்
அல்லும்பகலு மறையவொண்ணாதிதே.

இராகிருந்த லக்கினத்திற்கு எதிர்சாரம் 14 நட்சத்திரமும் மிருதாவும் சாரமானபடியால் அந்தசாரத்தில் வீடுகட்ட ஆரம்பஞ் செய்யலாகாது.

பிரகஸ்பதி சுக்கிரனஸ்தமானபலன்.

கூறுடன்சுக்கிரன் குருதன்முதல்
வீறுமஸ்தமான போதநன்னிலும்
கூறுமேவுங் குறுக்குநீசத்திலும்
தூறுமேபகை தோன்றலுமுண்மையே. 267

உண்மையாக வுரையுஞ்சேத்திரபதி
தண்மையாம்சத்து ருக்களிருக்கினும்
உண்மையாய்மாளி வகுக்கவேயாகாது
கண்மையாய்மாயன் கண்டுவுரைத்ததே. 268

கூறுமானி குறிக்குமதிகாரம்
தூறுமெத்த துரைசாதியானலும்
சேருமந்த கிரத்திடுஞ்சாதிக்கு
கோருங்கிரகங் குறிக்குப்பொல்லாதிதே. 269

குறிக்கச்சத்துரு கூடவிருக்கினும்
தெறிக்கவேதிக னஸ்தமானபோதும்
முறிக்கநீச்ச முடிவுகாலத்திலும்
மறிக்கமாளி யமைப்பதுண்மையே. 270

கூறுந்துன்பங் குறிக்குமனிதற்கு
நேருஞ்சங்கற்ப நிகழுமெக்காலமும்
கூறுமன்னியர் கூட்டமிட்டேவந்து
பாருமக்கிரமமாகக் கொள்வார்களே. 271

குரு-சுக்கிரன் அஸ்தமானலும் நீச்சத் தானத்திலாகிலும்பகை க்ஷேத்திரத்திலாகிலும் சத்துருக்களுடன் கூடினலும் வீடு கட்டலாகாது வீட்டுக்குக் கர்த்தன் எவ்விதசாதியானலும் அந்த ஜாதிகளுக்குரிய கிரகம் சத்துருக்களுடன் கூடினலும் அஸ்தமனமானலும் நீச்சத்தானத்திலிருந்தாலும் வீடுகட்டினல் அன்னியர் அபகரித்துக் கொள்வார்கள்.

ஸ்திரலக்கின ராசிகளின்பலன்.

பாலசிங்கம் பகரும்ரிஷபமாம்
ஞாலகும்பம் நவிலும்விருச்சிகம்
கோலமாமிந்த குறிக்கும்க்ஷேத்திரங்கள்
ஏலவேநன்மை யெழிலுத்தமாகுமே. 272

சாருங்கடகஞ் சாற்றிடுமேஷமும்
சேருமேதுலாம் சிறந்தமகரமும்
நேரும்நாலும் நிகழ்சரலக்கினம்
பாரும்மத்திபம் பகர்சிற்பநூலிலே. 273

வயகன்னியே யெழிலாமிதுனமுந்
தூயமீனந் தொடருந்தனுசவும்
ஆயவின்னான்கு மறையுஞ்சுபாபலன்
நேயமுமாமுப ராசியானதே. 274

ஆனதினாலறை மாளிகட்டிடில்
கானமேவுங் கடுராசிபொல்லாது
ஊனமாக வுரையும்லக்கினபதி
போனகிரகம் புலப்பொல்லாதிதே. 275

இலகுஞ்சத்துரு சேத்திரந்தன்னிலும்
குருவுமிலக்கினம் கூறுங்கணேசுரன்
அலகுஞ்சத்துரு அறையுஞ்சேத்திரத்திலும்
கடகலக்கினம் பத்தாமிடமதே. 276

இருந்தமாளி யெழிலாயமைந்திடில்
பொருந்தவேனே புலப்பொல்லாதிது
பருந்துமேவும் பராதீனமாய்போகும்
தெரிந்துமயனுர் தெளியவுரைத்ததே. 277

ரிஷபம் சிங்கம் விருச்சிகம் கும்பம் இந்நான்கும் ஸ்திரலக்னம் உத்தமம் மேஷம் கடகம் துலாம் மகரம் இந்நான்கும் சரலக்கினமத்திபம். மிதுனம் கன்னி தனுசு மீனம் இந்நான்கும் சரலக்கின மான உபயராசியாகையால்வீடுகட்டக்கூடாது ஆரம்பலக்கினத்திலிருந்து கிரகித்துச் சத்துருக்ஷேத்திரமான லக்னேஸ்வரன் சத்துருக்ஷேத்திரத்திலிருந்தாலும் ஆரம்பலக்கினத்துக்குப் பத்தாமிடத்திலிருந்தாலும் அப்படிப்பட்டவேளையில் வீடுகட்டினால் பராதியாய்ப்போகும்.

திக்குகளுக்கு ஆகாதராசி.

மன்னுமேவுங் கிழக்குத்துவிசாயம்
மின்னும்விருச்சிகம் ராசிக்குமாகாது
துன்னுமேவுதென் கிழக்குதூமாயமாம்
என்னுமீன ராசிக்குமேயாகாதே. 278

அறியுந்தெற்கு வருளசிம்மாயமாம்
உருதன்மேற்கு வுரையுஞ்சுங்காயமாம்
செறியுமேற்கு சிறந்தரிஷபமாம்
கரியுந்தனுசு ராசிக்குமாகாதே. 279

அச்சமான வரையுமவடமேற்கு
நிச்சகராயும் நெருந்துலாத்துக்கு
உச்சமான தொருபோதுங்கூடாது
எச்சமயனுர் சுளுவாயறைந்ததே. 280

உண்ணுமேவும் உறையும்வடக்கதாம்
நண்ணுங்கெஜாய நவிலவுரைக்கிறேன்
தன்னுமேமேஷராசிக் காரர்க்காகாது
அன்னமயனுர் அறியவுரைத்ததே. 281

இலங்குமேடை கிழக்குக்காகாவாம்
துலங்குகும்பரா சிக்காரர்க்காகாது
நலங்கொள்மகரம் நடுவிலுமிதுனமாம்
பலங்கொள்சிங்கம் பகரும்ரிஷபமே. 282

சொல்லுமிந்த துலங்குராசிக்காரர்
வெல்லுங்கிராமம் விளங்கேடுமத்தியில்
புல்லுமாடம் புகவேகட்டொணு
தல்லுமயனுர் தமிழிலுரைத்ததே. 283

கட்டினல்மாட மாளிகைபின்னமாம்
கட்டினல்தோஷங் கருதுமாளியாகும்
கட்டினல்மாளி விருத்தியுமாகாது
கட்டினல்சீரணங் கடுகவடைவதே. 284

கிழக்குதுவசாயம் விருச்சிகருக்காகாது
தென்கிழக்குதூமாயம் மீனராசிகருக்காகாது
தெற்குசிம்மாயம் கர்க்கடகராசிக்காகாது
தென்மேற்குசுனகாயம் கன்னிராசிகருக்காகாது
மேற்குரிஷபாயம் தனுராசிகருக்காகாது
வடமேற்குக்காராயம் துலாராசிகருக்காகாது
வடக்குகெஜாயம் மேஷராசிகருக்காகாது
வடகிழக்காகயம் கும்பராசிகருக்காகாது

மகரம் மிதுனம் சிங்கம் ரிஷபம் இந்த ராசியுடையோர் கிராமமத்தியில் வீடுகட்டலாகாது.

இப்போது சொல்லியபிரகாரம் வீடுகட்டினல் ஆனியாகும்

அ இ ஈ உ ஊ எ ஏ
இதுகள் கிழக்குமுதற்கொண்டிருக்கும் இதற்குப்பலன்
இந்திரன் கிழக்குமுதல் கெருடன் கா கா கா கா கா
அக்கினி 2-வது பூனை சா ச சா சா ச
இயமன் 3-து சிங்கம் டா ட டா டா ட டா
நிருதி 4-வது நாய் தா த தா தா த தா
வருணன் 5-வது பாம்பு பா ப பா பா ப பா
வாய்வு 6-வது ஏ யரவல்
குபேரன் 7-வது யானை சா ஷ ச ஆ

ஈசன்மயன் 8-வது முயல் காத்தன்வாக்கு 5-ம்வாக்கு சத்துருத்தானமாதலால் அவ்விடத்தில் வீடுகட்டக்கூடாது கட்டினல் ஆனியாகும் இவைகள் சத்துருத்துவந்தெரிந்து வீடுகட்டப்படும்.

### கிராமக்ஷேத்திர நிர்ணயராசகேந்திர சொரூபலக்ஷணம்.

சொல்லுக்கத்திரி தோன்றுபோலவும்
வெல்லுமுக்கோணம் விளம்பியபோலவும்
புல்லும்நேத்திரம் புகன்றனபோலவும்
கல்லுமேதலை கருதியபோலவே. 285

போலமத்தளம் புகவடைக்காய்போல
ஆனவுள்ளு மரியபுறம்புமாம்
கோலமான குவலயந்தன்னிலே
ஏலமாளி யியம்பவொண்ணாதே. 286

சேருமும்பு சிறங்குகிராமத்தில்
நேருமத்திபம் நெருங்குமூலையிலும்
பாரும்பள்ளம் பகர்நிலமாகிலும்
ஊருந்தண்ணீரா யோடுநிலமதே. 287

வரவுசொல்லும் வகுக்கும்பலபேர்கள்
திரமுடன்கூடா தென்றநிலத்திலும்
உரையுங்கோபுர முற்றநிலத்திலும்
திரையுமரவஞ் சேர்ந்தபுத்துமிதோ. 288

புத்துடன்பேரும் பத்துவாய்சீறிய
சத்துமேவுஞ் சதாநிலமாகிலும்
தொத்துமேவு சுடலைப்பதியினும்
கத்துமாடுகள் கழறுமாதையதே. 289

சேதமேற்குச் சிறந்தகிழக்குடன்
நீதிபரமனை நிறைதப்பிருந்தாலும்
போதமேசலம் புகழ்நெருக்காகிலும்
வேதமோத விளங்கிடுநெய்யதே. 290

நெய்யுடன்தயிர் நேரும்புத்தேனுடன்
கொய்யுமெண்ணெய் குறிக்குமுதிரமும்
பையமச்சம் பகருஞ்சவமுடன்
வெய்யபட்டிருக் கைபோல்தாகிதே. 291

பொல்லாதிந்த புகலும்வழிமுறை
வல்லாண்மைகண் டறிந்துஇவையெலாம்
எல்லாமுணர்ந்த சிற்பநூற்பண்டிதர்
கல்லால்சிறந்தநூல் காட்சிமெய்தானிதே. 292

கத்திரிக்கோல்போலும் மூன்று மூலைபோலும் நேத்திரம்போலும் கலைபோலும் மத்தளம்போலும் கொட்டைப் பாக்குபோலும் உள்ளும்புறம்புமா யிருக்கப்பட்ட பூமியிலும் உப்புநிலகிராமத்திலும் அல்லது அதற்கு மூலையிலும் பள்ளநிலத்திலும் தண்ணீர் ஓடுகிற நிலத்திலும் பலர்கூடாதென்று தடுக்கும்நிலத்திலும் கோயில்நிலத்தி

லும் புற்றிருந்த நிலத்திலும் சுடுகாட்டு நிலத்தில் ஆடு கட்டப்பட்ட நிலத்திலும் கிழக்கு மேற்கு அகலங்குறைந்த நிலத்திலும் தண்ணீர் சமீபித்தநிலத்திலும் தேன் நெய் தயிர் எண்ணெய் உதிரம் மீன் சவம் பட்சி இவைகள் வாசனை பொருந்திய நிலத்திலும் வீடு கட்டலாகாது கட்டினால் பலவித துன்பமுண்டாகும்.

பூமியைச் சோதித்து வீடுகட்டும் விபரம்.

கூறும்பூமி குறிக்கும்வெள்ளையுடன்
விறுந்தித்திப்பு விரும்புமருசியுடன்
பெருந்தாமரை பொருந்தபூவாசனை
ஏரும்பூமி யிருக்கமிக்கநன்றே. 293

நன்றுமாரியா நவில்மாளிகட்டிடில்
குன்றுதென்னுளுங் கூறக்குடும்பமும்
நன்றுயோங்கும் நலம்பெறுநற்சுபம்
வன்றுமரையாள் வகுக்கும்வாசமதே. 294

ஓதும்பூமி யுயர்ந்தசிவப்புமாய்
நாளாந்துவர் கருதியபூமியும்
ஏறலாம்பரி யெழில்மனம்போலவும்
பூதலத்தில் புகழ்மாளிகட்டவே. 295

கட்டினால்மாளி காசினிராஜர்கள்
பட்டினம்வால் பகரும்குபேரன்போல்
கட்டடம்நீங்கி காட்சிமிகப்பெற்று
அட்டியில்லா தருமையாய்வாழ்வரே. 296

வெளுத்தபூமி தித்திப்பானபூமி தாமரைப்பூ வாசனையுள்ள பூமி இவைகளில் அரசர்கள் வீடு கட்டினால் உத்தமம்.

சிவந்தபூமி துவப்புள்ளபூமி குதிரைவாசனையுள்ளபூமி இவைகளில் அரசர்கள் வீடுகட்டினால் உத்தமம்.

கறுத்தபூமி கசப்பு சாரமுள்ளபூமி தானிய வாசனையுள்ள பூமி இவைகளில் சூத்திரர் வீடுகட்ட உத்தமம்.

பச்சைபூமி புளி உப்புபொருந்தியபூமி இவைகளில் சங்கமசாதிகள் வீடுகட்ட உத்தமம்.

நீங்காதமதுரமும் பரிமளமும் பொருந்திய பூமியில் சகல சாதிகளும் வீடுகட்ட உத்தமம்.

க்ஷேத்திர ஆரூடம்.

இந்தத்திக்கில் வீடுகட்டினால் நல்லதாவென்று கேட்கும்போது அந்தத் திக்கிலிருப்பவர்க்கு எதுவோ அந்தக்கணக்கை வலப்பக்கத்தில் வைத்து காத்தனுமாதி அசரவாக்குக்கு மிதுவே அந்தக்கணக்கு இடப்பக்கத்தில்வைத்து எட்டுபேருக்குக்கொடுக்க மிருந்தது தனம் முன் வலப்பக்கத்திலிருந்து கணக்கு இடப்பக்கத்தில் எட்டுபேருக்குக்கொடுக்க மிருந்தது குணம்-தனம் அதிகமா யிருந்தது குணம்

குறைவாயிருந்தால் நல்லது குணமதிகமாயிருந்து தனம் குறைவாயிருந்தால் நல்லதல்ல தனமும் குணமும் சரியாயிருந்தால் ஆதாயமும் விரையமும் சரியாயிருக்கும.

கோளச்சக்கரநிலை.

ஈசான்யமுதல் மீனம் ஆதியாய்வைத்து 12 ராசியும் இந்த சக்கரத்தை பிரதட்சணமாயெழுதி கர்த்தன் ராசிக்கு விடப்படுகிற விடத்தை எண்ணிக்கொண்டுவரும் சக்கரமாகையால் கர்த்தன் நாலாம் ராசியிலும் ஐந்தாம்ராசியிலும் வீடுகட்டினல் பந்துக்களை போஷிப்பான் ராசிக்கு 3 7 11 இந்தராசியில் வீடுகட்டினல் அன்னியரை போஷிப்பான் 2 9 10 இந்த ராசியில் வீடுகட்டினல் நாசமாம்.

| | | | |
|---|---|---|---|
| மீனம். | மேஷம். | ரிஷபம். | மிதுனம். |
| கும்பம். | கோளச்சக்கரம் மீனமுதல் வைத்துப் பார்க்கவும். | | கடகம். |
| மகரம். | | | சிங்கம். |
| தனுசு. | விருச்சிகம். | துலாம். | கன்னி |

குழிகெல்லி மண்ணெடுத்துப் பார்க்குமிலட்சணம்.

வீட்டுக்கர்த்தாவானவன் தன்முழத்தால் ஒருமுழ அகலநீளம் ஒருமுழம் ஆழம் நான்கு பக்கமும் கீழ் ஆழமும் சரியாய்ப்பார்த்து பள்ளமெடுத்து மறுபடியும் அந்த மண்ணை அப்பள்ளத்தில் நிறப்பிப் பார்க்கும்போது மண்மிகுந்தால் சுபம் சரியாயிருந்தால் சமமாயிருக்கும் குறைவாயிருக்குமாகில் தரித்திரம் இதன்றி சூரியன் அஸ்தமானமாயிருக்கும்போது மேற்படி பள்ளத்திலிருக்கில் மண்ணை எடுத்துப்போட்டு அதில் நிரம்பத் தண்ணீர்விட்டு மறுநாள் உதயத்தில் பார்க்கும்போது தண்ணீரிருந்தாலும் சேருயிருந்தாலும் சுபம் அந்தப்பள்ளத்தில் தண்ணியில்லாமற்போனலும் சேர் இல்லாமற்போனலும் ஒக்கப்பூச்சி ஓடியிருந்தாலும் ஆகாது மேற்சொல்லிய குழிகள் தண்ணீரும் பாலும் வார்த்தபோது பிரதட்சணமாகச் சுற்றினல் நன்மை.

கயிறு பிடித்தளக்கு மிலட்சணம்.

பிராமணுள் க்ஷத்திரியர் பூமிமுதல் முழங்காலாற் ரூட்டு நக்கவேண்டும் மறுபடியும் பிராமணுள் தெற்பையால்தொட்டு நக்க

வேண்டும் வைசியனும் சூத்திரனும் திரித்தபூண்டத்தால் நக்கவே ண்டும் க்ஷத்திரியர் தேங்காய்கயிற்றினல் நக்கவேண்டும் வைசியர் பனைநார் கயிற்றினல் நக்கவேண்டும் சூத்திரர் நூற்கயிற்றினல்முப் புரிபோட்டு அதனல் நக்கவேண்டும் இந்தக் கயிற்றினல் கோயில் களுக்கும் பிராமணுள் வீட்டுக்கும் க்ஷத்திரியர்வீட்டுக்கும் அளக்க லாம் பின்பு இரட்டைபுரி நூற்கயிற்றினல் வைசியர் சூத்திரர் இவ ர்கள் வீட்டுக்கும் அளக்கலாம் இந்தக்கயிறு பிடித்தளக்கும்போது எந்தசீவன்தாண்டுகிறதோ அந்தசாதி எலும்பு அகப்படும் அதை எடுத்துப்போட்டுவிடவும் மேற்படிகயிற்றினல் அளக்கும்பேர்து கோழிதாண்டினல் பக்ஷிஎலும்பு கீழ்மூலைபாரிசத்திலிருக்கும் பூனை தாண்டினல் அதினெலும்பு முயலெலும்பு ஈசானியத்திலிருக்கும் பசுதாண்டினல் அதினெலும்பு வருணன் மூலையிலிருக்கும் கழுதை தாண்டினல் அதனெலும்பு வாய்வுமூலையிலிருக்கும் குதிரைதாண்டி னல் அதனெலும்பு வாய்வுமூலையிலிருக்கும் குதிரைதாண்டினல் அ தனெலும்பு வடக்கு மூலையிலிருக்கும் ஒருமனிதன் எண்ணை தேய் த்துக்கொண்டு எந்தமூலையில் நின்றுபார்க்கிறனே அந்த திக்கில் 73 அங்குலம் ஆழப்பள்ளமெடுத்துப் பார்த்தால் மனிதனெலும்புயிருக் கும் பயித்தியம்பிடித்தவன் எந்தமூலையைப்பார்க்கிறனே அந்தமூ லையில் அங்குலந்தோண்டிப்பார்த்தால் மனிதனெலும்பு அகப்படும் இந்தப்படி பூமியைச்சோதித்து வீடுகட்டவேண்டும்.

## மனையில் எலும்பிருக்கும் குணலட்சணம்.

வீடுகட்டும்போது பூமியை சோதனைசெய்யாமல் வீடுகட்டின பலன்யாதெனில் பசுவிருந்து பாலில்லாமலிருந்தால் குழந்தை எலு ம்பு கிழண்டையிருக்கும் பசுக்களிருந்தும் பால்கறவாது துறைத்த னத்தார் கோபமுண்டாயிருந்தால் குதிரை எலும்பு அக்கினிமூலை யிலிருக்கும் ஆகிலும் எந்நாளும் யோகமுண்டாம் யானை எலும்பு தென்னண்டையிருந்தால் யென்னளும் சொணக்காரனயிருந்து துக்கப்படுவன் பன்றியெலும்பு நிருதிமூலையிலிருந்தால் என்றைக் கும் அவமிருத்துதோஷம்வந்தடையும் எருதெலும்பு மேற்கேயிரு ந்தாலென்றைக்கும் ஆரூடஞ்சொல்வார் பின்னும் போக்குவந்தது சொல்லுவார் கழுதையெலும்புயிருந்தால் என்றைக்கும் அர்த்தநாச மாயிருக்கும் ஆட்டெலும்பு வடக்கேயிருந்தால் அண்டை அயலார் என்றைக்கும் சண்டையாயிருப்பார் ஈசானியத்தில்நாயெலும்புயிரு ந்தால் வீட்டிலெந்நாளும் கலகமாயிருக்கும்நடுவீட்டில் தலைமண்டை யோடிருந்தால் அவ்வீடு மனையை ஆறுசாணளவு மண்ணெடுத்து சோதனைசெய்து வீடுகட்டினல் சுகமுண்டாகும் கோயில்கள் கட்ட வேண்டுமானல் அந்தபூமி யெவ்வளவோ அவ்வளவு விஸ்தாரம் ஏழு சாணுழம் மண்ணெடுத்து சோதித்து கட்டவேண்டும் வைசியனல் 4 சாண் மண்ணெடுத்துக் கட்டவேண்டும் சூத்திரன் 3 சாண் மண் ணெடுத்துப்பார்த்துக்கட்டவேண்டும்.

சலதாரை லட்சணம்.

அண்டைவீட்டுத்தண்ணீர் தன் வீட்டுக்குவரக்கூடாது நமது வீட்டுத்தண்ணீர் கிழக்கேபோனால் உத்தமம் அக்கினிமூலையில் போனால் எஜமானனுக்காகாது வாய்வுமூலைபோனால் பசுக்கள் நஷ்டமாகும் வடக்கேபோனால் தனமுண்டு ஈசானியமூலையிற்போனால் சுபகாமுண்டாகும் தன்வீட்டில்தானே தண்ணீரிருந்தால் நாசமாம்.

புட்பங்கள் விடுவதற்கு லட்சணக்குறி.

தாழ்விலாமனையின்மீது சதுரமாயொருமுழத்தி
லாழமுமகலங்கெல்லி யதனுனீர்பூவைவிட்டால்
வாழ்கதிரவனைநோக்கி வலம்புரிந்தோடில்வாழ்வார்
சூழ்கதிரிடமாய்ச்சுற்றி சொல்மனையெடுக்கத்தீதே.

இ-ள். மனைக்குநடுவில் நாற்சதுரமாய் ஒருமுழமளவு ஆழம் அகலமுங்கெல்லி அதில்தண்ணீர்விட்டு ஒருமலரைக்கையிலெடுத்து பரமசிவத்தை தியானித்து அதில்போட்சித்தால் அதுகதிரோனை நோக்கி மலர்சுற்றிவரில் அதிகவாழ்வுஞ் சம்பத்தும் கீர்த்தியும் ராஜபிரதிஷ்டையும் வாதிகளும் அதிகரித்து சுபேட்சையுண்டாகும் அம்மலரானது இடப்புறஞ்சுற்றில் அம்மனையெடுக்கில் அதிகதன் பங்களை விளைவிப்பதுமன்றி எக்காலத்து மனோவியாகூலமும்வராத ஆபத்துக்களும் வருமென்று பெரியோர்கள் சொல்வார்கள்-எ-று.

அஷ்டதிக்குலட்சணம்.

ஈசானியமூலைதன்னி லின்பமேயினிதுகொண்டு
வாசமாவதனினின்றால் வரிசையும்வாழ்வுமுண்டாம்
போசனம்பெரியோர்க்கெல்லாம் பொருந்தியமனிதனுவான்
வாசமின்குழலினளே மயனுரைநூல்கண்டானே.

இ-ள். ஈசான்யபக்கமென்று சொல்லப்படுகின்ற பரமசிவத்தினது பக்கத்தில் பரிமளம்பொருந்திய மலரானது வந்துநின்றால் கனதைஸ்வரியமுந் தீர்க்காயுசும் புத்திரசம்பத்தும் வாழ்வுமென்மேலும் விருத்தியாய்ப்பெருகி நீடூழிகாலம் நிலைநிற்கும் இதன்றி பெரியோர்களுக்கும் தபோதனர்களுக்கும் அன்னபானதிகொடுக்க வல்லவனுயிருப்பான்-எ-று.

இந்திரன்மூலைதன்னில் வியப்புடன்கிழக்கில்நின்றால்
செந்திருவாசமாவாள் செம்பொன்னுஞ்சேருமின்ப
மைந்தரைப்பெற்றுவாழ்வார் வளர்கன்றுகாலிசேரும்
முந்தவேமயனுர்சொன்ன முறைமைநூலிதுகண்டாயே.

இ-ள். இந்திரன்திக்கில் பரிமளம்பொருந்திய மலரானதுவந்துநிற்குமாகில திகசவுந்தரியம்பொருந்திய லட்சுமிவாசம் தனதான்யசம்பத்தும் சந்தானவிர்த்தியும் தீர்க்காயுளும் ஆரோக்கியமும்

மன்மதகிரீடையும் அறுபத்துநான்கு கலைக்கியானமும் பதினெண் புராணங்களும் நான்குவேதமும் ஆறுசாஸ்திரமும் பொருந்துவதுமன்றி பசுக்கள் முதலிய பரவைகளுஞ் சேறும்-எ-று.

அக்கினிமீதினின்று லாயிழைமலடியாவாள்
செக்கர்வானரவந்தீண்டுந் தீப்படுமனையெடுக்கில்
கொக்கதுமிகவுமுண்டு சோரர்கள்கலகமுண்டாம்
இக்கருமயனார்சொன்ன விசையநூலிதுகண்டாயே.

இ-ள். அக்கினிதிக்கில் வாசம்வீசுகின்ற புஷ்பமானதுவந்து நிற்குமாகில் கற்புநிலைபொருந்திய பெண்சாதியானவள் மலடியாவள் இதன்றி விஷத்தைத்தாங்கின்ற பாம்பினால் பயமும் அச்சமும் உண்டாகும் அக்கினியாலும் கள்ளர்கள்பயத்தினாலும் பொருள் சற்பாத்திரருக்குதவாமல் எஜமான் நாசமாவான்-எ-று.

அந்தகன்றிக்குமூலை யின்புடன்வந்துநிற்கில்
சிந்தனைமிகவுமுண்டாஞ் செருக்கதாங்கலகமுண்டு
பிந்தியதீமையோடு பிணியினாலச்சமுண்டாம்
செந்தமிழ்புனைந்தபாடல் தீதிலாமயன்சொன்னானே.

இ-ள். இயமன்மூலையென்னும் வடதிக்கில் வாசமுள்ளமலரானது வந்துநிற்குமாகில் மனதில்சிந்தனையும் வியாகூலமும் நெருங்கும் பலபேரால் கலகமும் தீங்காகிய காரியமும் தீமை பிணி அச்சம் முதலியவைகளும் அதிகரித்ததுண்டாம்-எ-று.

கன்னிமூலையிலேநின்றால் கைப்பொருள்மிகவுண்டாகும்
மனமுந்தனமுஞ்சேரு மாயிடைவந்துநிற்பாள்
பொன்னொடுதானியங்கள் பொருந்தியசெல்வமுண்டா
முன்னமேமயனார்சொன்ன முறமைநூலிதுகண்டாயே.

இ-ள். கன்னிமூலையில்மலர்வந்துநிற்கில்பொருளும் அன்னமும் மனமும் இலட்சுமிப்பிரகாசமும் நவதானியலாபமும் பிறவிச்செல்வமும் எங்நாளும் நீங்காமல் வற்றாச்சமுத்திரமாய் மென்மேலும் பெருகவுண்டாகும்-எ-று.

வருணன்றன்மேற்குநோக்கி வந்துமேநிற்குமாகில்
இருநிதிச்செல்வமுண்டா யிருக்குமேவிளையுமாறி
கருதியகருமநன்றாங் கருணையும்பெற்றுவாழ்வார்
மருவியகனதையுண்டாம் வளம்பெருமயன்சொன்னாரே.

இ-ள். வருணன்மூலையில் அழகும் வாசமும்பொருந்திய பூவானதுவந்து நிற்குமாகில் நின்றசெல்வ மாறாமலிருப்பது மல்லாமல் நினைத்தகாரியமும் ஆரம்பித்த தொழில்களுஞ் செயமாகும்-எ-று.

வாயுவுமூலைதன்னில் வந்துடனிற்குமாகில்
காமநோய்கொண்டுசாவான் களவினாற்பொருளும்போகும்
பேயுமேபிடித்துக்கொள்ளும் பிணஞ்சுடுங்காடதாகும்
தேயுமேயாகுமென்று செயல்பெருமயன்சொன்னானே,

இ-ள். வாயுமூலையில் விசித்திரம்பொருந்திய மலர்வந்து நிற்குமாகில் பதினெண்காசமென்னும் க்ஷயரோகத்தால் மரணமும் சோரர்கள்பயம்முதலிய பொருட்சேதம் அன்றி அம்மனையானது அலகைவாழுஞ் சுடுகாடாகும் அன்றியும் சகலபாக்கியமும் அழிந்துபோகும்-எ-று.

குபேரன்றன்றிக்குநோக்கிக் குணம்பெறநிற்குமாகில்
விபரமாய்ப்பொருள்கைகூடும் வித்தையும்புத்திநல்கும்
சபைநலம்பெரியோனுவன் றன்மசிந்தனையுண்டாகும்
அபயமென்றோரைக்காப்ப னருள்பெருமயன்சொன்னானே.

இ-ள். குபேரன்திக்கில் விநோதம்பொருந்திய மலரானதுவந்து நிற்குமாகில் தனதான்யசம்பத்தும் புத்திரசந்தானமும் ஆயுள்விர்த்தியும் சபையோக்கியமும் அதர்மசிந்தைநீங்கி தர்மசிந்தையோங்கி அபயமென்றவரைக்காத்துப் பொருளுதவிசெய்துவரப்பட்ட மகாபுண்ணியவானுகவும் இருப்பான்-எ-று.

மண்வெட்டி முழக்கயிர்சகுனம் வேறு.

மனைகோலவந்த மண்வெட்டிதானு
முனைமுறிந்திடினு முனைபருத்திடினு
முனைமலர்க்கேர்க்கு மிசைக்கயிற்றினும்
வனைகுழலாளே வந்திடுதுன்பமே.

இ-ள். மனைகோலுவதற்குக் கொண்டுவந்த மண்வெட்டி முனையானது முறியினும் முனையானது பறிந்திடினும் கயிறு அறுந்திடினும் ஆகாது அதென்னெனில் எஜமானுக்கு ஆபத்தும் மனக்கிலேசமும் அனுபவிப்பதுமன்றி நீடூழிகாலந் துன்பத்தையனுபவித்து யமபதிக்குப் பாத்திரனுவான் ஆகையால் அந்தமனை ஆகாது.

வேறு.

பட்டுநூல்தர்ப்பையோடு பகருமால்விழுதுபண்பார்
நட்டனைப்பனையினும் நவினூல்வேறோடு
திட்டமாமறையோர்தானுஞ் சிறந்தக்ஷத்திரியர்சூத்ரர்
மட்டவிழ்வையரோடு வகையதுபிரிவுசொல்லே.

இ-ள். பட்டுநூல் தர்ப்பை ஆலம்விழுது பனைநார் இவைகள் தேவர்முதல் நான்குசாதியர்க்கும் தெளிவாகவிரித்துச்சொல்வாம்.

தேவர்க்குப்பட்டுநூ லாரமுப்புரியதாகும்
மேவியமறையோர்தர்பை விளங்குமுப்புரியதாகும்
காவியால்விழுதுமூன்று புரிவதுவைசியர்நூலாந்
தாவுசூத்திரர்பனைநார் தானிருபுயமதாமே.

இ-ள். தேவர்களுக்குப் பட்டுநூலால்முப்பரிக்கயிறு பிராமணர்களுக்குத் தற்பையினல் முப்பிரிக்கயிறு இராஜாக்களுக்கு ஆலம்விழுதால் முப்பிரிக்கயிறு வைசியர்களுக்குப் பருத்திநூலால் இரண்டு

பிரியையுடையகயிறு சூத்திரர்களுக்குப் பனைநாரினால் இரண்டுபிரிக் கயிறும்-எ-று.

புற்றிலட்சணம் வேறு.

இந்திரன்செல்வமக்கினிமனையு மிடியுமேயெமன்மன்றிசைநிற்க
அந்தமாமிரும்நன்மையாம் வருணனருளினபுத்திரலாபம்
உந்தியவாயுதுக்கமாங்குபேரனேங்கிய தன்மையீசான்னியம்
பிந்தியதனியாம்பிரமதானத்தில் பெருகியசாவனப்புற்றே.

இ-ள். இந்திரபாகத்தில்புற்றுண்டாகில்செல்வமான தவிர்த்தி யாகும் அக்கினிபக்கத்தில் மனையானது இடிந்துபாழாகும் யமன்றி சை துக்கமுண்டாகும்நிருதிபாகத்தில்நன்மையுண்டாகும்ஈசானிய பாகத்தில் பிணியுண்டாகும் வருணபாகத்தில் புத்திரபாக்கிய முண் டாகும் வாயுபாகத்தில் அதிக துக்கமுண்டாகும் குபேரபாகத்தில் அதிக நன்மையுண்டாகும் பிரமதானத்திலுண்டாகில் மரணமாம்.

சுவர்கெனமுயர்வு லட்சணம்.

ஒருமுழம் அகலம் பிராமணத்திற்கு இரண்டுமுழப்பிரமாணம் சுவர்வைக்கவேண்டும் 10-சாணுயரமுள்ளசுவர் அரசர்களுக்கும் பி ராமணர்களுக்காம் 9-சாண் உயரமுள்ளசுவர் வைசியர்களுக்கு சூத் திரர்க்குமாம் 8-சாணுயரமுள்ளசுவர் சங்கரசாதிகட்காகும் இந்த கணத்திற்குக் குறைவாயிருக்கலாகாது இதையறிந்து செய்யவேண் டியது சுவர்வைக்கும்போது விழுந்தால் சோரபயம் வெளியாய்ச் சுவர்விழுந்தால் கலகம் உட்புறம்விழுந்தால்வீட்டுக்குடையவனுக்கு ஆகாது.

திதிகள்பலன்.

நத்தை இருத்தை பத்திரை அமாவாசி பௌர்ணமி இவைகளில் தம்பப்பிரதிட்டை செய்யக்கூடாது மற்றதிதிகள் செய்யலாம்.

வாரபலன்.

ஆதிவாரம் அக்கினிபயம் சோமவாரம் கலகம் மங்களவாரம் மிருத்துவுபயம் புதன் வியாழம் வெள்ளி இந்த மூன்று வாரங்களில் செய்யில் சுபமுண்டாகும் சனிவாரம் புத்திரஆனி.

நட்சத்திரபலன்.

அஸ்தம் ரேவதி அசுவனி சதயம் அவிட்டம் பூசம் திருவோ ணம் புனர்பூசம் ரோகணி சித்திரை அனுஷம் உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி இந்த நட்சத்திரங்களில் பிரதிஷ்டை செய்யில் தன மும் புத்திரசுகமுண்டாகும.

இலக்கின சுபக்கிரக குரூரநிர்ணயம்.

4-ம் ராசி 10-ம் ராசி 7-ம் ராசி 9-ம் ராசி 5-ம் ராசி இவைக ளில் சுபக்கிரகமிருந்தாலும் சுபக்கிரகம் லக்கினத்தைப் பார்த் தாலும் சுபக்கிரகம் உச்சத்திலிருந்தாலும் பாவக்கிரகம் 6-ம் ராசி 3-ம் ராசி 1-ம் மகாராசியிலிருக்க ஸ்தம்பம் பிரதிஷ்டைசெய்யில் சுபகரமுண்டாகும்.

## மாதங்களில் காலசர்ப்பகெதிலட்சணம்.

காலசர்ப்பகெதி ரிஷபம் மிதுனம் கடகம் இந்த மூன்று சங்கராந்திபதியிலும் காலசர்ப்பம் ஈசானியத்தில் சிரமும் வாயு மூலையில் இடுப்பு நிருதிமூலையில் வாலும் இதன் பின்பக்கமாய்வந்து சிம்பம் கன்னி துலாம் இந்த மூன்று சங்கராந்தியிலும் வாய்வு மூலையில் சிரசும் நிருதி மூலையில் இடுப்பும் அக்கினி மூலையில் வாலும் இதன் தென்பக்கமாய்வந்து விருச்சிகம் தனுசு மகரம் இந்த மூன்று சங்கராந்தியிலும் நிருதி மூலையில் சிரசும் அக்கினி மூலையில் யிடுப்பும் வாய்வு மூலையில் வாலும் இவ்விதமாயிருக்க ஸ்தம்பப்பிரதிஷ்டைசெய்யில் சுபப்பிரத்தம் சிரசில் செய்யில் மிருத்துவு பயம் முதுகின்மேற்செய்யில் கெடுதியுண்டாம் வாலின்மேற்செய்யில் சலமை இப்படியிருக்கிறவிடத்தில் ஸ்தம்பப்பிரதிஷ்டைசெய்யில் சகல சம்பத்துண்டாம்.

## சூசிகாசங்கராந்தி நிர்ணயம்.

ரிஷபம் கடகம் மிதுனம் இந்த சங்கராந்தியில் சூரியனிருக்க கன்னி சிம்பம் துலாம் இதில் சம்பந்தமானுலும் உத்திரம் அஸ்தம் சித்திரை இந்த 3 நட்சத்திரத்திலும் சந்திரனிருக்க அக்கினிமூலையில் ஸ்தம்பப்பிரதிஷ்டை செய்யலாகும் கும்பம் மீனம் மேஷம் இந்த சங்கராந்தியில் சூரியனிருக்க ரிஷபம் மிதுனம் கடகம் இந்த சம்பந்தமானுலும் ரோகணி மிருகசீரிடம் புனர்பூசம் இந்த 3 நட்சத்திரத்திலும் சந்திரனிருக்க நிருதிமூலையில் ஸ்தம்பப்பிரதிஷ்டை செய்யவும் இந்தப்படிக்கு பிரதமஸ்தம்பப்பிரதிஷ்டை செய்யலாம் சுபப்பிரதம் அன்னியமார்க்கத்தில் செய்தால் கேடுவரும் வீட்டுக்கு லக்கினகேந்திர கிரகபலன் பிரகஸ்பதியிருக்கும் லக்கினத்தில் ஸ்தம்பப்பிரதிஷ்டைபண்ணி புதனிருக்கிற லக்கினத்தில் தூலமேந்தி சுக்கிரனிருக்கிற லக்கினத்தில் ஓடு மூடினுல் அந்த வீட்டுக்கு அக்கினிபயம் சோரபயம் ராசபயமில்லை சலராசியில் சந்திரனிருக்கவாகிலும் 5-ல் 6-ல் சந்திரனிருக்க சுக்கிரவாரத்தில் வீடு கட்டினுல் சம்பத்துண்டாம்.

## இப்பாலராசரோகம்.

குருவாரத்தில் கடகம் மீனம் தனுசு இந்த லக்கினத்தில் பிரகஸ்பதியானுலும் சுக்கிரனுனுமிருக்க வீடுகட்டினுல் அந்த வீட்டில் சவுக்கியமாம் ராசாதிபதியாம் புத்திரசம்பத்துண்டாகி சுகமாயிருப்பார்கள் சுபக்கிரகம் 9-ல் இருந்தாலும் லக்கினத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாலும் அப்படிப்பட்ட வேளையில் ஸ்தம்பப்பிரதிஷ்டை செய்தால் சுபப்பிரதமாகும் மீனலக்கினத்தில் சந்திரனிருக்கவானுலும் 4-ல் பிரகஸ்பதியிருக்கவானுலும் 10-ல் உச்சத்தானமாயிருந்த சனி 11-ல் இருந்தாலும் அப்படிப்பட்ட லக்கினத்தில் ஸ்தம்பப்பிரதிஷ்டைசெய்தால் சுகமுண்டாம்.

## மாதமாஞ்சூரியனிருக்கும்நிலை.

### வெண்பா.

சித்திரையுமைப்பசியுஞ் சிரோங்குஞ்சித்திரையின்
அத்திங்களோர்தும் அருகேறும்-பத்தி
பின்னோர்துமாதம் பிசகாமல்ராவேறும்
முன்னேவிடுபூ முடி.

## ஜென்ம நட்சத்திரம் பார்க்கும்நிலை.

ஜன்மநட்சத்திரமுதல் கடைசி நட்சத்திரம்வரைக்கும் எண்ணின துகையை நாலில்பெருக்கி திதிவாரங்கட்டி நவக்கிரகத்தில் கிழக்கே நின்றது ஆதித்தன் சோமன் லாபயோகம் அங்காரகன் சனி மகாபாண்டம் ராகுநாதபாதம் கேதுமகதயன் இதுகித்தியபலன்.

லக்கினத்தில்பிரகஸ்பதியிருந்தாலும் சுக்கிரனிருந்தாலும் இப்போதுவிடுகட்டினால் ஐந்து நூறுவருஷம்லக்கினத்தில்சுகமாயிருப்பார்கள் லக்கினத்தில் புதனிருந்தால் அன்பதுவருஷம் புதனும் சுக்கிரனும் பிரகஸ்பதியுமிருந்தால் அன்பது வருஷம் ஸ்தம்பப் பிரதிஷ்டை லக்கினத்தில்பிரகஸ்பதிகாளின் சந்திரனும் அங்காரகனும் சனியும் பகல் இருக்க 40-வருஷம் சுகமாகவிருக்கும் லக்கினத்தில் சந்திரனிருக்க 100-வருஷம் சிங்கம் கன்னி துலாம் இந்த மூணுராசியிலும் சூரியனிருக்க ஈசானியத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யவேணும் கும்பம் மேஷம் இந்த இரண்டு ராசியிலும் சூரியனிருக்க நிருதிமூலையில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யவேணும்ரிஷபம்கடகம் மிதுனம் மூணுராசியில் சூரியனிருக்க அக்கினிமூலையில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யாமல் அன்னியமாகச் செய்தால் தரித்திரம் துக்கமும்வரும் புருஷனுக்கு ஆனியாம்.

## வாசற்படிவைக்கும் இலட்சணம்.

ஒருவீட்டு நாலுபக்கத்திலும் வாசற்படிவைத்திருந்தால் விசுவதோமுபகமென்று சொல்லப்படும். அதன்பதன் வித்தியாப்பிரத்தம் கிழண்டை வாசபடி யில்லாமல்மூன்று பக்கத்துக்கும் இருந்தால் வியர்க்கியபாதமென்னபடும் இதன் பலன் பசுவுக்கும் மிருகங்களுக்குப் பாதையாய் திருடர்பயமாகும் தெற்குமுகம் வாசற்படியில்லாமல் மற்ற மூன்று பக்கத்திலுமிருந்தால் பாக்கியபிரசம் மேற்குமுகமாக வாசற்படியில்லாமல் மறலமூன்று பக்கத்துக்கு மிருந்தால் ஸ்ரீநிலயமென்றுசொல்லப்படும் இந்தபலன் நன்றாக வாழ்வார்கள் வடக்குமுகமாய் வாசற்படியில்லாமல் மூணுபக்கத்திலு மிருந்தால் சூரியநிலையமென்னப்படும் இதின்பலன் ராசபயம்விசுறவெகுமுகத்தில் சுவரில்லாமலிருந்து கோணியத்தில் சுவரிருந்தால் அது பிண்டரீகமென்னப்படும் இதன்பலன் மத்திமம்.

தெற்கும்-மேற்கும்-கட்டினவீடு விசாலத்துக்கு கமலாகர மென்னப்படும் இதன்பலன் லட்சுமிபிரதம் மேற்குமுகம்வடக்கு முகம் கட்டினவீடு விசாலத்துக்கு சவர்னப்படும் இதன்பலன் சோர பயமும் பீடையுண்டாம் வடக்குமுகமும் கிழக்குமுகமும் கட்டின வீடு விசாலத்திக்கு புஷக்கமூஷ்டிகமென்னப்படும் இதன்பலன் சோரபயமும் விஷபக்கமுமாகும் தெற்குமேற்குவடக்கு கட்டின வீட்டுக்கு கிழக்கி அவ்விதத்தில் வாசக்கால் வைத்தால் புத்திர புஷ்டிகமென்னப்படும் இதன்பலன் பயன்வடக்கு கிழக்கிதெற்கு கட்டின வீட்டுக்கு மேற்கிழக்குமேற்கு வடக்குகட்டின வீட்டுக்கு வடக்கில் வாசற்கால் வைத்தால் நல்லசுகமுண்டாம் மேற்கு கிழக்கு வடக்கு அந்தமூன்றுபக்கத்திலும் வாசற்காலிருந்தால்கலியாணபத மென்னப்படும் இதில் சம்பத்துண்டாம் கிழக்கு தெற்கு மேற்கு வடக்கு இந்த நாலுபக்கத்திலும் வீடுகட்டியிருந்தால் அது சதுரங்க சாலே யென்னப்படும் இதன் உத்தமம்.

### வாரபலன்.

| | |
|---|---|
| சக்கிரவாரம்-சோமவாரம் | சுபகரம் |
| புதன்-வியாழம் | தனபிரதம் |
| ஆதிவாரம்-மங்களவாரம் | துக்கபிரதம் |
| சனிவாரம் | சோரபயம் |

### இவ்வாரங்களுக்குக் காரணமறிய.

| | |
|---|---|
| ஆதிவாரத்துக்கு | வளிகரணம் |
| சோமாாரத்துக்கு | காகணரம் |
| மங்களவாரத்துக்கு | தைதுலாம் |
| புதவாரத்துக்கு | கௌலவம் |
| குருவாரம்-சுக்கிரவாரத்துக்கு | பவம் |
| சனிவாரத்துக்கு | பத்திரை |

### நட்சத்திரப்பலன்.

அசுவனி மிருகசிரம் ரோகணி பூசம் அஸ்தம் சித்திரை அநுஷம் உத்திராடம் திருவோணம் அவிட்டம் சதயம்-11-உத்தமம்.

திருவாதிரை புனர்பூசம் உத்திரம் கேட்டை உத்திரட்டாதி ரேவதி இந்த 9-ம் மத்திபம்.

பரணி கார்த்திகை ஆயிலியம் மகம் பூரம் பூரட்டாதி சுவாதி மூராடம் விசாகம் மூலம் இந்த 10-ம் அதமம்.

### யோகபலன்.

வச்சிகம் பரிசிகம் விதிபாதம் வைதிருதி கண்டம் சூலம் அதிகண்டம் விஷக்கம்பம் விவாகதம் இந்த 9-ம்நலமல்ல மற்ற 18-ம் உத்தமம்.

| | | | |
|---|---|---|---|
| அசுவனிக்கு | அரிசனம் | கேட்டைக்கு | சூலம் |
| ரோகணிக்கு | பிரிதி | மூலத்துக்கு | சுபம் |
| புனர்பூசத்துக்கு | விதிவாதம் | திருவோணத்துக்கு | விருத்தி |
| மகத்துக்கு | சோபனம் | பூரட்டாதிக்கு | ஐந்தாம் |
| அஸ்தத்துக்கு | சிவம் | இந்த 10-ம் | நக்ஷத்திரம் |
| விசாகத்துக்கு | துருதி | யோகத்துக்கு | தனம்-4 |
| பரணிக்கு | விஷ்கம்பம் | பூரட்டாதி | கண்டம் |
| மிருகசிரத்துக்கு | சித்தி | அவிட்டத்துக்குப் | பிரமம் |
| பூசத்துக்கு | சௌபாக்கியம் | உத்திரட்டாதிக்கு | விவாகம் |
| பூரத்துக்கு | பரிசம் | இந்த 6-ம் | நட்சத்திரம் |
| சித்திரைக்கு | சுபகர்மம் | யோகத்துக்கு | தனம்-9 |
| அனுஷத்துக்கு | சாத்தியம் | உத்திரட்டாதிக்கும் | |
| கார்த்திகைக்கு | வச்சிரம் | சதயத்திற்கு | துருவம் |
| திருவாதிரைக்கு | ஆயுஷமான் | சரேதிக்கு | வைதிருகம் |
| ஆயிலியத்திற்கு | வரியான் | இந்த 9-ம் | நட்சத்திரம் |
| உத்திரத்திற்கு | அதிகண்டம் | யோகத்துக்கு | தனம்-12 |
| சுவாதிக்கு | சித்தம் | | |

## நட்சத்திரத்திற்கும் யோகத்திற்கும் தாரபலன்.

| | |
|---|---|
| அசுவனிக்கு | பேசிதாரம் |
| ரோகணிக்கு | சரிதாரம் |
| புனர்பூசத்துக்கு | பேசிதாரம் |
| மகத்துக்கு | சரிதாரம் |
| மூலத்துக்கு | பேசிதாரம் |
| திருவோணத்துக்கு | சரிதாரம் |

பூரட்டாதிக்கு பேசிதாரம் அசுவனிக்கும் பேசிதாரமாகையால் அந்த நட்சத்திரத்தில் சங்கியங்கூட நட்சத்திரம் 200 கூட்டினால் யோகமும் அசுவனிக்கு வரும்.

ரோகணி 4-வது சரிதாரமாகையால் அர்த்தம் இரண்டாவது யோகம்வரும் இந்தப்பிரகாரம் கணக்கு சரிபார்த்து நட்சத்திரத்திற்கும் யோகத்திற்கும் தெரிந்துகொள்வது.

இந்தப்படி பரணிமுதல் 9 நட்சத்திரமும் சொன்னபடி எண்ணிக்கொண்டு யோகத்தை அறியவும் கரணபலன்.

பவம் பாலவம் கௌலவம் தைதுலை இந்நான்கும் உத்தமமகா சைவனசை இரண்டு மத்திபம் விஷ்டிசகுனி நாகவம் சதுஷ்பசமகிமஸ்துக்கினம் இவ்வைந்தும் நஷ்டம் அமிசை மத்திபம் அமிசைந்தவ அமிசை இம்மூன்றும் அதிகமாயிருக்க கோசார அமிசை புத்திர அமிசை யென்னப்படும் இப்படியாக அங்குலம் 6 அமிசை 9 அமிசையல்லாமல் வேறு அதிகமுங் குறையும் வருகிறதில்லை 3-6 நன்மை ஆகாது அமிசை கூடாது கர்த்தனுக்கு 14-வயதுக்கு மேலிருந்தால் வாக்கியப்பிரதம் 60-வயது குறைவானால் அனிபிரதம் தேவேந்திர கர்த்தனானல் சுயப்பிரதம் அக்கினிக் கர்த்தனானல் கீழ்மேலாக செய்விக்கும்.

மரங்கள்வெட்டும் விதி.

வாரம் யோகம் கரணம் இவைகளையறிந்து கர்த்தனுக்கும் சந்திரதானபலன் பார்த்துக்கொண்டு தச்சனுக்கு கெந்தம் தாம்பூல புட்பம் தட்சணைகொடுத்துக் காட்டுக்கனுப்பி மரம் வெட்டினால் சுகமுண்டாகும்.

மரங்கள்வெட்டும் திதிநிர்ணயம்.

பஞ்சமிமுதல் ஐந்துநாளில் வெட்டினால் பூச்சிபிடியாது இவ்வைந்துநாளையில் ரோகணி நட்சத்திரத்தினால் மிகவுமுத்தமம் வேல மரம் வெட்டினாலும் பூச்சிபிடியாது இதற்கு ஆகாநாள் கிர்த்திகை நட்சத்திரத்தில் ,சூரியனிருக்க திருவோணம் அவிட்டம் மூன்றாம் பாதத்திலும் சுக்கிரநிற்க மரம் வெட்டலாகாது.

முன்பு வெட்டின மரங்களினாலும் இந்த நட்சத்திரத்தினாலும் இவைகளிருக்கும்போது வீட்டுக்குக் கொண்டுவரக்கூடாது பின்பு திருவோணம் அவிட்டம் சதயம் பூரட்டாதி உத்திரட்டாதி மகம் பூரம் உத்திரம் அஸ்தம் சித்திரை சுவாதி இந்த சுக நட்சத்திரத்திலும் சந்திரனிருக்க மரம் வெட்டலாகாது வெட்டின மரங்களானாலும் வீட்டுக்குக் கொண்டுவரக்கூடாது.

மாதநாளில் கெர்ப்பமோடுவது வெண்பா.

பானுதனுவில் பதின்மூன்றே முக்கால்மேல்
ஆனிக்குகெற்பமறுகாலே-மானேகேள்
நண்டுமுதல்தேளளவு நாலரையேமாகாணி
கொண்டதனுசுக் கென்றேகூறு.

சங்குஸ்தாபனமுஞ்செய் திருக்கின்றவிடத்தில் தனக்குவேண்டும்வேளையில் வீடுகட்டலாம் இதற்குதோஷமில்லைசங்குஸ்தாபனஞ் செய்யவேண்டியது சுக்கிலபட்சம் சோபனமுண்டு பிரதமை சஷ்டி ஏகாதசி இம்மூன்றுஞ் சத்தமிதிதி சவுத்தி நவமி சதுர்த்தசி இம்மூன்றுமரிக்கத் திதி அமாவாசைமுதல் இந்நாட்களில் சங்குஸ்தாபனம் செய்யலாகாது புதன் வியாழம் வெள்ளி இந்த மூன்றுநாளில் செய்தால் சுபப்பிரதம் சனி ஞாயிறு செவ்வாய் இந்தவாரங்களில் கூடாது.

சங்குஸ்தாபன நிர்ணயத்துக்கு சாத்திரம்.

சதயம் திருவோணம் உத்திரம் அஸ்தம் ரேவதி சுவாதி ரோகணி மிருகசிரம் சித்திரை பூசம் உத்திரம் புனர்பூசம் அனுஷம் அவிட்டம் இந்த 15 நட்சத்திரத்தால் சங்குஸ்தாபனம்பண்ணுமல் நன்மை இந்த நக்ஷத்திரங்களுக்கு தோஷமில்லாமலிருக்கவேண்டும்.

தத்தாதாரம் சமஸ்தாரம் தூமதாரம் ரோகதாரம் நிற்சிவதாரம் இந்த தாரங்களில் சிபாபரவாக அறிந்து சிவதாரத்தில் சங்குஸ்தாபனஞ் செய்யவேண்டும் தத்தாதாரத்தில் செய்தால் அக்கினி தேவதைகள்,

### கன்னிகா சக்கரம்.

சிவதாரத்தில் இலட்சுமி விரதம் இந்தக் கிரகம் கன்னிகா கால சக்கரம் மூன்று லிங்க கணக்கெழுதி அதற்குக் குறுக்கே ரேவகை நாலு கீறி அடிவரையில் அசுவனி நட்சத்திரமுதல் 27-நட்சத்திரங்களையும் மூன்றுலக்கத்துக்கு முதவும்.

கன்னிகா சக்கரம்.


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | டு | விட பதா | :சி | | அ | |
| 2-ம் பாதம் | ரோ | | தி அ | | சு தி | | ச |
| 3-ம் பாதம் | கா கால | | பு-உ கால் கால் | | மி-உ கால் கா லே | | பூத |
| 4-ம் பாதம் | ப | | பூபூ | | அ-பு | | |
| | அ | | ஆம் | | கேழ் | | ரே |

இந்தச் சக்கரத்தை எண்ணிப் பார்க்க ஊர்த்தமுகம்எந்த குறுக்கு ரேகையில் சந்திரனிருக்கிறதோ அந்த ரேகையில் சூரியனிருந்தால் அக்கினி பயம், அங்காரகனிருந்தால் மிருத்துவு பயம், புதன் இருந்தால் ரோகபிரதம், பிரகஸ்பதியிருந்தால் தானிய ஆனி, சுக்கிரனிருந்தால் கலகம், சனியிருந்தால் சோரபயம், ராகுவிருந்தால்தேக பீடை, கேதுவிருந்தால் சவம், இந்தக்கிரகம் கன்னிகா சக்கரத்தை எண்ணிக்கொண்டுவருகிற நட்சத்திரத்தால்ஊர்த்தமுகமாயிருக்கிற நட்சத்திரத்தால் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்தால் உத்தமம். இரங்கி வருகிற நட்சத்திரம் அதோமுகமாயிருக்கிற நட்சத்திரத்தில் ஸ்தம்பப்பிரதிஷ்டை செய்யலாகாது. ரோகணி-பூசம்-திருவாதிரை-திருவோணம்-அவிட்டம்-சதயம்-உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி இந்த 9-ம் ஊர்த்தமுகநட்சத்திரம் ஆகையால்ஸ்தம்பப்பிரதிஷ்டை செய்யலாம். இதன்றி துவசம் மெத்தை பசுத்தொழுவம் கோபுரம இவைகள் கட்டலாம்.

திருமுக நட்சத்திரத்தில் சுவர்வைக்கவும், பசு ஆடு மாடு குதிரைவாங்கலாம்.

ரேவதி-அஸ்தம்-புனர்பூசம்-சித்திரை-சுவாதி-அசுவனி-மிருகசீரிடம்-அனுஷம்-கேட்டை இந்த நட்சத்திரம் 9-ம் சுவர் வைக்கவும் யானை குதிரை ஆடு மாடு இவைகள் வாங்கவும் உத்தமம்.

அதோமுக நட்சத்திரத்தில் கிணறு குளம் ஏரி இவைகளெடுக்கலாம் விவாகம்மூலம்-ஆயிலியம்-கார்த்திகை-பூரம்-பூராடம்-பூரட்



டாதி மகம் பரணி இந்த 9-நட்சத்ரமும் அதோமுமான தால்கிணறு குளம் ஏரிக்கால் அகழி சுரங்கம் கணக்கு அப்பியாசகளஞ்சிய மிவைகள் செய்யலாம் தனம்புதைக்கலாம் சங்குஸ்தாபனம் பண்ண லாம் ஸ்தம்பப்பிரதிஷ்டைபண்ண முதற்சாமம்உத்தமம் இரண்டாஞ் சாமம் சந்தோஷம் மூன்றுஞ்சாமம் அதமம் நாலாஞ்சாமம் சந்தியா காலம் இராக்காலங்களிலுங் கூடாது.

நாட்டுபுகழ்சோமனைய தற்கு நலங்கொவெட்டறைசெய்து
மீட்டிநடுவில்நாலரையும் விரிஞ்சனநாலும்போய்
ஈட்டுதிசைகளொருநான்கு மிருநான்கறையுமிறையவாரங்
காட்டுநாற்பத்தெட்டறையுங் குணமாய்கொள்வாய்கொம்பனையே.

ஒருமனையில் அறுபத்துநான்கு பாகத்துக்குட்பட்டு
வீடுகட்டுவதற்கு லட்சணம்.

அகந்தனையெல்லைநான்கு மன்புடனய்ந்துகொண்டு
திகழ்தருமாறுபத்து நாலுடன்பாகஞ்செய்து
பாகமேபிரமஸ்தான மத்தியினன்குபாகஞ்
சுகமுயர்திக்குநான்குந் துரிதருத்திரபாகந்தான்.

இ-ள். மனையை நான்குபாகமாக அரைந்துக்கொண்டு அதை அறுபத்துநான்கு பங்காக்கி மத்தியில் நான்குபங்கு பிரமஸ்தானம் நான்குதிக்கும் உருத்திரபாகம்-எ-று. 14

மற்றதோர்திக்குநான்கும் வகையதுசொல்லக்கேளாய்
வித்தகனவிஷ்ணு பாதமாம்விளம்பக்கேளு
சித்தமாங்குறைகளெல்லாந் தேவதைபாகமென்றும்
சுத்தமாந்தமிழைபோதஞ் சுகமயன்சொன்னவாறே.

இ-ள். திக்குகள்நான்கு விஷ்ணுபாகமும் மற்றதெல்லாம் தேவர்களது பாகமென்று மயனென்பவர் சகலருக்குந் தெளிவாகச் சொல்லிய வாக்கியம்-எ-று. 15

அண்டத்துக்கொத்தநேர்மை யருளியபிண்டமாகும்
பிண்டத்துக்கொத்தநேர்மை பெருகியகிரகமாகுங்
கொண்டமுனேத்திரமுநாச கூறியகரங்களோடு
விண்டெயருந்திசென்னி மேவிடிற்கிரகமாமே.

இ-ள். அண்டத்துக்கொத்தபடி பிண்டம் பிண்டத்துக்கொத்த படிவீடு காசாணுதிகளோடுங்கூடி விளங்கிய கிரகம்-எ-று. 16

இந்தநல்விதமாய்ச்செய்தா லியல்புடன்வயதுமீறுஞ்
செந்திருவென்னுமாது திகழ்பிரகாசமாவாள்
சந்ததிதின்றுகாலி தக்கதோர்செம்பொன்சேருஞ்
சுந்தரப்புகழுண்டென்று சோதித்துமயன்சொன்னனே.

இ-ள். இந்தப்பிரகாரமாய் வீடுகட்டினுல் அவற்கு வயது நிதானம்நூறு கன்றுகாலிகள்வரப் பசுக்கள் இவைகள் நாளுக்குநாள்விர்த்தியாவதுமன்றிதாமரைக்கமலத்தில் வீற்றிராநின்ற இலட்சுமியானவள் சேர்ந்து ஆனந்தத்தாண்டவம் புரிந்துகொண்டிருப்பாள்.

வெண்பா.

மதியக்கால்நாட்டி மானுதித்தத்தவைத்து
மிகவெள்ளிதானுதிக்க மேய்த்து-கதிர்பெறவே
மந்திரியார்தானுதிக்க மாடப்புவிமேல்
இந்திரன்போல்வாழ்வீ ரிசைந்து.

இ-ள். சந்திரனுதித்த ஸ்தம்பமுதலியவை நாட்டி புதனுதிக்க பரப்புதீட்ட வெள்ளியுதிக்க தனம் அல்லது ஓடி இசைத்து வியாழமுதிக்க கிரகப்பிரவேசஞ் செய்தால் தேகத்துடன் வாழ்வார்கள்.

சுபகாரியங்கள் செய்யக்கூடாத நாட்கள்.

மாதாந்தமூன்றுநாளும் வருடாந்தமொருபத்தைந்துந்
தீதாந்தகிராணந்தீண்டுந் தினமுன்பின்சேர்ந்தவேழுங்
காதார்ந்தகண்ணாய்நாளில் கடையிருகடிகைதானும்
வேதாந்தமுணர்ந்தோர்தீதென் றுரைத்தனர்மிகவுந்தானே.

மனைக்குவந்த வாரத்தின்மேல் நேத்திரமறிவது

வெண்பா.

பிரிதிமுதலாகப் பாங்குடனேமுற்றித்துப்
புரவிமுதலாகப் போக்கென்னி-நின்றதென
வொற்றைக்கண் ஒன்பதா மீராரிரட்டைக்கண்
மற்றைக்கண்ணுகுங் குருடு.

இ-ள். மனைக்கு எந்தவாரமோ அந்தவாரமுதல் ஆதிவாரம் வரைக்கும் எண்ண எத்தனைவந்ததோ அந்தத்தொகையை 3-ல்பெருக்கி வந்ததொகை எத்தனையோ அத்தனையும் கணக்குக்குஅசுவனிமுதலாகத்தள்ளி நின்றநாள் 9-வரைக்கும் ஒருகண் அதற்குமேல் 12-நாள் இரண்டுகண் அதற்குமேல் 9-குருடு இப்படி மனை நட்சத்திரத்துக்குள் பார்த்து மனை கண்ணுள்ளதென்பது-எ-று. 19

மனைக்குப்பால யவ்வன மூப்பு மரண பருவமறிவது.

மனைக்குவந்த அங்கிசதொகையை 7-ல் பெருக்கி 5-லே கழித்து வந்தது 1-க்கு பாலன் 2-க்கு யவ்வனம் 3-க்கு கௌமாரம் 4-க்கு மூப்பு 5-க்கு மரணமென்பது.

வீடுகட்ட நிச்சயிக்கும்போது நக்ஷத்திரங்கள் நிற்குநிலை
காலாமிர்த லோகத்தின் கருத்து.

வீடு அஸ்திவாரமுகூர்த்த ஸ்தம்பப்பிரதிஷ்டைக்கும் சூரியன் கார்த்திகை பரணி 4-ம் பாதம் ரோகணி முதற்பாகம் இருக்கினும்

மேற்படி சந்திரன் கார்த்திகையிலிருப்பினும் மேற்படி செவ்வாய் கார்த்திகை மகம் ரேவதி உத்திராடம அஸ்தம் மூலம் பூசம் இந்த ஏழுநாளிலும் இருந்தால் கிரகபதியாகிய எசமானனுக்குஅத்தியந்த துக்கமுண்டாம்.

அந்த வீடானது அக்கினியில் பஸ்பமாய்ப்போம் 1-மேற்படி சனி அனுஷம் கேட்டை சுவாதி பூரட்டாதி உத்திரட்டாதி பரணி இந்த 9-நாள்களிருக்க எந்தவீடு கட்டினாலும் அந்தவீடு சீக்கிரமாய் பிரம்மராக்ஷத பூதங்கள்வாசம் பண்ணும். மேற்படி சுபக்கிரகமானாலும் பாபக்கிரகமானாலும் சத்திருக்ஷேத்திரத்திலிருந்து லக்கினத்திற்கு 10-லாவது 7-லாவதிருந்த அந்தவீடு பராதீனமாய்விடும். மேற்படி புதன் சித்திரை அசுவனி உத்திரம் அஸ்தம் மிருகசிரம் ரோகணி இந்த 6-லு மிருந்தால் எஜமானுக்கு ஐசுவரியமுண்டாம்.

குரு ரோகணி மிருகசிரம் ஆயிலியம் திருவோணம் உத்திரம் 3-ம் பூராடம் இந்த 9-திலும் இருந்தால் புத்திரபிரதம் மேற்படி சுக்கிரன் திருவாதிரை புனர்பூசம் அவிட்டம் விசாகம் சதயம் சித்திரை இந்தஆறிலுமிருந்தால் தானியம் புரத்தம் 7-ம் வீட்டில் சுக்கிரனிருந்தால் தானியவிருத்தியுண்டாம்.

சனற்குமாரவாஸ்து.

தருமதிநாலாங்காலி றழலருண் முதற்காற்றன்னிற்
பரிதிவானிருக்கும்போது பாவளநாளதாகும்
மரமயசிலேயேசெம்பொன் மண்ணினன் மனைகள்செய்யில்
எரியழிந்திடுதலுண்மை யெனச்சனற்குமாரர்சொன்னார்.

மனைக்கு ஆயுசும் வயது வரவு சிலவு லட்சணம்.

திருவளர் மனையை யகமதுசெய்யற் சீர்மயனால்தனைக் கேளீர், உரியன்மையையுடைய வன்கையாற்கொண்டு சானுவெனுமுழக்கோ, மருவியமனையை நாற்றிசையளந்து மகிட்சியாய் குழிகளைப் பெருக்க, அருமையாய்குழியை யெட்டினுக்கியவாயமாயடைவுடன் சொல்லே.

கலிவிருத்தம்.

பூமலிநான் குசாண் பொலிந்தகோலினே
தேமலிமனை தனக்கெல்லைதேடிய
தாமலிபூருவந்தழைத்தவுத்தமங்
காமலியாய்மரங்கணக்கின்சீரதே.

இ-ள். எஜமான் ஜானல் நாலுஜாண்கோல்கொண்டு கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு இந்நான்கு திக்கையுமளந்து இருப்பதுகையுங்குழிமாயறிது ஆழமாகவைத்துக்கொண்டு திசைப்பொருத்தம் பார்க்கவேண்டியது-எ-று.



வெண்பா.

சானன்கோல்கொண்டு தப்பாமல்நான்கெல்லை
கோணமலேயளந்து குழிமாறி-பூணர்ந்து

இப்புவியின் மாதே யிருநான் கிவீரேல்
கெற்பக்கிரக கோலாம்.

வேறு.

இட்டவெட்டுடன் பன்னிரண்டாக்கமாம்
ஏற்குமொன் பதோடிரைத் தழிவதா
முட்டிமூன் றுடனெட்டுமேயோனியாம்
மொழிந்தவெட்டுடன் மூவொன் பானுளதாய்
நட்டநான் குதணமுப்பதுபக்கமாம்
வளருமொன் பதோடேழுங்கிழமையாம்
மட்டலேழுடனீரா றுராசியாம்
மற்றவொன் பதும்நல்வகைவருணமாம்
ஒட்டுநான் குடனென் பது அங்கமாம்
ஓங்குமூலவொன் பதெ்தாக்குநீ ருயுமீள.

மயன் சனற்குமாரவஸ்து கடகவஸ்து விமேசுரமாலை உள்ளமுடையான் காலாமிர்தம் இவைகளும் தேவர்கள் அடி 1-க்கு இப்போது வழங்கிவரும் அங்குலம் 34-என்னும் இரண்டேமுக்கால் வீசம் இரண்டேமுக்கால்யென்றுமனைக்குரியவன் வீடிகட்டினுல் தன்கைசாணென்றும் முழமென்றும் இவ்விதமாகப் பலவாறுகச்சொல்லியிருப்பதை யோசிக்கில் ஒவ்வாமையால் இப்போது அரசரால்நியமிக்கப்பட்டு தேசங்கள்தோறும் மனைமுதலிய காணிகளுக்கு வழங்கிவருவது சாதிஅடி ஆகையால் அதன் முதன்மையாக வைத்துக்கொண்டு மேற்படி மனையில்எவ்வளவுவிஸ்தாரமுள்ள கட்டடங்கட்டவேண்டுமோ அந்தமனை கட்டடத்துக்குட்பட்ட அகலநீள அளவை கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு இவ்வளவென்று அளவிட்டு ஒன்றுக்கொன்று மாறிய குழித்தொகையை துருவபதமாக வைத்துக்கொண்டு அத்தொகையை எட்டிற்கீந்து மீந்ததொகை மனைக்கு கெற்பகர ஆய்கம்.

முதலாவது.

மனைக்குவந்த குழியை துருவமாக்கி எட்டிற்கழித்து கெற்பகர ஆய்கம்.

இரண்டாவது

| | |
|---|---|
| 8-ல் பெருக்கி 12-ல் கழித்து மிகுந்தசேடம் | ஆதாயம் |

மூன்றாவது.

| | |
|---|---|
| 9-ல் பெருக்கி 10ல் கழித்து மிகுந்தசேடம் | விரையம் |

நான்காவது.

| | |
|---|---|
| 3-ல் பெருக்கி 8-ல் கழித்து மிகுந்தசேடம் | யோனி |

ஐந்தாவது.

| | |
|---|---|
| 8-ல் பெருக்கி 27-ல் கழித்து மிகுந்தசேடம் | நட்சத்திரம் |

ஆறாவது.

| | |
|---|---|
| 4-ல் பெருக்கி 30-ல் கழித்து மிகுந்தசேடம் | திதி |

9-ல் பெருக்கி 7-ல் கழித்து மிகுந்தசேடம் எட்டாவது. பாரம்

7-ல் பெருக்கி 12-ல் கழித்து மிகுந்தசேடம் ஒன்பதாவது. ராசி

4-ல் பெருக்கி 4-ல் கழித்து மிகுந்தசேடம் பத்தாவது. வமிசம்

4-ல் பெருக்கி 9-ல் கழித்து மிகுந்தசேடம் பதினோராவது. அமிசம்

20-ல் பெருக்கி 100-ல் கழித்து மிகுந்தசேடம் வயிறு

ஆக பொருத்தம் 11 க்கு

ஆகாயமீராமற்போனால் 8-வைத்துக்கொள்ளவும்
ஆகாயமீராமற்போனால் 12-வைத்துக்கொள்ளவும்
விரையமீராமற்போனால் 10-வைத்துக்கொள்ளவும்
யோனிமீராமற்போனால் 8-வைத்துக்கொள்ளவும்
நாள்மீராமற்போனால் 27-வைத்துக்கொள்ளவும்
திதிமீராமற்போனால் 30-வைத்துக்கொள்ளவும்
வாரமீராமற்போனால் 7-வைத்துக்கொள்ளவும்
இராசிமீராமற்போனால் 12-வைத்துக்கொள்ளவும்
வமிசமீராமற்போனால் 4-வைத்துக்கொள்ளவும்
அங்கிசமீராமற்போனால் 9-வைத்துக்கொள்ளவும்
வயதுமீராமற்போனால் 100-வைத்துக்கொள்ளவும்

ஆகாயம் அதிகப்பட்டு விரையம் குறைவாயிருந்தால் வீட்டுக்குடையவன் தனவானவான்.

ஆகாயங் குறைவாயிருந்து விரைவதிகமாயிருந்தால் தரித்திரனவான் ஆகாயமும் விரையமும் சரியாயிருக்கில் சமனாயிருக்கும்.

| | |
|---|---|
| 1-வந்தால் துருவசாயம் | இந்திரன் |
| 2-வந்தால் கர்மாயம் | அக்கினி |
| 3-வந்தால் சிம்மாயம் | யமன் |
| 4-வந்தால் சிவனாயம் | நிருதி |
| 5-வந்தால் ரிஷபாயம் | வருணன் |
| 6-வந்தால் கானாயம் | வாயுவு |
| 7-வந்தால் கெசாயம் | குபேரன் |
| 8-வந்தால் காகாயம் | ஈசானியம் |

துவசாயத்துக்கு வடக்கே கட்டலாம்.

சிம்மாயத்துக்கும் கெசாயத்துக்கும் மேற்கேகட்டக்கூடாது.

ரிஷபாயமேற்கேயல்லாமல் மற்ற விடங்களில் கட்டக்கூடாது.

துவசாயம் அக்கினிமூலையில் கட்டக்கூடாது.

மற்ற எந்த திக்கிலுங் கட்டக்கூடாது.

மற்ற எந்தத் திக்கிலே கட்டியிருக்கிறதோ அந்தப் பிரகாரமேயிருக்கலாம் மற்றொருவிடங்களிலுங் கட்டக்கூடாது.

துவபாயம் ரிஷபாயம் சிம்மாயம் பிராமணனுக்கும் க்ஷத்திரியாளுக்குமாகும்.

கெசாயம் ரிஷபம் வைசியர்களுக்கும் சூத்திரர்களுக்குமாகும் துவசாயம் நல்லபுண்ணியவானவான்.

தூமாயம் மிருத்துபிருதம்
சிம்மாயம் விஷப்பிரதம்
சிவநாயம் ரோகப்பிரதம்
ரிஷபாயம் இராட்சதபிரதம்
கெசாதத்துக்கு சுகப்பிரதம்
காகாயத்துக்கு ரிஷபலம்

கானகாயத்துக்கும் இந்த ஆயங்களில் குணந்தெரிவதற்கு ஆயங்கள் நிண்ணயம்பண்ணும்போது ஒரு அங்குசமானல் பூரணயுள்ள பலன் அறியவும் க்ஷேமமாயிருந்தால் சமபலனயிருக்கும் அங்குலம் குறைவாயிருந்தால் குணஸ்தனென்றறியவும் இந்த ஆயங்களின் குணங்கள் தெரிந்துகொள்வதற்கு விபரம்.

திதிபலன், தூமாயத்துக்கு ருணம் 6-சிம்மாயத்துக்கு ருணம்-1 சிவனயத்துக்கு ருணம் 4 ரிஷபாயத்துக்கு ருணம்-7 கெஜாயத்துக்கு ருணம்-5 காகாசத்துக்கு ருணம்-8.

இந்த ஆயங்களும் குணங்களும் யேற்றகுறைவில்லை.

அமாவாசி அதற்கு மறுநாள் பரத்தை மதுகப்புரத்தம் சவுத்தி நவமி சதுர்த்தி இம்மூன்றும் வீட்டைப் பாழுபண்ணும் அமாவாசி கர்த்தனுக்கு மித்துருத்து உபாயமுண்டாகும்.

முதலாவது-ஆகாயம்-வெண்பா.

அஞ்சிலரசாள்வ ராறிவருந்துயர
மிஞ்சியமூன்றென்றும் மேவியாம்-துஞ்சாமல்
நாலெட்டிரண்டு நாசமாம்மனைக்கு
மேலெட்டுடன்சொல்ல வீதி.

இ-ள். கெற்பநிலையறியும்படி எசமானுடையசாணல் நாலுசாண் நீளக்கோலால் கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு கோணமலளந்து இரண்டு தொகையுங் குழிமாறிவந்த தொகையை எட்டிற் கழிக்க ஐந்து வந்தால் சுபகெற்பம் அதற்குச் சகலகாரியமுஞ் செய்து பொருந்தி நடக்கும் ஆறுவந்தால் காக்கை கெற்பம் அது மத்திபம் நீச்சனுக்கிருக்கவேண்டியது ஒன்றுவந்தால் கருடகெற்பம் நால்வகைச்சாதிக்கும் பொருந்தியிருக்கும் மூன்றுவந்தால் சிங்கசெற்பம் அது உத்தமம் ஏழுவந்தால் கெசகெற்பம் அதுசுபம் இரண்டுவந்தால் புறு கெற்பம் அதுமத்திபம் வேடனுக்காம் நான்கு வந்தால் சிவானகெற்பம் அதுமத்திபம் குறவர் லம்பாடிகட்காகும் எட்டுவந்தால் கழுதை கெற்பம் அதுமத்திபம் மனைமுடியாது நல்லது ஒருவேளை முடிந்தாலும் அந்தமனை பாழடைந்துபோகும் அது தொம்பரவாள் குப்பைக்காரர்களுக்கும்மயில்மான் இவைகளுக்குப்பொருந்திய மனையாகும்.

| | |
|---|---|
| சிங்கத்தில் | பந்துசேர்தல் |
| கன்னியில் | ரோகம் |
| துலாத்தில் | சௌக்கியம் |
| விருச்சிகத்தில் | அர்த்தவிருத்தி |
| தனுசில் | அர்த்தஆனி |
| மகரம் | தானியவிர்த்தி |
| கும்பத்தில் | இரத்னலாபம் |
| மீனம் | பயம் |

இவைகளைக்கண்டு வீடுகட்ட ஆரம்பஞ்செய்யவேண்டிய திதிபலன்.

வேறு.

நெறியுஞ்சுக்கிலபட்சமது நேருசப்பிரத்தமாதம்
செரியுங்கிருஷ்ணபட்சமது சிந்தவிரவிபோன தின்பின்
பெருகுந்திரிகைமுதலாம் பேசும்பௌர்ணமிதொடங்கி
உருகுஞ்சத்தமிதன்வாக்கு மோங்குஞ்சுக்கிலபக்ஷமதே.

கலிவிருத்தம்.

மற்றநாள்கிருஷ்ண பட்சமுதலாகா
உற்றபிரதிமை யோங்கும்சஷ்டிகளும்
முற்றுமேகாதசியிது கணத்தை
பெற்றதிதிபலன் போர்த்தவாணியே. 227

வாரிவிட்டார்விதியை சத்தமிகளும்
ஓரிட்டுதுவாதசி பத்திரைதிதி
நேரிட்டதிதிகிகழ் பவன்பத்தனம்
கூறிட்டமயன் குறித்ததுவுண்மையே. 228

தக்கவட்டமி தாக்குந்திரிதிகை
பக்கமேதிரை யோதசிதன்முதல்
மக்கண்சேய ததியாமிவை
சிக்குஞ்சுபமெனச் செய்தனர்சிற்பரே. 229

சீர்பெருஞ்சவுத்தி நவமிகளு
தார்சொரியுஞ் சதுர்த்தசிதன்முதல்
ஏர்பெருமருக்கத் தியின்பலன்
போர்செறிமிருத்து வின்பயமதே. 230

சொல்லும்பஞ்சமி தோற்றிந்தாமிதான்
வெல்லும்பௌர்ணமி வேண்டும்பூரண திதி
புல்லுமிதின்பலன் போற்றும்செயப்பிரதம்
அல்லுமலாசி யத்தவானியே. 231

சுக்கிலபட்சம் சுப்பிரத கிருஷ்ணபட்சம் அமாவாசிபோன திரிதிகைமுதல் பௌர்ணமிபோன சத்தமிவரையில் சுக்கிலபட்சமாகும் மற்றநாள்கள் கிருஷ்ணபட்சமாகாது பிரதமைசஷ்டி ஏகாதசி இவைகள் நத்தைதிதி இதன்பலன் அர்த்த ஆனி விதியை சத்தமி துவாதசி

என்னவேயெட்டினி லிலக்குமிவாசமாம்
பன்னியதவத்திற் பாலராவிபோம்
முன்னியதசமதி லுத்தமருக்
கின்னுமென்றோனெனக் கெடுத்துரைத்ததே.

இ-ள். எட்டுவந்தால் இலட்சுமி வாசமாயிருப்பாள் ஒன்பது வந்தால் புத்திரகாசமாகும் பத்துவந்தால் உத்தமம்-எ-று. 7

இந்த ஆதாயத்திற்கும் விரையத்திற்கும் விபரம் ஆதாயத்திற்கு விரையம் அதிகப்படில் கெடுதி விரையத்திற்கு ஆதாயம் அதிகப்படில் நன்மை ஆதாயமும் விரையமுஞ் சமனாயிருக்கில் சுபப்பலன்.

### ௪-வது யோனிப்பொருத்தம்.

உரைத்தபடி யுரைத்துமூன்றினிற்
பொருத்தமாந்திரை யட்டமத்திற்போச்சு
விருத்தியாய்நின்றது விளக்கும்யோனியாம்
பொருத்திடும்வெளியினைப் போன்றகன்னியே.

இ-ள். மூன் ஆதாயத்தை மூன்றுபெருக்கி எட்டுக்குள்ளாக நின்றது இஷ்டயோனியென் றறியவும்-எ-று. 8

சொற்றதிலேலமாமன சஞ்சமாரத்தியப்
பற்றிரண்டதனில் திண்ணுன்பாமே
சுத்தமூன்றினிற் சவந்துலங்குகாவினிற்
கத்துசுவானம்பிணி வாட்டுமென்பாரே.

இ-ள். யோனி ஒன்றுமிருந்தால் இந்திரன்கிழக்கு அது கெருட யோனி எந்நாளும் குறைவில்லாப்பாக்கியமுண்டாகும் இரண்டு மிருந்தால் தென்கிழக்கு அக்கினி அது பூனையோனி அதற்குக்கல கம் மூன்றுமிருந்தால் தெற்குயமன் அது சிங்கயோனி சயமபொ ருந்தும் நான்குமிருந்தால் தென்மேற்கு நிருதி சுவானயோனி எந் நாளும் பிணியாயிருக்கும்-எ-று. 9

காட்டியவைந்தினிற் கற்பகனதனம்
பூட்டியவாறினிற் பொலியும்பொக்கிஷம்
கூட்டியேவேழ்சுகங் குலவுநற்சுகம்
நீட்டியவாயகமெட்டினிஷ்பலம்.

இ-ள். ஐந்துக்கு மேற்கு வருணன் சர்ப்பயோனி கனம்பொ ருந்திய தனம்பெருகும் ஆறுவதுமாகில் வடமேற்குமாயும் எலி யோனி எல்லாப்பொருளும் அற்று நிர்ப்பாக்கியமும் ஏழுவருமாகில் வடக்கு குபேரன் யானையோனி அந்தகுடும்பம் சுபேட்சமாயிருக் கும் எட்டுமாகில் வடக்கு ஈசானியன் முதல்யோனி அதற்கு ஒன்று மில்லாமல் நிர்ப்பாக்கியமாய்விடும்-எ-று. 10

### 5-வது நட்சத்திரபலன்.

ரோகணி ரேவதி பூசம் அஸ்தம் மிருகசிரம் அனுஷம் உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி இவை 9-ம் உத்தமம்.

சித்திரை புனர்பூசம் மூலம் அவிட்டம் சுவாதி சதயம் இவை 9-ம் பொதுமிசிரம்.

அசுவனி பரணி திருவாதிரை ஆயில்யம் சித்திரை பூசம்விசாகம் கேட்டை பூராடம் திருவோணம் பூரட்டாதி இப்பன்னிரண்டும் மத்திபம் ஆகாவாம்.

### 6-வது திதிபலன்.

இதில் பூர்வபட்சம் நன்று அமரபட்சம் மத்திபம் அஷ்டமி உவா இருத்தை மத்திபத்திலும் மத்திபம்.

### 7-வது வாரப்பொருத்தம்.

சாருமுன் வரவத் தனித்தவொளிபதி
லோவபெருக்கு யெழுக்கிந்தமிதியை
வாரமாந்தினகரன் வாக்குரோதமே
சேரவேசோமனிற் செழிப்புண்டாமே.

இ-ள். மூன் ஆதாரத்தை ஒன்பதிற்பெருக்கிஎழுக்கிந்தமிகுதி வாரம் ஒன்றுக்கு ஆதிவாரம் நின்றால் அந்தமனையில் எக்காளுங் குரோதமுண்டாகும் இரண்டிற்குச் சோமவாரம் நின்றால் நாளுக்கு நாள் செலவழிந்து அதிக சந்தோஷமுண்டாகும்-எ-று. 11

ஆருமாங்காரக னர்த்தநாசமாம்
சேகரம்புந்தியிற் சேர்சவுக்கியம்
வாரகமாங்குருவினின் மன்னனும்புத்திரர்
சோகரீசங்கனிற் சொல்லுநன்மையே.

இ-ள் மூன்றில் மங்களவாரம் நின்றால் பழம்பொருளும் புதுப்பொருளுமல்லால் அந்துப்போகும் நாலில் புதவாரம் நின்றால் அதனால் லட்சுமி வாசமாயிருப்பாள் ஐந்தில் குருவாரநின்றால் அதனால் புத்திரசம்பத்துண்டா யிருந்தும் ஆறில் சுக்கிரவாரநின்றால் அதனால் சகலகாரியமும் நன்மையாய் நடக்கும் ஏழில் சனிவாரம்நின்றால் கலகமும் சோரபயமுமுண்டாகும்-எ-று 12

### 8-வது ராசிப்பொருத்தம்.

ரிஷபம் சிங்கம் விருச்சிகம் கும்பம் இந்த நான்கும் ஸ்திரராசி இவைகள் நன்மையைத்தரும்.

மிதுனம் கன்னி தனுசு மீனம் இந்த நான்கும் உபயராசி உத்தமம். மேஷம கர்க்கடகம் துலாம் மகரம் இவை நான்கும் சர ராசியினும் மத்திபம்.

### 9-வது சாதிகள் பொருத்தம்.

பிராமணன் பொது க்ஷத்திரியன் நன்று வைசியன் நன்று சூத்திரன் மத்திபம்.

### 10-வது அங்கிஷப்பொருத்தம்.

1-க்கு தடகர அங்குஷம் தீது
2-க்கு சோகரனங்கிஷம் பாக்கியம்
3-க்கு சத்தியங்கிஷம் நன்மையுண்டாகும்
4-க்கு பூஷாங்கிஷம் தானியங்கள் விர்த்தியுண்டு
5-க்கு குரு அங்கிஷம் இராச்சியபரிபாலனமுண்டு
6-க்கு சுக்கிர அங்கிஷம் யோகபலன்
7-க்கு சனி அங்கிஷம் நோயுண்டாகும் தீது
8-க்கு இராகு அங்கிஷம் நோயுண்டாகும் தரித்திரம் தீது
9-க்கு கேது அங்கிஷம் சகலமும் நன்மை.

### 11-வது மனைக்கு வயது.

60-வருஷத்துக்கு மேற்பட்டதொகை நன்மை 60-க்குக் குறையில் அந்த மனை கொள்ளாது இவைகளில் ஆயுசும் சிலவுவரினும் ஆக்கம் சிறுதது அறிவுபெருகினும் தங்கிஷநாள் பக்கம் யோனிவாரம் ராசிகொள்ளாதவைகளிலும் ஆயுசுகுறையினும் மனைக்காகாது.

### பூதபலன்.

மேற்சொல்லிய துருவத்தை 3-ல் பெருக்கி 5-ல் கொடுக்க மிகுந்தால் பூதத்துவம் இதன்பலன் பாக்கிய பிரத்தம்.

2-மிகுந்தால் உலகத்துவம் இதன்பலன் சந்தோஷம்
3-மிகுந்தால் அக்கினிதத்துவம் இதன்பலன் சந்தோஷம்
4-மிகுக்தால் வாய்வுதத்துவம் இதன்பலன் மிருத்துவுபயம்
5-மிகுந்தால் ஆகாசதத்துவம் இதன்பலன் தரித்திரம்.

### சூலநிர்ணயம்.

மேற்படி துருவபதத்துகையை 9-ல் பெருக்கி 12-ல் கொடுக்க மிகுந்தால் மேஷம் 2-ல்மிகுந்தால் ரிஷபம் 3-மிகுந்தால் மிதுனம் 7-மிகுக்தால் துலாம் 8-மிகுந்தால் விருச்சிகம் 9-மிகுந்தால் தனுசு 3-மிகுந்தால் கடகம் 5-மிகுந்தால் சிங்கம் 6-மிகுந்தால் கன்னி 10-மிகுந்தால் மகரம் 11-மிகுந்தால் கும்பம் 12-மிகுந்தால் மீனம் இதில் எந்தத்தொகைவருமோ அந்தத்தொகையை நாலுபாதமுள்ள நட்சத்திரத்துக்குப் பிறாசியாகும்.

சிற்பசாஸ்திரமென்னும் மனையடி சாஸ்திரம்

முற்றிற்று.

கடவுள் துணை.

# மனையடி சாஸ்திரத்தின் அட்டவணை


| பெயர். | பக்கம். |
|---|---|
| அ | |
| அலிமரம் | 22 |
| அருக்கனிலை | 36 |
| அட்டதிக்குலட்சணம் | 72 |
| அங்கிஷப்பொருத்தம் | 91 |
| ஆ | |
| ஆண்மரம் | 23 |
| இ | |
| இதுவும் வளவுகட்டி யிருக்கத் தான லட்சணம் | 6 |
| இராசிவிசேஷம் | 36 |
| இராகுகாலம் | 40 |
| இராசகுளிகன் | ,, |
| இராவிழிப்புராசி | 41 |
| இராசிபலன் | 57 |
| இராகுசாரபலன் | 64 |
| இலக்கின சுபக்கிரக குரூர நிர்ணயம் | 75 |
| இவ்வாரங்களுக்கு கரணம் | 78 |
| இராசிப்பொருத்தம் | 91 |
| உ | |
| உதயராசி | 40 |
| எ | |
| எந்த மாதங்களில் வாசற்கால் வைத்தாலும் திசை யறிந்து வைக்க | 44 |
| ஒ | |
| ஒருமனையில் பாகத்துக்குட்பட்டு வீடு கட்டுவதற்கு லட்சணமாம் | 83 |
| க | |
| கடக்கால் சங்குஸ்தாபனம் | 14 |
| கதவுக்கு கெம்புமுளை ஏடுகளுக்கிரட்டை துவார | 22 |
| கதவுகளிலக்கணம் | 25 |
| கரணபலன் | 61 |
| கயிறுபிடித்தளக்குமிலட்சண | 70 |
| கரணபலன் | 76 |
| கன்னிகாசக்கர | 81 |
| கா | |
| கால்வைக்க ஏற்றநாள் இலக்கண | |
| கி | |
| கிரகாரம்பஞ்செய்ய முக்கியநட்சத்திரங்கள் | 11 |
| கிணறுவெட்டகரைகட்ட | 34 |
| கிரகபாதை | 40 |
| கிரகப்பிரவேசம் | 41 |
| கிணரெடுக்குமிலட்சணம் | 54 |
| கிராமக்ஷேத்திர நிர்ணய ராசகேந்திரசொரூபம் | 68 |
| கு | |
| குழியில் நீரும் பூவும் விடுமிலக்கணம் | 20 |
| குழியில் சலம்விடுமிலக்க | 29 |
| குடிபோகுமாதங்கள் | 57 |
| குசசாரம் | 76 |
| குரூரசாரபலன் | 63 |
| குழிகல்லி மண்ணெடுத்துபார்க்குமிலக்கணம் | 70 |
| கூ | |
| கூரைக்கால்கட்டல் முகூர்த்தஞ்செய்தல் | 20 |
| கெ | |
| கெற்பம்வைக்கப்பேழை | 18 |
| கோ | |
| கோயில் கோபுரம் கூட்டம் மனையளவு | 16 |
| கோளச்சக்கரநிலை | 70 |
| ச | |
| சனற்குமாரவாஸ்து சொல்லுகிற ஆரம்பவிதி | 9 |
| சங்குஸ்தாபனம் | 17 |
| சாராசி | 39 |
| சமையமைந்துக்கும் வாளது அதிகாரம் | 48 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| சங்குஸ்தாபிதம் | 48 |
| சங்குசெய்மரம் | 46 |
| சகுனம் | 50 |
| சனிசாரபலன் | 84 |
| சலதாரைலட்ச | 72 |
| சங்குஸ்தாபனலட்சம் | ,, |
| சங்குதாபனத்திற்கு நட்சத்தி | ,, |
| **சா** | |
| சாயல்மாதவிலக்கம் | 50 |
| சாதிகள்பொருத்தம் | 91 |
| **சி** | |
| சிற்பாசாரியனிலக்கணம் | 14 |
| **சு** | |
| சுக்கிரன்பாடு | 9 |
| சுபகாரியங்கள்செய்ய 3-வித நட்சத்திரங்கள் | 10 |
| சுக்கிரபலன் | 32 |
| சுக்கிரசாரபலன் | 64 |
| சுவாகனமுயர்வுலட்சணம் | 75 |
| சுபகாரியங்கள் செய்யக்கூடாத நாட்கள் | 84 |
| **சூ** | |
| சூரியசாரம் | 61 |
| சூசிகாசங்காந்திநிர்ணயம் | 76 |
| சூலநிர்ணயம் | 62 |
| **செ** | |
| சென்மநட்சத்திரம் | 77 |
| **சே** | |
| சேத்திர ஆரூடம் | 69 |
| **தா** | |
| தானும் தன்பிள்ளை முதலானவர்கள் வாசஞ்செய்யு மிலக்கணம் | 6 |
| **தி** | |
| தினப்பொருத்தம் | 8 |
| திசையோனிலை | 36 |
| திசையறிந்து வாசக்கால்வைக்கும் விதி | 44 |
| திதிபலன் | 36 |
| திதிகளுக்கு ஆகாதராசி | 96 |
| திதிகள்பலன் | 72 |
| திதிபலன் | 88 |
| **து** | |
| துரவுகளெடுக்க அகலநீளம் சுற்று முழமறிய | 34 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| **தே** | |
| தேவர்முதல் நான்கு சாதிக்குச் செய்யாமல் | 49 |
| தேங்காய்ச்சகுனம் | 51 |
| **ந** | |
| நல்லநாள் முகூர்த்தங்கண்டு மனை நடுவில் செல்லிப்பார்க்கு மிலக்கணம் | 21 |
| நட்சத்திர நன்மைதீமை | 29 |
| நட்சத்திரம் மிருகம் பட்சி மரம் கணக்கு | 35 |
| நட்சத்திரியாச்சியம் | 39 |
| நவக்கிரக பலன்களறிந்து வாசற்கால் வைத்தல் | 95 |
| நட்சத்திரபலன் | 60 |
| நட்சத்திரபலன் | 75 |
| நட்சத்திரத்திற்கும் யோகத்திற்கும் அமிசை | 79 |
| நட்சத்திரபலன் | 78 |
| நட்சத்திரத்திற்கும் யோகத்திற்கும் தாராபலன் | 79 |
| நட்சத்திரபலன் | 19 |
| **நா** | |
| நான்குவருணத்தாருக்கும் பூநூல் கொள்ளும்விதம் | 19 |
| நால்வகை வருணத்தாருக்கும் வாசஞ்செய்ய சார்புமனைலட் | 5 |
| நாமநட்சத்திர எழுத்துக்கள் | 35 |
| நான்குவருணத்தார்கிரகம் | 5 |
| **த** | |
| தலையற்ற நாள் அசையற்ற நாள் காலற்றநாள் | 9 |
| தளமட்டம் | 20 |
| **நி** | |
| நிலநீளம்வைக்கும்விதி | 25 |
| **ப** | |
| பஞ்சகோள்நின்றதோஷம் | 38 |
| பகற்குளிகன் | 40 |
| **பா** | |
| பார்வையினளவு | 40 |
| **பி** | |
| பிறந்தநாளும் வாரமுங்கூடிய ஆகநாள் | 8 |
| பிரகஸ்பதிசுக்ரனஸ்தமானபலன் | 65 |

## மனையடி சாஸ்திரத்தின் அட்டவணை


| பெயர். | பக்கம். |
|---|---|
| **பு** | |
| புற்றிலட்சணம் | 76 |
| புட்பம்விடுமிலட்சணம் | 72 |
| **பூ** | |
| பூமிசல்லியம் | 41 |
| பூமிசோதித்துவீடுகட்ட | 62 |
| பூதபலன் | ,, |
| **பெ** | |
| பெண்மரம் | 23 |
| **ம** | |
| மனைக்கேகும்போதுசகுனம் | 3 |
| மனையில்நிற்கையில்சகுனம் | 4 |
| மனைவுயர்வுதாழ்வுலட்சணம் | 5 |
| மனைலட்சணம் | ,, |
| மனைகோல அவர்கள் ராசிப்பொருத்தம் | 7 |
| மனைகோல ஆகாநாள் | ,, |
| மனைகோலுமாதங்கள் | ,, |
| மனைகோலவும் குடிபுகவும் ஆகாமாதங்கள் | ,, |
| மனைகோலுகையில் கடைக்கால் சங்குஸ்தாபனம் | 14 |
| மடசுத்தம் | 37 |
| மனையில் மண்ணின்சுவை லட்சணம் | 18 |
| மனைகோலுகையிலக்கின முகூர்த்தம் | 2 |
| மனையில்புற்றெழுலட்சண | 54 |
| மனையிலேலும்புருக்கில்குண | 71 |
| மண்வெட்டிமுழக்கோலகயிற்ச | 74 |
| மரங்கள்வெட்டத்திதி கியா | 80 |
| மனைக்கு வந்த வாரத்தின் மேல் நேத்திரமறிவது | 34 |
| மனைக்கு பால் யவ்வன மூப்புமா பருவமறிய | 89 |
| மனைக்கு ஆயுசும் வயதுவரவு செலவு லட்சணம் | 85 |
| மறுவாடிமூலைநற்குறி அற் | 11 |
| மரத்தில் நன்மை தீமை யறிந்த உத்திரமனைக்கும்மி | 21 |
| மரத்தில் ஆண்பெண் | 22 |
| மனைகள் அகலநீளத்துக்கு வீட்டுக்கள் அறைகள் கூடங்கள் முதலிய வைப்பதற்கு லட்சணம் | 31 |
| **மா** | |
| மாதங்களில் கரிநாள்வரும் தேதிகள் | 38 |
| மாதபலன் | 56 |
| மாதங்களின் கர்ப்பகெதிலட்சணம் | 77 |
| மாதமாதஞ் சூரியகிருசி | 80 |
| மாதங்களில்கெர்ப்பமோடுவ | 10 |
| மாமிசத்தகல் மறுவாசல்தோ | 20 |
| மாமிசைத்தல் | |
| **மு** | |
| முவடுவைக்க | 7 |
| முழக்கோலளவு | 15 |
| முழக்கோல்மரங்கள் | 16 |
| முனைசுடர்வு மளவுமுனைக்கயிறு கால் | 16 |
| முகடுமுத்திமாறுகயிறு | 19 |
| முகூர்த்தம் | 46 |
| முழக்கோல் | ,, |
| **மூ** | |
| மூலைக்கால்நாட்ட | 20 |
| **மே** | |
| மேற்கோள்யோகினிநிலை | 9 |
| மேற்சொல்லிய குழியில் சாயரட்சை நீர்விட்டுப்பார்த்தால் | 14 |
| மேற்படிகுழியில் எடுத்தமண்ணை யடைத்தால் | ,, |
| மேற்படியளவு நூற்கயிறு | 17 |
| **ல** | |
| லக்கினத்தியாச்சியம் | 39 |
| **வா** | |
| வாஸ்துபுருஷன்கிடக்கை | 11 |
| வாசல் | 11 |
| வாஸ்து எழுந்திருக்குஞ் சாமம் தேதி நாழிகை போசனம் | ,, |
| வாசற்கால்வைக்கும்விதி | 22 |
| வாஸ்துபுருஷ நிலையறிந்து வாசற்கால் விடும்விதி | 29 |
| வாஸ்துவீட்டின்பலன் | 27 |
| வாஸ்துக்குராசிவீடு | ,, |
| வாஸ்துவினிருப்பு | 28 |
| வாஸ்து எழுந்திருக்கு | 29 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| வாரவிசேஷம் | 37 |
| வாரத்தியாச்சியம் | 29 |
| வாரகுளிகன் | 40 |
| வாஸ்துவிழிநோக்கி 28—பங்கில் முகூர்த்தஞ் | 47 |
| வாசல்சூரியன் | 54 |
| வாரபலன் | 60 |
| வாரபல | 75 |
| வாசற்படிவைக்குமிலட்சண | 77 |
| வாரபலன் | 98 |
| விஷ்டிதோஷம் | 37 |
| விசாலலக்ஷணம் | 78 |
| **வீ** | |
| வீடுகட்டுவதற்குதவாமரம் | 24 |
| வீட்டுக்கு அவர்கள் கூடங்கள் வாசல்முதலியவை வைத்துக்கட்டுவதற்கு அடியளவுநீளம் | 43 |
| வீடுகளுக்கு தெரு வாசற்கால் வைக்குமிலக்கணம் | 43 |
| **வா** | |
| வாரப்பொரும் | 91 |
| **யோ** | |
| யோகினியநிய | 6 |
| யோகபலன் | 60 |
| யோகபலன் | 79 |
| யோனிப்பொருத்தம் | 90 |
| **ஸ்** | |
| ஸ்திராராசி | 39 |
| ஸ்திரலக்கினராசிகள்பலன் | 95 |


மனையடி சாஸ்திரத்தின் அட்டவணை

முற்றிற்று.